(FOR TRAINING PURPOSE ONLY)
(NOT FOR SALE)

# பொதுத் தகவல்
# அலுவலர்களுக்கான வழிகாட்டி

கருவூலம் மற்றும் கணக்குத் துறை
சென்னை–15

திரு. **ச. முனியநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
கருவூலம் மற்றும் கணக்குத் துறை

பனகல் மாளிகை, 2-வது தளம்,
சைதாப்பேட்டை, சென்னை-15

நாள் 7.04.2016

## வாழ்த்துரை

"தகவல் அறியும் உரிமைச் சட்டம்" என்பது மக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை உரிமையுடன் அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களிடம் இருந்து பெறும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய "தகவல் யுகத்தில்" தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடத்தே நிதம் அதிகரித்து வருவது அனைவரும் அறிந்ததே. இன்றைய தொழில்நுட்ப சூழலில், பொதுத் தகவல் அலுவலர்கள்/மேல்முறையீட்டு அலுவலர்கள் இச்சட்டம் குறித்த போதிய அறிவு பெற்றிருப்பது மிகவும் அவசியமாகிறது.

பொதுமக்களுக்கான தகவல்களை வழங்குவதில் அனைத்துப் பொதுத் தகவல் அலுவலர்கள்/மேல் முறையீட்டு அலுவலர்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை அறிந்திட திரு. ச. இராஜேந்திரன், கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், தஞ்சாவூர் அவர்கள் தொகுத்துள்ள "பொதுத்தகவல் அலுவலர்களுக்கான வழிகாட்டி" என்ற இந்நூல் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

இந்நூலில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கிய சட்டப் பிரிவுகளின் சுருக்கமும், வினா-விடை அடிப்படையிலான பிரிவும் இச்சட்டத்தின் அடிப்படையை நன்கு அறிந்துகொள்ள பயன்படும் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

திரு. ச. இரஜேந்திரன் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 குறித்து அரசு அலுவலர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக 2014 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று "மாண்புமிகு முதலமைச்சரின் நல்ஆளுமை விருது" (Hon'ble Chief Minister's Best Practices Award) மற்றும் ரூ.2 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. இது இவரின் முயற்சியில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். அன்னாரின் பணியினை சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்திடவும், மென்மேலும் பல சிறப்புகளை பெற்றிடவும் என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்...

7/4/16

**(ச. முனியநாதன்)**

டாக்டர். **என். சுப்பையன்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

நாள் 28.04.2016

# வாழ்த்துரை

‘‘அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது’’ என்பது ஔவையின் வாக்கு. மனிதராய்ப் பிறந்த அனைவரும் எல்லாவகையான உரிமைகளும் பெறத்தக்கவர்கள். அவ்வகையில் அனைத்துக் குடிமக்களும் தங்களுக்கு அவசியமான அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்ள உரிமை உள்ளவர்கள். இக்குறிக்கோளை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டதுதான் தகவல் அறியும் உரிமைச் சட்டம். இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், சாதாரண குடிமக்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை எளிதில் அறிந்து கொள்ளவும், மேலும் தகவல் வழங்கும் அலுவலர்கள் அவசியமான தகவல்களை தெரிவிக்கவும் கடமைப்பட்டவர்கள்.

அவர்களுக்கான தகவல்களை வழங்குவதில் அனைத்துப் பொதுத் தகவல் அலுவலர்களும் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை திரு. ச. இராஜேந்திரன், கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், தஞ்சாவூர் அவர்கள் முனைந்து தொகுத்தளித்த ‘‘பொதுத் தகவல் அலுவலர்களுக்கான வழிகாட்டி’’ என்ற இந்நூல் முறைப்படுத்தியிருக்கின்றது.

இதை அனைத்து பொதுத்தகவல் அலுவலர்களும் ‘‘கசடறக் கற்று’’ தெளிந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சிறந்த முறையில் வழிகாட்டி செயல்முறைகள் மற்றும் தீர்ப்புகளை தொகுத்துள்ள திரு. ச. இராஜேந்திரன் அவர்களின் முயற்சியினை பாராட்டுகிறேன். அவரது பணி தொடர வாழ்த்துகிறேன்.

*வாழ்த்துக்களுடன்...*

**(என். சுப்பையன்)**

# முகவுரை

தகவல் பெறும் உரிமைச் சட்டம், ஓரிரண்டு மாதங்களிலோ அல்லது ஓரிரண்டு ஆண்டுகளிலோ முடிவு செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட சட்டம் அல்ல. சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் சிந்தனையின் விளைவாகவும், பல்வேறு நீதிமன்றங்களின் கருத்தோட்டங்களின் அடிப்படையிலும், சமூக ஆர்வலர்கள், சமூக சிந்தனையாளர்கள் மற்றும் சீர்திருத்தவாதிகள் ஆகியோர் நடத்திய பல்வேறு போராட்டங்களின் அடிப்படையிலும்தான் இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் செயல்பாட்டில் ஒரு அம்சமாக தகவல் ஆணையங்களில் நடைபெற்ற சில முக்கிய வழக்குகளின் தீர்ப்பு விபரங்களைச் சுருக்கமாக தொகுத்து பொதுத்தகவல் அலுவலர்களுக்கு வழங்குவதில் பெருமை கொள்கிறேன். இத்தீர்ப்புகளை தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் இணையதளமான www.tnsic.gov.in–லிருந்தும் மற்றும் மத்திய தகவல் ஆணையத்தின் இணைய தளமான www.cic.gov.in–லிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

முதல் பகுதியில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி செய்யத்தக்கனவும், செய்யத்தகாதனவும் எவையெவை என வகுக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுத் தகவல் அலுவலர்கள் பராமரிக்க வேண்டிய முக்கிய படிவங்களும் மற்றும் பொதுக் குறிப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதியில் பொதுத் தகவல் அலுவலர் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய சட்டப் பிரிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.


மூன்றாவது பகுதியில் விண்ணப்பங்கள் வாயிலாக தொடுக்கப்படும் முக்கிய வினாக்களும் அதற்கான விடைகளும் சான்றுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

நான்காவது பகுதியில் தகவல் ஆணையங்கள் வழங்கிய முக்கிய தீர்ப்புரைகள் சட்டப் பிரிவு வாரியாக தொகுக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது பகுதியில் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு பயனளிக்கும் வகையில் மாதிரிக் கடிதங்கள் வரையப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் தகவல் பெறும் உரிமை சட்டத்தினை பொதுத் தகவல் அலுவலர்கள் எளிதாக அறிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலினை வேறு எவற்றிற்காகவும் மேற்கோள் காட்டி பயன்படுத்தக் கூடாது.

**ச.இராஜேந்திரன்,**
கருவூல அலுவலர்,
தஞ்சாவூர்.



# பொதுக் குறிப்புகள்

# பொதுக் குறிப்புகள்

1. பொதுத் தகவல் அலுவலர், அலுவலகத்தில் இல்லாதபோது வரப்பெறும் அஞ்சல்களை பெறுவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் இல்லை என்பதற்காக தபால்களை மனுதாரருக்கு திருப்பி அனுப்பக்கூடாது. தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பங்களை வாங்க மறுப்பது இச்சட்டத்தின்படி குற்றமாகும்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்களுக்கு உரிய ஒப்புகையை கீழ்க்கண்டவாறு மனுதாரருக்கு அளிக்க வேண்டும். (அரசாணை நிலை எண் 89, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (A) துறை, நாள் 13.05.1999)

**FORMAT OF THE ACKNOWLEDGEMENT**

(TO BE HANDED OVER TO THE APPLICANT)

1. Name and address of the petitioner :
2. Addressed to whom :
3. Number and Date of receipt of petition for future reference :
4. Name of the Department/Section to which petition referred to for action :

Received :

Signature and Designation :

Date :

Stamp :

/TRUE COPY/

(Sd.)

SUPERINTENDENT.

3. சில விண்ணப்பதாரர்கள் நேரில் விண்ணப்பத்தினை அளிப்பதற்காக அலுவலகத்திற்கு வரக்கூடும். அவ்வாறு வருபவர்கள் பொதுத் தகவல் அலுவலரை எளிதாக அறிந்துகொள்ளும்பொருட்டு "பொதுத் தகவல் அலுவலர்" என்பதைத் தெரிவிக்கும் பெயர்ப் பலகையை பொருத்த வேண்டும்.

4. விண்ணப்பத்துடன் அதன் அஞ்சல் உறையையும் சேர்த்து பராமரிக்க வேண்டும். இது மிகமிக முக்கியமானதாகும்.

5. சில விண்ணப்பதாரர்கள் தங்களது பெயர், அவர்கள் வசிக்கும் ஊரின் பெயர் மற்றும் தொலைபேசி எண் விவரத்தை மட்டுமே குறிப்பிட்டு விண்ணப்பித்திருப்பார்கள். மனுதாரர் அளித்திருக்கும் முகவரி தெளிவாக இல்லாத நிலையில் அவர் கோரிய தகவல்களை தபால் மூலம் அனுப்புவது இயலாத காரியமாகும். இந்நிலையில் அவரது தொலைபேசியின் மூலம் அவரை தொடர்பு கொண்டு அவரது முகவரியை கேட்டுப் பெறலாம். தொலைபேசியில் தொடர்பு கொண்ட விவரத்தை கோப்பில் பதிவு செய்துவைத்துக் கொள்வது நல்லது. (சட்டப் பிரிவு 6(2)).

6. அடுத்து, தபால் முத்திரையை தேதி தெளிவாக தெரியும் வண்ணம் விண்ணப்பத்தில் இடவேண்டும். முத்திரையை அதன் பாதி நீதிமன்ற வில்லையிலும் மீதமுள்ள பாதி விண்ணப்பத்திலும் தெரியும் வண்ணம் இட வேண்டும். (இதன்மூலம் இந்நீதிமன்ற வில்லைகள் மீண்டும் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கலாம்) நீதிமன்ற வில்லையின்மீது கோடிடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

7. ஒரு விண்ணப்பம் பெறப்பட்டவுடன் கீழ்க்கண்டவற்றை சரிபார்க்க வேண்டும்

   1) விண்ணப்பக் கட்டணமாக ரூ.10/-ஐ தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளின்படி செலுத்தியுள்ளரா? (அல்லது)

   2) அரசாணை (நிலை) எண் 1138, பொதுத் துறை, நாள் 14.11.2005ன்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர் குறித்த சான்றினை உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்று இணைத்துள்ளரா?

   3) விண்ணப்பத்தில் கையொப்பமிட்டுள்ளாரா?

   4) பொதுத் தகவல் அலுவலர் அல்லது உதவிப் பொதுத் தகவல் அலுவலருக்கு முகவரியிட்டு விண்ணப்பித்துள்ளரா?

(சிறைக் கைதிகள், ஆதரவற்ற விதவைகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டண விலக்களிக்கப்பு வழங்கப்படவில்லை)

8. ஒவ்வொரு தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பத்திற்கும் பகிர்மான எண் வழங்கப்பட்டு தனித் தனியாக பராமரிக்க வேண்டும்.

9. ஒரே நபர் பல்வேறு விண்ணப்பங்கள் அளித்திருந்தாலும் அவையனைத்தையும் ஒன்றாக ஒரே கோப்பில் பராமரிக்கக் கூடாது

10. மேல்முறையீட்டு விண்ணப்பத்திற்கு தனியாக எண் வழங்கப்பட்டு தனிக் கோப்பாக பராமரிக்க வேண்டும்

11. விண்ணப்பத்தினை தன் பதிவேட்டில் பதிவு செய்தவுடன் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பதிவேட்டிலும் பதிவு செய்திட வேண்டும். இப்பதிவேடு ஒவ்வொரு பொதுத் தகவல் அலுவலராலும் கண்டிப்பாக பராமரிக்க வேண்டிய பதிவேடாகும். மனுக்கள் என்றைக்கு வரப்பட்டன? யார் யாரிடமிருந்து பெறப்பட்டது? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? தகவல் வழங்கப்பட்டதா? வழங்கப்படவில்லையா? என்பதை கண்காணிப்பதற்கான இப்பதிவேட்டினை பராமரிப்பதின் மூலம் பொதுத் தகவல் அலுவலருடைய பணி எளிதாகும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்நடைமுறை மேல்முறையீட்டு அலுவலருக்கும் பொருந்தும். தகவல் பெறும் உரிமைச் சட்ட பதிவேட்டினை பராமரிப்பது குறித்து ஏற்கனவே பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (நி.சீ.3) துறையின் கடிதம் (நிலை) எண் 158/A.R.III/2007-1, நாள் 22.06.2007 ன்படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் கீழ்க்கண்ட படிவத்தில் இப்பதிவேட்டினை பராமரிப்பதின் மூலம் தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பங்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தகவல்கள் அளிக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளலாம்.

## I. Register of Applications received and disposed of under RTI Act by the Public Information Officer (Maintained by P.I.O)

| Sl. No. | Application No. & Date | Name of Applicant & Address | Date of Receipt by APIO/ PIO | Category of Applicant: BPL/Other |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |

| Brief Description of request for information | Involving third party information or Not | Amount for application fees paid | Charges collected for furnishing information in Rs. |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| | | | |

| Total Amount Collected (C8+C9) | Information Furnished | | | Date of Rejection |
|---|---|---|---|---|
| | Date | Fully | Partly | |
| 10 | 11 | | | 12 |
| | | | | |

| Sections under 8,9, 11, 24 which information rejected | Deemed Refusal u/s 7(2)/18(1) | Whether Appeal made against decision of PIO u/s 19(1) & 19(3) | Any other Information |
|---|---|---|---|
| 13 | 14 | 15 | 16 |
| | | | |

## II. Register of First Appeals maintained by the 1st Appellate Authority

| Sl. No. | Appeal No. & Date | Name of Appellant & Address | Date of Receipt of Appeal by Appellate Authority | Name & Designation of PIO against whose decision Appeal No. & Date |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | |

| Decision by 1st Appellate Authority | | | Whether 2nd Appeal made u/s 19(3) | Any other information |
|---|---|---|---|---|
| Date | Allowed | Rejected u/s 8,9,11 & 24 | | |
| 6 | 7 | 8 | 9 | 10 |
| | | | | |

14. **மனுதாரர் விண்ணப்பக் கட்டணத்தை கீழ்க்கண்ட வழிமுறைகளில் செலுத்தலாம்**

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 2(g)ன்படி தகவல் பெறுவதற்கான கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது மாநிலத்தில் தகவல் பெறும் உரிமைக்கான விண்ணப்பக் கட்டணமாக ரூ.50/- நிர்ணயம் செய்யப்பட்டு பின்னர் ரூ.10/- ஆக குறைக்கப்பட்டது. (அரசாணை (நிலை) எண் 1012, பொதுத் துறை, நாள் 20.09.2006) இவ்விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்களை செலுத்தும் முறை குறித்து ஆரம்ப காலக்கட்டத்தில் பொதுத் துறையிலிருந்தும் பின்னர் பணியாளர் (மற்றும்) நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலிருந்தும் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

| வ.எண் | கட்டணம் செலுத்தும் முறை | அரசாணை விவரம் |
|---|---|---|
| 1. | பணமாக (By cash)<br>வங்கி வரைவோலையாக (Demand draft)<br>வங்கிக் காசோலையாக (Bankers cheque) | G.O. Ms. No.989, Public (Estt. 1& Leg) Department dated 07.10.2005 |
| 2. | கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் செலுத்துவதின் மூலமாக (Head of ccount)<br>"0070. Other Administrative Services – 60 Other Services - 118 Receipts under Right to Information Act, 2005 - AA - Collection of fees under Right to Information (Fees) Rules 2005"<br>[DPC 0070 60 118 AA 0005] | P&AR Department Letter No.25379/AR III/ 2014-1 dated 04.08.2014 |
| 3. | நீதிமன்ற வில்லையாக<br>(By affixing court fee stamps) | G.O. Ms. No.72, P&AR (AR-III) dated 20.03.2007 |
| 4. | அஞ்சல் பணவிடை மூலமாக<br>(By Money Order) | G.O. Ms. No.12, P&AR (AR-III) dated 08.01.2011 |

| | |
|---|---|
| 1. **INDIAN POSTAL ORDERS**<br>2. **POSTAL STAMPS**<br>3. **NOTARY PUBLIC STAMPS**<br>4. **INDIVIDUAL CHEQUES**<br>5. **REVENUE STAMPS**<br>6. **STAMP PAPERS** | ஆகியவற்றின் மூலம் செலுத்தப்படும் கட்டணங்களை ஏற்கக் கூடாது |

**விண்ணப்பக் கட்டணத்தை மனுதாரர் குறைவாக செலுத்தியிருந்தால்**

1) விண்ணப்பத்தினை அசலாக மனுதாரருக்கு திருப்பி அனுப்பக்கூடாது.
2) குறைவாக கட்டணம் செலுத்தியுள்ளார் என்பதற்காகவும் விண்ணப்பத்தினை நிராகரிக்கக் கூடாது
3) குறைவுக் கட்டணத்தை செலுத்துமாறு மனுதாரரை அறிவுறுத்த வேண்டும்.
4) குறைவுக் கட்டணம் செலுத்தப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் கணக்கீடு துவங்கும்.

15. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை நேரில் செலுத்தும்போது தொகை பெற்றுக் கொண்டதற்கான ரசீதினை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (நி.சீ3) துறையின் கடித எண் 27823/நி.சீ.3/2007-1, நாள் 08.06.2007-ல் வழங்கியுள்ள அறிவுரையின்படி கீழ்க்கண்டவாறு மனுதாரருக்கு அளிக்க வேண்டும்.

அலுவலகம் :
ஊர் :
வட்டம் :
மாவட்டம் :

தமிழ்நாடு தகவல் உரிமை (கட்டணம்) விதிகள், 2005 (விதி 3(அ))

## பணப் பற்றுச் சீட்டு

பற்றுச் சீட்டு எண் :
நாள் :

பதிவுருக்கள் தொடர்பான தகவல்/பதிவுருக்கள், நெகிழ்வட்டு, குறுந்தகடு அல்லது பிறபொருளின் படிகள் அளித்தற்பொருட்டு, திரு/திருமதி.......................................................................... ........... ......................................................................அவர்களிடமிருந்து (முகவரி) தொகை பெறப்பட்டது.

தொகை :
பற்றுச் சீட்டு பெறப்பட்டது

மனுதாரர் பொதுத் தகவல் அலுவலர்

16. **விண்ணப்பதாரர் ரூ.10/–ஐ ரொக்கமாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பியிருந்தால்,**

அத்தொகையை விண்ணப்பக் கட்டணமாக ஏற்கக் கூடாது. ரூ.10/-ஐ பணப்பதிவேட்டில் பதிவு செய்து உரிய கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். மேலும் மனுதாரரை தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளில் தெரிவித்துள்ளபடி விண்ணப்பக் கட்டணத் தொகையை செலுத்துமாறு அறிவுறுத்த வேண்டும்.

17. **நகலுக்கான கட்டணத்தை எந்தெந்த வழிகளில் செலுத்தலாம்?**

1) வங்கி வரைவோலை (Demand Draft)
2) வங்கிக் காசோலை (Banker's Cheque)
3) நேரில் செலுத்துவதின் மூலமாக (By cash)
4) உரிய அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்துவதின் மூலமாக (Head of Account)

- **நீதிமன்ற வில்லை மற்றும் அஞ்சல் பணவிடை மூலமாக மனுதாரர் நகலுக்கான கட்டணத்தை செலுத்த முடியாது.**

18. **நகல்களுக்கான கட்டணங்களை செலுத்துவது குறித்து தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விவரங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | A4 அல்லது A3 தாளில் நகலெடுத்து வழங்குவதற்கு | பக்கம் ஒன்றிற்கு ரூ.2/- வீதம் வசூலிக்க வேண்டும் |
| 2. | பெரிய அளவிலான தாள் | அதன் உண்மையான விலை வசூலிக்க வேண்டும் |
| 3. | மாதிரிகள் மற்றும் மாதிரி உருவங்கள் | |
| 4. | குறுந்தட்டு (diskette) அல்லது நெகிழ் ஒளித் தட்டுகள் (floppy) | ஒவ்வொன்றிற்கும் ரூ.50/- வீதம் வசூலிக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| 5. | அச்சிட்ட புத்தகம் | குறிப்பிட்ட வெளியீட்டுத் தொகை வசூலிக்கப் படும். (அல்லது) அவ்வெளியீட்டினை நகல் எடுத்துத் தருவதற்கு பக்கத்திற்கு ரூ.2/- வீதம் வசூலிக்கப்படும் |

19. விண்ணப்பத்தில் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை சட்டப் பிரிவுகளுக்குட்பட்டு ஆய்வு செய்து, அவற்றிற்கு கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளித்து தகவல்களை அளிக்க வேண்டும்.

1) தனி மனிதனின் வாழ்வு மற்றும் சுதந்திர உரிமை குறித்த தகவல்களை 48 மணி நேரத்தில் வழங்க வேண்டும்.

2) மனுதாரர் கோரும் தகவல்கள் வேறு பொது அதிகார அமைப்பினைச் சார்ந்திருந்தால் சட்டப் பிரிவு 6(3)-ன்படி சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்து அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் மேலும் சம்பந்தப்பட்ட கோப்பினை உடன் முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

3) மனுதாரர் கோரும் நகல்களுக்கு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்றால் தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளின்படி கட்டணத்தை துல்லியமாக கணக்கிட்டு அவ்விவரத்தை மனுதாரருக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும். மேலும் இக்கட்டணத்தை எந்தெந்த வழிகளில் செலுத்தலாம் என்ற விவரத்தையும் மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

4) மூன்றாம் தரப்பினரின் தனி நபர் குறித்த தகவல்களை மனுதாரர் கோரியிருந்தால் சட்ட விதி 11ன்படி விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 5 நாட்களுக்குள்ளாக மூன்றாம் நபருக்கு "அறிவிப்பு" (notice) அனுப்ப வேண்டும்.

5) மனுதாரர் கோரும் தகவல்கள் அடங்கிய கோப்புகளிலிருந்து தகவல்களை பிரித்து அளிக்க வேண்டியிருப்பின் சட்டப் பிரிவு 10ன்படி பிரித்தளிக்க வேண்டும்.

➢ **மனுதாரர் கோரும் தகவல்களை 30ம் நாளன்று அனுப்புவதை தவிர்த்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.**

ஆவணங்களை பார்வையிட முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணமில்லை. அடுத்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ.5/- வீதம் வசூலிக்க வேண்டும். (or fraction thereof)
(அரசாணை (நிலை) எண் 1012, பொதுத் துறை, நாள் 20.09.2005)

20. ஆவணங்களை மனுதாரர் பார்வையிடுவதற்கு முன்பாக முன்அனுமதி பெற்றிருந்தால், ஒரு நபரை மட்டும் கூடுதலாக அனுமதிக்கலாம். பார்வையிட ஏதுவாக மூன்று நாட்களை குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மூன்று நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் மனுதாரர் பார்வையிட அனுமதிக்கலாம்.

21. ஆவணங்களை பார்வையிடும்போது மனுதாரர் குறிப்புகள் எடுத்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

22. மனுதாரர் கோப்புகளை பார்வையிடும்போது கோப்பின் பாதுகாப்பினை கருதி ஒரு நபர் நியமிக்கப்பட வேண்டும்.

23. அரசுக் கடித எண் 41633/AR.3/2015-1 dt. 23.11.15 ன்படி,

i. **மனுதாரர், நகல்களுக்கு சான்றொப்பமிட்டு வழங்கக் கோரும்போது கீழ்க்கண்டவாறு வழங்க வேண்டும்.**

/உண்மை நகல்/

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி வழங்கப்படுகிறது

ஒம்/- xxxxxxx<br>
(செ. முகம்மது ஆரிப்)<br>
பொதுத் தகவல் அலுவலர்/<br>
கருவூல அலுவலர்,<br>
மாவட்டக் கருவூலம்,<br>
திருச்சிராப்பள்ளி

ii. **மனுதாரருக்கு தகவல்களை அளிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

a) கடித எண், நாள் மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட நாள் குறித்த விவரங்களை தெரிவிக்க வேண்டும்.

b) பொதுத் தகவல் அலுவலரின் பெயர், பதவி, அலுவலக தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட வேண்டும்

c) தகவல்களை மறுக்கும்போது மறுப்பதற்கான காரணம் மற்றும் அது தொடர்பான சட்டவிதிகளை கண்டிப்பாக குறிப்பிட வேண்டும்

d) சட்டப்பிரிவு 6(3)-ன்படி விண்ணப்பத்தினை மாற்றம் செய்யும்போது மாற்றம் செய்யப்பட்ட அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரியை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

e) தகவலை மறுக்கும்போது யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும்? எத்தனை நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும்? என்ற விவரத்தை மனுதாரருக்கு கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

f) மேல்முறையீட்டு அலுவலரின் பெயர், பதவி, அலுவலக முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி குறித்த விவரங்களை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்

24. மனுதாரர் கோரிய விவரங்கள் விலக்களிக்கப்பட்ட இனங்களாக இருப்பின் அவற்றினை சட்ட விதிகள் 8 மற்றும் 9ன் அடிப்படையில் ஆய்வு செய்து மறுக்கலாம். தகவல்களை மறுக்கும்போது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 7(8)-ன்படி, தகவல்களை மறுப்பதற்கான காரணங்கள், இதுகுறித்து மனுதாரர் மேல்முறையீடு செய்ய விரும்பினால் யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் மற்றும் எத்தனை நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் போன்ற விவரங்களை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

## 25. ஆணைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்:

1. மாநில தகவல் ஆணையம் நீதிமன்றத்திற்கு ஒப்பானதாகும். எனவே, நீதிமன்றத்திற்கு உரிய கௌரவத்தையும் மரியாதையையும் அளிக்க வேண்டியது பொதுத் தகவல் அலுவலரின் கடமையாகும்.
2. தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 20(1)-ன்படி "தான் குற்றமற்றவர்" என்று நிருபிக்கும் பொறுப்பு பொதுத் தகவல் அலுவலரையே சார்ந்தது என்பதால் வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

3. விசாரணையின்போது மாநில தகவல் ஆணையரின் பார்வைக்கு சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பக்கங்களை முன்னரே கொடியிட்டு வைத்துக் கொள்ள வேண்டும்

4. மனுதாரரின் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து விசாரணை நாளன்று வரை பொறுப்பிலிருந்த பொதுத் தகவல் அலுவலர்களின் பெயர் மற்றும் மனுதாரர் கோரும் தகவல்களை அளிப்பதற்காக சட்டப் பிரிவு 5(5)ன்படி உதவி நாடப்பட்ட அலுவலர்களின் பெயர், பதவி விவரங்களையும் விசாரணையின்போது மாநில தகவல் ஆணையர்கள் கோரினால் வழங்குவதற்கு ஏதுவாக எடுத்துச்செல்ல வேண்டும்

5. விசாரணை நடைபெறும் நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே ஆணையத்திற்கு செல்ல வேண்டும்.


6. விசாரணைக் கூடத்திற்குள் செல்லிடைப் பேசியை பயன்படுத்தக் கூடாது

7. விசாரணை நாளன்று பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகாத சூழ்நிலை ஏற்படும்போது அவருக்கு இணையான அலுவலர்தான் ஆஜராக வேண்டும். அதற்கான முன் அனுமதியை முன்னரே பெற்றிருக்க வேண்டும்.

8. மனுதாரருக்கு தகவல்களை ஏற்கனவே வழங்கியிருந்தால் அதன் நகல் ஒன்றினை மீண்டும் எடுத்துச் செல்வது நல்லது. தகவல் வரவில்லை என்று மனுதாரர் புகார் தெரிவித்தால் விசாணையின்போதே நகலினை வழங்கிட ஏதுவாக இருக்கும்.

9. தகவல் ஆணையர் அனுமதித்தால் மட்டுமே மனுதாரரிடம் பொதுத் தகவல் அலுவலர் பேச வேண்டும். மனுதாரரிடம் வாதம் புரிவதை தவிர்க்க வேண்டும்.

10. விசாரணையின்போது ஆணையர் வழங்கும் அறிவுரைகளை குறிப்பு எடுத்துக்கொள்ள ஏதுவாக பேனா, குறிப்பு புத்தகம் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.



# முக்கிய சட்டப் பிரிவுகள்

# தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

## முக்கிய சட்டப் பிரிவுகள்

| பிரிவு | சுருக்கம் |
|---|---|
| 2(f) | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பொதுத் தகவல் அலுவலர்கள், மனுதாரர்கள் கேட்கக்கூடிய தகவல்களை எந்தவிதமான தங்கு தடையுமின்றி வழங்க வேண்டும். எனவே, "தகவல்" என்று சொல்லப்படுபவை எவை எவை என்பதை முதலில் தெரிந்து கொள்வது அவசியம். அவற்றை கீழ்க்கண்டவாறு விவரித்தல் பொருத்தமாக இருக்கும்.<br>1. பதிவுருக்கள்<br>2. ஆவணங்கள்<br>3. கடிதங்கள்<br>4. மின்னஞ்சல்கள்<br>5. கருத்துரைகள்<br>6. ஆலோசனைகள்<br>7. இதழ் செய்திக் குறிப்புகள்<br>8. சுற்றறிக்கைகள்<br>9. ஆணைகள்<br>10. குறிப்பேடுகள்<br>11. ஒப்பந்தப்புள்ளி விவரங்கள்<br>12. அறிக்கைகள்<br>13. குறிப்புகள் அடங்கிய தாள்கள்<br>14. மாதிரிகள்<br>15. மின்னணு வடிவத்தில் அமைக்கப் பெற்றுள்ள அனைத்து விவர குறிப்புகள் மற்றும் இதர வடிவங்களில் உள்ளடக்கப்பட்ட விவரங்கள்<br>இது தவிர, பொது அதிகார அமைப்புகள், நடைமுறையில் உள்ள பிற சட்டங்களின் வாயிலாக பெறக்கூடிய தனியார் அமைப்புகள் சம்பந்தப்பட்ட தகவல்களும் இதில் அடங்கும். |
| 2(j) | இப்பிரிவின்கீழ் தகவல் பெறும் உரிமை, பொது அதிகார அமைப்புகளில் இருக்கின்ற தகவல்களை பெறுவது மட்டுமல்லாமல், பணிகள், ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களை ஆய்வு செய்வதற்கும், ஆவணங்கள் அல்லது பதிவுருக்களின் குறிப்புகளை மாதிரி படிவங்கள் எடுத்துக்கொள்வதற்கும், சான்று அளிக்கப்பட்ட படிகளை பெற்றுக் கொள்வதற்கும் வழிவகை செய்கிறது. அத்தோடு மட்டுமல்லாமல், பணிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்களின் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுப்பதற்கும், மேலும் குறுந்தகடுகள், ஒளி ஒலி நாடாக்கள், கணினி வட்டு மற்றும் கணினியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை விண்ணப்பதாரர்கள் விரும்பும் வடிவங்களில் வழங்கப்படவேண்டும். |
| 3 | அனைத்து குடிமக்களும் தகவல்களை கோரலாம் |


| பிரிவு | சுருக்கம் |
|---|---|
| 5(1) | இச்சட்டம் இயற்றப்பட்ட நாளிலிருந்து 100 நாட்களுக்குள்ளாக ஒவ்வொரு பொது அதிகார அமைப்பிலும் பொதுத் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் |
| 5(2) | இச்சட்டம் இயற்றப்பட்ட நாளிலிருந்து 100 நாட்களுக்குள்ளாக துணைக் கோட்ட/உள் மாவட்ட அளவில் உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் |
| 5(3) | பொதுத் தகவல் அலுவலர், தகவல் கோருபவர்களுக்கு நியாயமான உதவிகளை அளித்தல் வேண்டும் |
| 5(4) | பொதுத் தகவல் அலுவலர் அவரது கடமைகளை சரிவர செய்வதற்கு எந்த அலுவலரின் உதவியையும் நாட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது |
| 5(5) | பிரிவு 5(4)-ன்படி உதவி நாடப்படுகின்ற அலுவலர், பொதுத் தகவல் அலுவலராகவே கருதப்படுவார் |
| 6(1) | ➢ தகவல் பெற விரும்புகிறவர், ஆங்கிலம் (அல்லது) இந்தி (அல்லது) வட்டார ஆட்சி மொழியில் விண்ணப்பிக்க வேண்டும்<br>➢ பொதுத் தகவல் அலுவலர்/உதவி பொதுத் தகவல் அலுவலருக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.<br>➢ எழுத்து வடிவிலோ அல்லது மின்னணுச் சாதனம்(through electronic means) மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.<br>➢ வகுத்துரைக்கப்படலாகும் (prescribed) கட்டணம் செலுத்த வேண்டும்.<br>➢ கோரப்படும் தகவல்கள் தெளிவாக (specifying) இருத்தல் வேண்டும்.<br>➢ கோரிக்கையினை வாய்மொழியாகச் செய்கிறவருக்கு அதனை எழுத்துருவில் அளிப்பதற்கு நியாயமான அனைத்து உதவிகளையும் பொதுத் தகவல் அலுவலர் செய்தல் வேண்டும். |
| 6(2) | தகவலை கோருபவர் என்ன காரணத்திற்காக இத்தகவலை கோருகிறார் என்ற விவரங்களையும் மற்றும் அவருடைய தனிப்பட்ட விவரங்களையும் அளிக்கத் தேவையில்லை. ஆனால் அவரைத் தொடர்பு கொள்வதற்காக தேவைப்படுகின்ற விவரங்களை மட்டும் பொதுத் தகவல் அலுவலர் கோரலாம். |
| 6(3) | மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் வேறொரு பொது அதிகார அமைப்பினைச் சார்ந்திருந்தாலோ அல்லது வெறோரு பொது அதிகார அமைப்பின் செயற்பணிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலோ மனுதாரரின் விண்ணப்பத்தினை அல்லது அதன் பகுதியினை சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்ய வேண்டும். மாற்றம் செய்யப்பட்ட விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.<br>➢ விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 5 நாட்களுக்குள் மாற்றம் செய்யப்பட வேண்டும். |
| 7(1) | ➢ உதவிப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்தோ அல்லது சட்டப் பிரிவு 6(3)-ன்படி வேறு பொது அதிகார அமைப்பிடமிருந்தோ மாற்றம் செய்யப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக மனுதாரர் கோரும் தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் அளிக்க வேண்டும் (அல்லது)<br>➢ சட்டப் பிரிவு 8 மற்றும் 9ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை நிராகரிக்க வேண்டும்<br>➢ ஒருவருடைய வாழ்வு அல்லது சுதந்திரம் தொடர்பான தகவலாக இருந்தால் அக்கோரிக்கை பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் தகவல் அளிக்க வேண்டும். |

| பிரிவு | சுருக்கம் |
|---|---|
| 7(2) | பிரிவு 7(1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் பொதுத் தகவல் அலுவலர் தகவல் அளிக்காவிட்டால் அவர் மனுதாரருடைய கோரிக்கையை ஏற்க மறுத்ததாகக் கருதப்படும் |
| 7(3) | ➢ மனுதாரர் கோரும் தகவல்களை நகல் எடுத்து வழங்க வேண்டியிருப்பின், நகலுக்கான கட்டணத்தை மனுதாரரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.<br>➢ இக்கட்டண விவரங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்ற கணக்குகள் விவரத்தையும் மனுதாரருக்கு அனுப்ப வேண்டும்.<br>➢ தகவல் அளிப்பதற்கான 30 நாள் கால அளவைக் கணக்கிடுகையில், மேற்சொன்ன கட்டணத் தொகை விவரத்தினை மனுதாரருக்கு அனுப்புவதற்கும் அவர் அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கும் இடையே உள்ள காலத்தினை விட்டுவிடுதல் வேண்டும். |
| 7(4) | மனுதாரர் புலன் உணர்ச்சி அற்றவராக (sensorily disabled) இருந்தால், பதிவுருவினை பார்வையிடுவதற்கும், அத்தகவலினைப் பெறுவதற்கும் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு உதவி செய்தல் வேண்டும். |
| 7(5) | ➢ விண்ணப்பக் கட்டணம், நகலுக்கான கட்டணங்கள் நியாயமாக இருக்க வேண்டும்<br>➢ வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களிடமிருந்து எவ்விதமான கட்டணங்களையும் (விண்ணப்பக் கட்டணம் மற்றும் நகலுக்கான கட்டணங்கள்) வசூலிக்கக் கூடாது |
| 7(6) | மனுதாரர் கோரும் தகவல்களை 30 நாட்களுக்குள் அளிக்காவிட்டால் அவர் கோரிய அனைத்து தகவல்களையும் செலவுத் தொகை ஏதுமின்றி வழங்க வேண்டும். |
| 7(7) | சட்டப் பிரிவு 7(1)-ன்படி முடிவு எதனையும் எடுப்பதற்கு முன்னர், 11ஆம் பிரிவின்படி மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்ட முறையீட்டினைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். |
| 7(8) | மனுதாரரின் கோரிக்கை மறுக்கப்படும்போது கோரிக்கை செய்த நபருக்கு கீழ்க்கண்ட விவரங்களை குறிப்பிட்டு பதில் அளிக்க வேண்டும்.<br>1) கோரிக்கை மறுப்பதற்கான காரணங்கள்<br>2) கோரிக்கை மறுக்கப்பட்டதை எதிர்த்து எவ்வளவு காலத்திற்குள் மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்ற விவரம் (மற்றும்)<br>3) முதல் மேல்முறையீட்டு அலுவலர் குறித்த விவரங்கள் |
| 7(9) | 1) பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்புவதாக இருக்கக்கூடும் என்றால் (disproportionately divert the resources of the public authority)<br>2) ஒரு (பழமையான) ஆவணத்தை பாதுகாப்பதற்கு அல்லது பேணிக்காப்பதற்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடும்<br>என்றாலன்றி அத்தகவல் நாடப்பட்ட படிவத்திலேயே அளிக்கப்பட வேண்டும் |

| பிரிவு | சுருக்கம் |
| --- | --- |
| 8(1) | **a)** நமது நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கக் கூடும் என்று அச்சம் ஏற்பட்டால், அத்தகவல்கள் வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. நமது நாட்டின் அறிவியல் மற்றும் பொருளாதார வளர்ச்சி அல்லது அயல்நாட்டுடனான நட்புறவு ஆகியவற்றிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற தகவல்கள், குற்றச் செயல்களை செய்வதற்கு தூண்டுகோலாக அமையும் தகவல்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.<br>**b)** நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயம் ஆகியவற்றால் தடை செய்யப்பட்டுள்ள தகவல்கள் அல்லது நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயம் ஆகியவற்றிற்கு அவமதிப்பை ஏற்படுத்துகின்ற தகவல்கள்<br>**c)** நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் உரிமை மீறலுக்கு வழிவகுக்கின்ற தகவல்கள்<br>**d)** மூன்றாம் நபரின் வியாபாரம் அல்லது வாணிபம் சம்பந்தப்பட்ட போட்டி நிலையை பாதிக்கக்கூடிய வாணிக ரகசியங்கள், வாணிப கமுக்கங்கள் அல்லது அறிவுசார்ந்த சொத்துரிமை ஆகிய தகவல்கள் வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை இருப்பினும் இத்தகவல்களை வழங்குவதின் மூலமாக பரவலான பொதுநலன் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று தகுதிவாய்ந்த பொது அதிகார அமைப்பு கருதுமேயானால் இந்த தகவல்களை வழங்குவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கக்கூடாது<br>**e)** பிறருடன் ஏற்படுகின்ற சட்டப்பூர்வமான உறவு முறையினால் அமைகின்ற தகவல்கள் வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் இத் தகவல்களை வழங்குவதின் மூலமாக பரவலான பொதுநலன் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று தகுதிவாய்ந்த பொது அதிகார அமைப்பு கருதுமேயானால் இந்தத் தகவல்களை வழங்குவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக ஒரு வழக்கறிஞருக்கும் அவரது கட்சிக்காரருக்கும் இருக்கும் சட்டப்பூர்வமான உறவு முறை, ஒரு மருத்துவருக்கும் நோயாளிக்கும் இருக்கும் சட்டப்பூர்வமான உறவு முறை<br>**f)** அயல்நாட்டு அரசுகளிடமிருந்து பெறப்பட்ட ரகசியமான தகவல்கள்<br>**g)** எந்த ஒரு நபரின் உடல் மற்றும் உயிருக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய தகவல்கள் மற்றும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் ரகசியமாக வழங்கப்படுகின்ற தகவல்கள்<br>**h)** சட்டத்தை மீறுகின்றவர்கள் மீது எடுக்கப்படக்கூடிய புலனாய்வு நடவடிக்கைகள் அல்லது வழக்குப்பதிவு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு தடை ஏற்படுத்துகின்ற தகவல்கள்<br>**i)** அமைச்சரவை கூட்டங்கள் சம்பந்தப்பட்ட குறிப்புகள். ஆனால் அமைச்சரவை கூட்டங்கள் முடிந்ததற்கு பின்னால் அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், எந்த அடிப்படையில் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டன என்பது போன்ற தகவல்களை வழங்குவதற்கு தடை இல்லை<br>**j)** பொதுநோக்கு இல்லாத, தனி மனித சுதந்திரத்தைப் பறிக்கின்ற தகவல்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், இத்தகவல்களை வழங்குவதின் மூலமாக பரவலான பொதுநலன் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு கருதுமேயானால் இத்தகவல்களை வழங்குவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கக்கூடாது.<br>➢ இருப்பினும், நாடாளுமன்றத்திற்கு அல்லது ஒரு மாநில சட்டமன்றத்திற்கு மறுக்கப்பட முடியாத தகவல், எந்த ஒரு நபருக்கும் மறுக்கப்படுதல் ஆகாது |
| 9 | ஒரு மனுதாரருடைய கோரிக்கையானது அரசு அல்லாத பிற நபர் ஒருவருக்கு இருந்து வருகிற பதிப்புரிமை மீறுகையாக (infringement of copyright) அமைந்திருந்தால் அக்கோரிக்கையை நிராகரிக்கலாம். |

| பிரிவு | சுருக்கம் |
|---|---|
| *10* | மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் விலக்களிக்கப்பட்ட தகவல்களுடன் தொடர்புடையதாக இருக்கும்பட்சத்தில் அளிக்கப்பட வேண்டிய தகவலுக்கான பகுதியை மட்டும் பிரித்தெடுத்து அத்தகவலை மனுதாரருக்கு அளிக்க வேண்டும். மீதிப் பாதி தகவல்கள் ஏன் நிராகரிக்கப்பட்டன என்பதற்கான காரணங்களை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். நிராகரிக்கப்பட்ட தகவல்கள் குறித்து மேல்முறையீடு செய்வதற்கு ஏதுவாக மேல்முறையீட்டு அலுவலர் குறித்த விவரங்களை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். |
| *11* | ➢ மூன்றாம் தரப்பினருடன் தொடர்புடைய தகவல் அல்லது மூன்றாம் தரப்பினர் ரகசியம் எனக் கருதி வழங்கப்பட்டிருக்கின்ற தகவலை வழங்கக் கோரி கோரிக்கை பெறப்பட்டால், பொதுத் தகவல் அலுவலர் அக்கோரிக்கை பெறப்பட்ட நாளிலிருந்து ஐந்து நாட்களுக்குள் மூன்றாம் தரப்பினருக்கு அத்தகவலை வெளியிடலாமா அல்லது வேண்டாமா என்பது பற்றி எழுத்து வடிவில் அல்லது வாய்மொழியாக தனது கருத்தை அனுப்புமாறு எழுத்துவடிவிலான அறிவிப்பு ஒன்றை அளிக்க வேண்டும்.<br>➢ மூன்றாம் தரப்பினர் அந்த அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்குள், வெளியிடக் கருதியதை எதிர்த்து முறையீடு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.<br>➢ தகவலை வெளியிட ஆட்சேபனை தெரிவித்திருந்து, பொது நலன் கருதி அத்தகவலை வெளியிட பொதுத் தகவல் அலுவலர் முடிவெடுத்தால், முடிவெடுக்கப்பட்ட விவரத்தை மூன்றாம் நபருக்குத் தெரிவிக்க வேண்டும். இம்முடிவினை எதிர்த்து, மூன்றாம் தரப்பினர் சட்டப் பிரிவு 19-ன்படி மேல்முறையீடு செய்வதற்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.<br>➢ மூன்றாம் தரப்பினர் மேல்முறையீடு செய்திருப்பாரேயானால் மேல்முறையீட்டின் முடிவு தெரியும்வரை அத்தகவலை வெளியிடக்கூடாது. மூன்றாம் தரப்பினர் மேல்முறையீடு செய்துள்ள விவரத்தையும் அதன் காரணமாக தகவல்களை அளிக்க இயலாத நிலையையும் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அவரது விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 40 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.<br>➢ மூன்றாம் நபர் தகவல்களை வெளியிட ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்திருந்தால் மனுதாரரின் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 40 நாட்களுக்குள் தகவல்களை மனுதாரருக்கு அளிக்க வேண்டும்.<br><br>**வரம்புரையாக:** சட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்பட்ட தொழில் அல்லது வாணிப ரகசியங்கள் பொறுத்த நேர்வில், வெளியிடுவதில் பொதுமக்களுக்கு ஏற்படும் நலன் மூன்றாம் தரப்பினரின் நலன்களுக்கு ஏற்படக்கூடிய ஊறு அல்லது கேடு எதனையும்விட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமாயின், வெளியிடுவதை அனுமதிக்கலாம். |
| *19(1)* | பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து 30 நாட்களுக்குள் தகவல் கிடைக்கப்பெறாமலோ அல்லது கிடைக்கப்பெற்ற தகவலினால் குறையுற்றிருந்தாலோ அந்நபர் தகவல் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் முதல் மேல்முறையீடு செய்ய வேண்டும் ஏற்றுக்கொள்ளும்படியான காரணங்ளை மனுதாரர் தன்னுடைய விண்ணபத்தில் தெரிவித்திருந்தால், தாமதமாக செய்யப்பட்ட மேல்முறையீட்டு விண்ணபத்தினை ஏற்றுக்கொள்ளலாம். |
| *19(2)* | மூன்றாம் தரப்பு தகவலை வெளிப்படுத்துவதற்கு, 11 ஆம் பிரிவின்படி மாநிலப் பொதுத் தகவல் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிராக, தொடர்புடைய மூன்றாம் தரப்பினர் மேல்முறையீடு செய்ய விரும்பினால் ஆணைத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக மேல்முறையீடு செய்ய வேண்டும். |

| பிரிவு | சுருக்கம் |
|---|---|
| *19(3)* | முதல் மேல்முறையீட்டு அலுவலரால் முடிவு எடுக்கப்பட்ட அல்லது உள்ளபடியே அது பெறப்பட்ட தேதியிலிருந்து தொன்னூறு நாட்களுக்குள், மாநில தகவல் ஆணையத்திடம் மனுதாரர் இரண்டாவது மேல்முறையீடு செய்து கொள்ளலாம் |
| *19(6)* | மேல்முறையீட்டு அலுவலர், முதல் மேல்முறையீடு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து *30* நாட்களுக்குள் தீர்வு செய்ய வேண்டும். எழுதிப் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக மேல்முறையீட்டினை *45* நாட்களுக்குள் தீர்வு செய்யலாம். |
| *20(1)* | மாநிலத் தகவல் ஆணையம், முறையீடு அல்லது மேல்முறையீடு எதனையும் தீர்மானிக்கிற நேரத்தில், மாநிலப் பொதுத் தகவல் அலுவலர்,<br>*1)* நியாயமான காரணம் எதுவுமின்றி, தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினைப் பெறுவதற்கு மறுத்திருந்தாலோ<br>*2)* தகவலை அளிக்க மறுத்திருந்தாலோ<br>*3)* தகவலுக்கான கோரிக்கையினை கெட்ட எண்ணத்துடன் மறுத்திருந்தாலோ<br>*4)* தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பக்கூடிய தகவலினை வேண்டுமென்றே அளித்திருந்தாலோ<br>*5)* கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழித்திருந்தாலோ<br>*6)* தகவல் அளிப்பதை எந்த முறையிலும் தடுத்திருந்தாலோ<br>என்று கருதுகிறவிடத்து, அந்த விண்ணப்பம் பெறப்படும் வரை அல்லது தகவல் அளிக்கப்படும் வரை ஒவ்வொரு நாளுக்கும் இருநூற்று ஐம்பது ரூபாயினை பணத்தண்டமாக விதித்தல் வேண்டும். எனினும், மொத்தத் தண்டத் தொகையானது ரூ.*25,000/-*ற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.<br>➢ மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு தண்டம் எதுவும் விதிக்கப்படுவதற்கு முன்பு, கேட்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்று அளிக்கப்படுதல் வேண்டும்.<br>➢ மாநிலப் பொதுத் தகவல் அலுவலர் நியாயமாகவும், கவனத்துடனும் செயல்பட்டுள்ளார் என்பதை மெய்ப்பிக்கும் சுமையானது அவரையே சார்ந்ததாகும். |
| *20(2)* | மாநிலத் தகவல் ஆணையம், முறையீடு அல்லது மேல்முறையீடு எதனையும் தீர்மானிக்கிற நேரத்தில், மாநிலப் பொதுத் தகவல் அலுவலர்,<br>*1)* நியாயமான காரணம் எதுவுமின்றி, தகவலுக்கான விண்ணப்பம் ஒன்றினைப் பெறுவதற்கு மறுத்திருந்தாலோ<br>*2)* தகவலை அளிக்க மறுத்திருந்தாலோ<br>*3)* தகவலுக்கான கோரிக்கையினை கெட்ட எண்ணத்துடன் மறுத்திருந்தாலோ<br>*4)* தவறான, முழுமையற்ற அல்லது திசை திருப்பக்கூடிய தகவலினை வேண்டுமென்றே அளித்திருந்தாலோ<br>*5)* கோரிக்கையின் பொருளாக இருந்த தகவலை அழித்திருந்தாலோ<br>*6)* தகவல் அளிப்பதை எந்த முறையிலும் தடுத்திருந்தாலோ என்று கருதுகிறவிடத்து, மாநிலப் பொதுத் தகவல் அலுவலருக்கு எதிராக அவருக்குப் பொருந்தத்தக்க பணிவிதிகளின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தல் வேண்டும். |



# ஐயமும் - தெரிவுகளும்

# தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

## ஐயமும் தெரிவுகளும்

| | |
|---|---|
| கேள்வி: | மனுதாரர் விண்ணப்பக் கட்டணமாக ரூ.10 செலுத்துவதற்கு பதிலாக ரூ.5ற்கு நீதிமன்ற வில்லையை ஒட்டி அனுப்பியுள்ளார். இவ்விண்ணப்பத்தினை ஏற்கலாமா? அல்லது நிராகரிக்கலாமா? |
| பதில்: | குறைவாக விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்பதற்காக விண்ணப்பத்தினை நிராகரிக்கக் கூடாது. குறைவுக் கட்டணத்தை செலுத்துமாறு மனுதாரரை அறிவுறுத்த வேண்டும். |
| கேள்வி: | மனுதாரருக்கு தகவல் அளிக்குமுன் உயர்அலுவலர்களை கலந்தாலோசித்து தகவல்களை அளிக்கலாமா? |
| பதில்: | பொதுத்தகவல் அலுவலர் சுதந்திரமாக முடிவெடுக்க வேண்டும். மனுதாரர் கோருகின்ற தகவல்களை சட்ட விதிகளுக்குட்பட்டு வழங்க வேண்டும். உயர்அலுவலர்களை கலந்தாலோசித்து தகவல்களை வழங்க மறுக்கக் கூடாது.<br><br>இதேபோன்ற நிகழ்வில் மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையம், வழக்கு எண் 13735/O-8/10 dated 9.8.2010 (Thiru P. Rajan (vs) The Public Information Officer Government Hospital Kothagiri, The Nilgiris District) ல்<br><br>*The Public Information Officer was therefore summoned in Case No. 13735/O-8/09 today and it seems that he consulted with his Senior Officer who said that the information need not be given. Since the superior officer is not authorized to over-ride the Act passed by the Parliament of India and the liability for supplying the information rests with the Public Information Officer, there is no scope for the Public Information Officer for being absolved of the responsibility for this. The Secretary, Health is therefore directed to recover the penalty of Rs 25,000 which has become payable from the Public Information Officer who was on duty at that time the letter dated 8.11.2008 Rc No.384/A1/08 was sent and remit it into the Government treasury and report the fact to the Commission.*<br><br>*The Secretary, Health is also directed to frame charges under the relevant Rules on the Joint Director who misguided the Public Information Officer in violation of the Law of the land and take such departmental action as it may deem fit, to recover the loss he has so caused.*<br><br>என்று தீர்ப்பு வழங்கியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும். |
| கேள்வி: | ஒரு மனுதாரர் 01.08.2015 அன்று ஆர்.டி.ஐ-ல் விண்ணப்பம் அனுப்பினார். அதே கேள்வியை மீண்டும் கேட்டு 19.08.2015 அன்று அனுப்பியுள்ளார் (இதற்கும் ரூ.10/-ஐ விண்ணப்ப கட்டணமாக கட்டியுள்ளார்) இரண்டு விண்ணப்பத்திலும் கேட்கப்பட்டுள்ள விவரங்கள் ஒரே மாதிரியாக உள்ளதால் இரண்டு விண்ணப்பத்திற்கும் சேர்த்து ஒரே பதிலை அனுப்பலாமா? |
| பதில்: | ஒவ்வொரு தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பத்திற்கும் தனித்தனியாக தகவல்கள் அளிக்கப்படவேண்டும். இரண்டு விண்ணப்பத்திற்கும் சேர்த்து ஒரே பதில் அளிக்கக் |

| | |
|---|---|
| | கூடாது. சட்டப் பிரிவு 6(1)ன்படி விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கும்போது தனித் தனியாகத்தான் பதில் அனுப்ப வேண்டும். |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்திற்கு வந்துள்ள RTI விண்ணப்பத்தில் ஒரு முகவரியும், உறையில் ஒரு முகவரியும் உள்ளது. நாங்கள் எந்த முகவரிக்கு பதில் அனுப்ப வேண்டும்? |
| பதில்: | விண்ணப்பத்தில் உள்ள முகவரிக்கு மட்டும்தான் பதில் அனுப்ப வேண்டும். |
| கேள்வி: | மனுதாரர் ஒரே பொருள் தொடர்பாக 10 கேள்விகள் கேட்டுள்ளார். 10 கேள்விகளுக்கும் சேர்த்து ஒரே பதிலாக அனுப்பலாமா? |
| பதில்: | மனுதாரர் கேட்டுள்ள ஒவ்வொரு விவரத்திற்கும் தனித்தனியாகத்தான் தகவல்களை அளிக்க வேண்டுமே தவிர அவை அனைத்திற்கும் சேர்த்து ஒரே தகவலாக பதில் அளிக்கக் கூடாது. |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றுபவர், கடந்த மே 2014லிருந்து சூன் 2015 வரை எந்தெந்த தேதிகளில் விடுப்பு எடுத்தார்? அதற்கான காரணம் மற்றும் எந்தெந்த தேதிகளில் தாமதமாக அலுவலகத்திற்கு வந்தார்? போன்ற விவரங்களை தெரிவிக்குமாறு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் மூன்றாம் நபர் கேள்வி கேட்டுள்ளார். மனுதாரர் கேட்டுள்ளவாறு தகவல்களை சேகரித்து தட்டச்சு செய்து வைத்துள்ளேன். இதை மனுதாரருக்கு அனுப்பலாமா? |
| பதில்: | அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேடானது பொது ஆவணமாகும் (Public Document) அரசு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேட்டினை இந்திய குடிமகன் யார் வேண்டுமானலும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி கேட்டுப் பெற உரிமை உள்ளது.<br>1) இந்நிகழ்வில் மனுதாரர் கேட்டுள்ள விவரங்கள் வருகைப் பதிவேட்டில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவைகளாகும். மனுதாரர் கேட்டுள்ள விவரங்களை வருகைப் பதிவேட்டினை பார்த்து தட்டச்சு செய்து மனுதாரருக்கு அனுப்ப உள்ளதாக தெரிவித்துள்ள பொது தகவல் அலுவலரின் செயலானது ஏற்கத்தக்கதல்ல.<br>2) மனுதாரரிடம், தாங்கள் கோரும் தகவல்கள் நான்கு பக்கங்களை உள்ளடக்கியுள்ளது என்றும் தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளின்படி பக்கம் ஒன்றிற்கு ரூ.2/- (ரூ,2 x 4) வீதம் ரூ.8/-ஐ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் என்றே கடிதம் அனுப்ப வேண்டும். மனுதாரர் உரிய தொகை செலுத்திய பின்பு சம்பந்தப்பட்ட மாதத்தின் வருகைப் பதிவேட்டு பக்கங்களின் நகல்களை மனுதாரருக்கு அனுப்பி வைக்க வேண்டும்<br>3) மனுதாரர் விரும்புமாறு தகவல்களை ஆவணங்களிலிருந்து உருவாக்கி வழங்கக் கூடாது.<br>4) விடுப்பு விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் விடுப்பிற்கான காரணங்கள் மூன்றாம் தரப்பினரின் தனி நபர் குறித்த தகவல்கள் என்பதால் அவைகளை மனுதாரருக்கு அளிக்க வேண்டியதில்லை. |
| கேள்வி: | எங்கள் துறைக்கு ஒரு ஆர்வலர் ஏதாவது அரசாணையை கேட்டு தினமும் RTIல் மனு அனுப்பி வருகிறார். ஒவ்வொரு முறையும் வெவ்வேறு அரசாணைகளை கேட்கிறார். அவர் கேட்கும் அரசாணைகளை சிரமப்பட்டு தேடி எடுத்து அவருக்கு |

| | |
|---|---|
| | அனுப்பி வருகிறோம். இவர் அனுப்பும் RTI மனுக்களை பார்ப்பதற்கே நேரம் சரியாகி விடுகிறது. ஒரே நபர் திரும்ப திரும்ப RTI ல் கேட்கலாமா? |
| பதில்: | ஒரு நபர் எத்தனை முறை RTI விண்ணப்பம் அனுப்பலாம் என்று சட்டத்தில் வரையறுக்கப் படவில்லை. அவர் இந்திய குடிமகன். அவருடைய அடிப்படை உரிமையைத்தான் பயன்படுத்துகிறார். எனவே மனுதாரர் கேட்கும் அரசாணைகள் துறையில் இருக்கும் போது அளித்துதான் ஆக வேண்டும். |
| கேள்வி: | எங்கள் முனிசிபல் கமிஷனர் அறையில் குளிர்சாதன பெட்டி உள்ளது. அவர் பணியேற்ற நாளிலிருந்து (29.03.2014) இன்று வரை தினந்தோறும் எத்தனை மணி நேரம் குளிர்சாதன பெட்டியை பயன்படுத்துகிறார் என்றும் அதற்காக எவ்வளவு செலவு ஆனது என்று கேட்டும் மனுதாரர் விண்ணப்பித்துள்ளார். குளிர்சாதன பெட்டியின் பயன்பாட்டினை கணக்கிடுவதற்காக மீட்டர் பாக்ஸ் ஏதும் தனியாக எங்கள் அலுவலகத்தில் இல்லை. இதற்காக தனியாக பதிவேடும் பராமரிக்கப்படுவதில்லை. எப்படி பதில் அளிப்பது? |
| பதில்: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 2(f)ன்படி கோப்புகளில் உள்ள தகவல்களை மட்டுமே மனுதாரர் கேட்டுப்பெறலாம். கோப்புகளில் இல்லாத தகவல்களை மனுதாரர் கேட்டுப்பெற இயலாது. குளிர் சாதனப் பெட்டியின் பயன்பாட்டினை கண்காணிப்பதற்கென தனியாக பதிவேடுகள் ஏதும் தங்கள் அலுவலகத்தில் இல்லாத நிலையில் மனுதாரருக்கு "தாங்கள் கோரும் தகவல்கள் இப்பொது அதிகார அமைப்பில் இல்லை" என்றே தகவல் அளிக்க வேண்டும். |
| கேள்வி: | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி தகவல் வழங்க வேண்டி ஒரு மனுதாரர் விண்ணப்பத்திருந்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை "தேடிக் கொண்டிருக்கிறோம் கிடைத்தவுடன் பதில் அனுப்பி வைக்கப்படும்" என்று பொது தகவல் அலுவலர் இடைக்கால பதில் அளித்திருந்தார். அவர் இடைக்கால பதில் அளித்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் தகவல்கள் அளிக்கப்படாததால் தற்போது மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்துள்ளார். தாமதமாக முதல் மேல்முறையீடு செய்துள்ளதால் இவ் விண்ணப்பத்தினை நிராகரிக்கலாமா? |
| பதில்: | மனுதாரருக்கு இடைக்கால பதில் அனுப்பக் கூடாது. தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 7(1)ன்படி விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தகவல்கள் அளித்திருக்க வேண்டும். இல்லையென்றால் சட்டப் பிரிவு 7(2)ன் படி மனுதாரரின் கோரிக்கையை ஏற்க மறுத்ததாக கருதப்படும்.<br>1) மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை அதிகபட்சம் 45 நாட்களுக்கு தீர்வு செய்ய வேண்டும் என்று சட்டப்பிரிவு 19(6) குறிப்பிடுகிறது. நியாயமான காரணங்கள் இருப்பதாக கருதினால் தாமதமான மேல்முறையீட்டினையும் ஏற்றுக்கொள்ளலாம். இந்நிகழ்வில் மனுதாரர் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை அளித்துவிடுவார் என்ற நம்பிக்கையில் மூன்று மாதங்களுக்கு மேல் காத்திருந்து விட்டார். தற்போது தகவல்கள் கிடைக்காததால்தான் மேல்முறையீடு செய்துள்ளார்.<br>2) எனவே மனுதாரர் தாமதமாக மேல்முறையீடு செய்துள்ளார் என்பதற்காக மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை நிராகரிப்பது என்பது ஏற்க முடியாதொன்றாகும்.<br>3) மனுதாரர் கேட்டுள்ள விபரங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 7(6) |

| | |
|---|---|
| | ன்படி உடனடியாக அளிக்குமாறு பொது தகவல் அலுவலருக்கு மேல்முறையீட்டு அலுவலர் உத்தரவிடலாம். |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்திற்கு ஒருவர் RTI ல் கேட்டிருந்தார். அவர், அளவுக்கு அதிகமான தகவல்களை கேட்டிருந்ததால் சட்டப்பிரிவு 7(9)ன் படி வழங்க இயலாது என்று பதில் அனுப்பி விட்டோம். தொடர்ந்து மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்தார். மனுதாரரின் மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த மேல்முறையீட்டு அலுவலர் மனுதாரர் கேட்ட அத்தனை தகவல்களையும் இலவசமாக அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். இதில் எழும் சந்தேகங்கள்<br>1) மேல்முறையீட்டு அலுவலர் உத்தரவிட்டுள்ளதால் மனுதாரர் கேட்கும் தகவல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கத்தான் வேண்டுமா?<br>2) மனுதாரரிடம் இப்போது நகலுக்கான கட்டணத்தை செலுத்துமாறு கேட்கலாமா?<br>3) மேல்முறையீட்டு அலுவலரின் உத்தரவை எதிர்த்து மாநில தகவல் ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர் முறையிட முடியுமா? |
| பதில்: | 1) தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 8 மற்றும் 9ன் அடிப்படையிலேயே ஒரு தகவலை மறுக்க முடியும். சட்டப் பிரிவு 7(9) என்பது தகவலை மறுப்பதற்கான பிரிவு அல்ல.<br>2) 30 நாட்களுக்குள் தகவல்கள் அளிக்காவிட்டால் சட்டப் பிரிவு 7(6)ன்படி மனுதாரர் கோரும் தகவல்களை செலவுத்தொகை ஏதுமின்றி வழங்க வேண்டும். எனவே மேல்முறையீட்டு அலுவலரின் உத்தரவினை அமுல்படுத்தவேண்டும்<br>3) மேல்முறையீட்டு அலுவலரின் உத்தரவை எதிர்த்து மாநில தகவல் ஆணையத்தில் பொதுத் தகவல் அலுவலர் முறையிட இயலாது. |
| கேள்வி: | ஒரு மனுதாரர் தகவல் கேட்டு எங்கள் துறை தலைமை அலுவலகத்திற்கு விண்ணப்பித்திருந்தார். தகவல்கள் துறை தலைமையகத்திலேயே இருந்தாலும்கூட மனுதாரர் எந்த மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்திருக்கிறார் என்று கண்டறிந்து அந்த மாவட்ட அலுவலகத்திற்கு சட்டப் பிரிவு 6(3)ன்படி மாற்றம் செய்து வருகிறார்கள். அதுபோன்று பெறப்படும் விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ் உள்ள அலுவலகங்களுக்கு சட்டப் பிரிவு 6(3)ன்படி நாங்கள் மாற்றி வருகிறோம். இதுபோன்று மாற்றம் செய்திடும் நடைமுறை சரிதானா? |
| பதில்: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)ன்படி தகவல்கள் இருக்கின்ற பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலருக்குதான் மனுதாரர் விண்ணப்பிக்க வேண்டும். மனுதாரர் கோரும் தகவல்கள் தங்களிடம் இல்லாத நிலையில் சட்டப் பிரிவு 6(3)ன்படி வேறொரு பொது அதிகார அமைப்பிற்கு மட்டும் விண்ணப்பத்தினை மாற்றம் செய்து அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.<br><br>ஆனால் பல அலுவலகங்களில் இந்டைமுறை பின்பற்றப்படாமல் மனுதாரரின் விண்ணப்பமானது நகலெடுக்கப்பட்டு அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மனுதாரருக்கு பல்வேறு அலுவலகங்களிலிருந்தும் வெவ்வேறு விதமான தகவல்கள் அனுப்பப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. |

| | |
|---|---|
| | மேலும், அரசுக்கு வீண் செலவு ஏற்படுவதோடு மட்டுமன்றி மனுதாரருக்கு உரிய காலத்தில் சரியான தகவல்கள் கிடைக்கப்பெறாத நிலையும் ஏற்படுகிறது. இதேபோன்ற நிகழ்வில் மத்திய தகவல் ஆணையம் வழக்கு எண் CIC/SA/A/2015/001343 dated 25.01.2016 (Charanjeet Singh Bhatia (vs) Director of Local bodies)-ல் இதுபோன்ற நடைமுறையை கைவிட வேண்டுமென்றும், மனுதாரரின் விண்ணப்பத்தினை தேவையற்ற முறையில் பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பியதன் காரணமாக மனுதாரருக்கு உரிய காலக்கெடுவிற்குள் தகவல் கிடைக்கப்பெறாததால், மனுதாரருக்கு ரூ.1 லட்சம் இழப்பீட்டு தொகையாக வழங்கிடவும், தேவையற்ற முறையில் 29 அலுவலகங்களுக்கு மனுதாரரின் விண்ணப்பத்தினை மாற்றம் செய்த பொதுத் தகவல் அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களிடமிருந்து தலா ரூ.100 வீதம் பிடித்தம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. |
| கேள்வி: | மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் கேட்டுள்ள தகவல்கள் வட்டாட்சியர் அலுவலகத்தினைச் சார்ந்தது என்பதால் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 6(3)–ன்படி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றிவிட்டோம். மாற்றம் செய்யப்பட்ட விவரத்தையும் மனுதாரருக்கும் தெரிவித்து விட்டோம். மாற்றம் செய்து ஒரு மாதம் கழிந்த பின்னர், தான் கோரிய தகவல்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வழங்கவில்லை என்று மீண்டும் எங்கள் துறைக்கே முதல் மேல் முறையீட்டு விண்ணப்பத்தினை மனுதாரர் அனுப்பியுள்ளார். என்ன செய்வது? |
| பதில்: | தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண் 31988/2012 நாள் 08.10.2012 (திரு. இரா. பாலகிருஷ்ணன் (vs) பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவண்ணாமலை)–ல் “ஒரு பொது அதிகார அமைப்பு வெறொரு பொது அதிகார அமைப்புக்கு மனுவை மாறுதல் செய்தவுடன், எந்த ஒரு பொது அதிகார அமைப்புக்கு முதன் முதலில் மனு அனுப்பப்பட்டதோ, அந்த பொது அதிகார அமைப்பின் கடமை தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி முடிந்து விடுகிறது. அதன்பின்னர், மனு எந்தப் பொது அதிகார அமைப்பிற்கு மாறுதல் செய்யப்பட்டதோ அந்தப் பொது அதிகார அமைப்பைத்தான் மனுதாரர் அணுகவேண்டும்”<br><br>என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரை விண்ணப்பம் மாற்றம் செய்யப்பட்ட துறையை அணுகுமாறு அறிவுறுத்தலாம். |
| கேள்வி: | “கடந்த 06.05.2015 அன்று என்னால் தங்கள் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்ட புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை தகவலாக தெரிவிக்குமாறு” ஒரு மனுதாரர் RTI ல் கேட்டுள்ளார். மனுதாரர் அனுப்பியதாக தெரிவித்துள்ள விண்ணப்பம் எங்கள் துறைக்கு வரவில்லை. (இதை எங்கள் துறையில் நன்கு தேடிப் பார்த்த பின்பே உறுதி செய்து கொண்டோம்). இந்நிலையில் ஏற்கனவே தான் அனுப்பியதாக தெரிவித்துள்ள புகார் விண்ணப்பத்தின் (06.05.2015) நகலினை தற்போது அனுப்பியுள்ள RTI விண்ணப்பத்துடன் இணைத்துள்ளார். இப்போது நாங்கள் இப்புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமா? என்ன செய்ய வேண்டும்? |
| பதில்: | மனுதாரர் தான் அனுப்பிய புகார் மனுவின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றுதான் கேட்டுள்ளார். புகார் மனு அலுவலகத்திற்கு வரப்பெறாத நிலையில், புகார் |

| | |
|---|---|
| | மனு கிடைக்கப்பெறவில்லை என்பதைத்தான தகவலாக மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். |
| கேள்வி: | தென்னிந்திய மொழிகளின் பயன்பாடு குறித்த அரசாணையின் நகலினை வழங்கிடக் கேட்டு ஆந்திர மாநிலத்திலிருந்து எங்கள் துறைக்கு மனுதாரர் தெலுங்கு மொழியில் விண்ணப்பித்திருந்தார். அவர் அரசாணை எண், துறை, நாள் போன்ற விவரங்களை விண்ணபத்தில் தெரிவிக்கவில்லை. இருப்பினும் மிகுந்த சிரமத்திற்கிடையில் அவர் கேட்கும் தகவலுக்கு தொடர்புடைய அரசாணையை தேடியெடுத்து அனுப்பிவிட்டோம். அரசாணையை பெற்றுக்கொண்ட மனுதாரர் அவ்வரசாணையில் “படிக்கப்பட்டது” என்று குறிப்பிட்டுள்ளதற்கு கீழ் உள்ள 1958ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையை தனக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டு மேல்முறையீடு செய்தார். அவர் கேட்ட அரசாணையின் நகலினை வழங்கக் கோரி ஆவணக் காப்பகத்திற்கு கடிதம் அனுப்பினோம். நாங்கள் கேட்ட அரசாணையை கடந்த 1973ம் ஆண்டு எங்கள் துறையில் பணியாற்றிய உதவி பிரிவு அலுவலர் பெற்றுள்ளதாகவும் திரும்ப அவ்வரசாணை ஆவணக் காப்பகத்திற்கு இது நாள் வரை ஒப்படைக்கவில்லை என்றும் ஆவணக் காப்பகத்திலிருந்து கடிதம் வந்துள்ளது. என்ன செய்வது? |
| பதில்: | 1) மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1) ன் படி ஆங்கிலம் அல்லது இந்தி அல்லது வட்டார மொழியில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். இவர் தெலுங்கு மொழியில் விண்ணப்பிப்பத்திருப்பதால் மேற்படி சட்டப் பிரிவின்படி இவ்விண்ணப்பத்தினை ஏற்க இயலாது.<br>2) மனுதாரர் தகவல் கோரி விண்ணப்பிக்கும் பொழுது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)ன்படி தெளிவாக குறிப்பிட்டு விண்ணப்பித்திருக்க வேண்டும் (அரசாணை எண், துறை நாள் குறித்த விவரங்கள்) மனுதாரர் தெளிவாகக் குறிப்பிடாத நிலையில் சம்பந்தமில்லாத அரசாணையை அனுப்பி வைத்தது தவறு.<br>3) மனுதாரர் மேல்முறையீட்டு விண்ணபத்தில் புதிதாக தகவல்களை கோரியுள்ளார். ஏற்க இயலாது. மேல்முறையீட்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டும் |
| கேள்வி: | ஒரு பொது அதிகார அமைப்பில் ஒன்றிற்கும் மேற்பட்ட பொது தகவல் அலுவலர்கள் உள்ளனர். மனுதாரரின் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பொது தகவல் அலுவலருக்கு செல்லாமல் வேறொரு பொது தகவல் அலுவலருக்கு சென்று விட்டது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட பொது தகவல் அலுவலருக்கு விண்ணப்பத்தினை மாற்றம் செய்திட 5 நாட்கள் எடுத்துக் கொள்ளலாமா? |
| பதில்: | சட்டப் பிரிவு 6(3)ன்படி ஒரு பொது அதிகார அமைப்பிலிருந்து மற்றொரு பொது அதிகார அமைப்பிற்கு விண்ணப்பத்தினை மாற்றம் செய்ய 5 நாட்கள் எடுத்துக் கொள்ளலாமே தவிர ஒரே பொது அதிகார அமைப்பில் உள்ள ஒரு பொது தகவல் அலுவலரிடமிருந்து மற்றொரு பொது தகவல் அலுவலருக்கு மாற்றம் செய்திட 5 நாட்களை எடுத்துக் கொள்ளக்கூடாது. விண்ணப்பம் பெறப்பட்ட நாளன்றே மாற்றம் செய்திட வேண்டும். |
| கேள்வி: | எங்கள் துறைக்கு மனுதாரரின் விண்ணப்பம் 50 நாட்கள் கழித்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாமதமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் விண்ணப்பத்தினை மாற்றம் செய்த துறைக்கே அனுப்பிவிடலாமா? |
| பதில்: | தாமதமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதற்காக விண்ணப்பத்தினை ஏற்க மறுக்கக் கூடாது. |

| | |
|---|---|
| கேள்வி: | என்னுடன் பணிபுரியும் ஊழியர் அளித்துள்ள Income Tax Statementன் நகலினை கேட்டு ஒரு நபர் விண்ணப்பத்திருந்தார். நான் சட்டப் பிரிவு 8(1)(j) ன்படி வழங்க முடியாது என்று தெரிவித்து விட்டேன். உடனே மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்தார். எங்களுடைய அலுவலகத்தில் இணை இயக்குநர்தான் மேல்முறையீட்டு அலுவலர். நான் மனுதாரருக்கு சரியாக பதில் தரவில்லை என்று இணை இயக்குநர் என் மீது ஒழுங்கு நடவடிக்கை விதிகளின் அடிப்படையில் குற்றம் சுமத்தி தற்போது குற்றச்சாட்டு குறிப்பாணை அனுப்பியுள்ளார். |
| பதில்: | வருமான வரி கணக்கு விவரங்கள் தனிநபர் குறித்த தகவல்களாகும். சட்டப்பிரிவு 8(1)(j)ன் படி வழங்க வேண்டியதில்லை. இதையே மாண்பமை உச்ச நீதிமன்றமும் வழக்கு எண் S.L.P. (Civil) No.27734 of 2012 நாள் 03.10.2012 ல் வழங்கியுள்ள தீர்ப்பில் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே தாங்கள் (பொதுத் தகவல் அலுவலர்) எடுத்த முடிவு சரியானதாகும். பொது தகவல் அலுவலர் என்ற நிலையில் தாங்கள் எடுத்த முடிவிற்காக மேல் முறையீட்டு அலுவலர் (இணை இயக்குநர்) குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 20(1) மற்றும் 20(2) ன் படி பொது தகவல் அலுவலர் மீது தண்டம் விதிக்கவோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரைக்கவோ மாநில தகவல் ஆணையத்திற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. |
| கேள்வி: | உதவிப் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு நேரடியாக பதில் அனுப்பலாமா? |
| பதில்: | கூடாது. தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 7(1)ன்படி பொதுத் தகவல் அலுவலர்தான் மனுதாரருக்கு தகவல்களை அனுப்ப வேண்டும். |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்திற்கு வந்துள்ள விண்ணப்பத்தில் அனுப்புநர் முகவரியில் ''ஊர் பொதுமக்கள்'' என்று குறிப்பிடப்பட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.10/-ற்கு நீதிமன்ற வில்லை கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பத்தினை ஏற்கலாமா? |
| பதில்: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)ல் ''தகவல்பெற விரும்புகிற ஒருவர்'' (<u>A person</u> who desires to obtain any information under this act……..) என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ''ஒரு நபர்'' தான் தகவல் கேட்டு விண்ணப்பிக்க முடியும். ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் இச்சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியாது. எனவே இவ்விண்ணப்பத்தினை ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கலாம். |
| கேள்வி: | ஒரு விண்ணப்பதாரர் விண்ணப்பக் கட்டணமாக ரூ.10/–யும் நகலுக்கான கட்டணமாக ரூ.10/–யும் ஆக மொத்தம் ரூ.20/-ஐ பணமாக விண்ணப்பத்துடன் கவரில் வைத்து தபாலில் அனுப்பியுள்ளார். இவ்விண்ணப்பத்தினை ஏற்கலாமா? |
| பதில்: | 1) தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளின்படி மனுதாரர் விண்ணப்பக் கட்டணத்தை கவருக்குள் வைத்து அனுப்பியது ஏற்கத்தக்கதல்ல. மேலும் இந்திய அஞ்சல் துறை சட்டத்தின்படி கவருக்குள் பணத்தை வைத்து அனுப்பியது குற்றமாகும்.<br>2) தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 7(3)ன் படி நகலுக்கான கட்டணத்தை பொதுத் தகவல் அலுவலர் கணக்கிட்டு தெரிவித்த பின்புதான் மனுதாரர் நகலுக்கான கட்டணத்தை செலுத்த முடியும். முன்கூட்டியே விண்ணப்பக் கட்டணத்துடன் நகலுக்கான கட்டணத்தையும் சேர்த்து மனுதாரர் செலுத்துவதை சட்டம் அனுமதிக்கவில்லை. |

| | |
|---|---|
| | 3) மனுதாரர் அனுப்பிய ரூ.20/-ஐ உரிய கணக்குத் தலைப்பில் செலுத்தி விட்டு மனுதாரரின் விண்ணப்பத்தை நிராகரிக்கலாம். நிராகரிக்கப்பட்ட விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப் படவேண்டும். |
| கேள்வி: | மேல்முறையீட்டு விண்ணப்பத்திற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்க வேண்டுமா? |
| பதில்: | மேல்முறையீட்டு விண்ணப்பத்திற்கு விண்ணப்பக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை |
| கேள்வி: | மேல்முறையீட்டு அலுவலரின் கடமைகள் என்னென்ன? |
| பதில்: | மேல்முறையீட்டு விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் தீர்வு செய்ய வேண்டும் என்று மட்டுமே சட்டப் பிரிவு 19(6) குறிப்பிடுகிறது. ஆனால் மேல்முறையீட்டு அலுவலரின் கடமைகள் குறித்தோ அல்லது மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை எவ்வாறு தீர்வு செய்வது என்பது குறித்தோ சட்டத்தில் குறிப்பிடப் படவில்லை. |
| கேள்வி: | ஒருவர் வாழ்வு மற்றும் உரிமை குறித்த தகவல்களை சட்டப் பிரிவு 7(1)ன்படி 48 மணி நேரத்தில் வழங்கக் கேட்டுக்கொண்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 48 மணி நேரத்திற்குள் மனுதாரர் கேட்ட தகவல்களை வழங்காததால் தற்போது முதல் மேல்முறையீடு செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டினை எவ்வளவு மணி நேரத்திற்குள் தீர்வு செய்ய வேண்டும்? |
| பதில்: | சட்டப் பிரிவு 19(6)ன்படி அதிகபட்சம் 45 நாட்களுக்குள் முதல் மேல்முறையீட்டினை தீர்வு செய்ய வேண்டும். |
| கேள்வி: | மனுதாரர், தகவல் கேட்டு தலைமைச் செயலகத் துறை ஒன்றிற்கு விண்ணப்பக் கட்டணம் ஏதும் செலுத்தாமல் விண்ணப்பித்திருந்தார். ஆனால் மனுதாரர் கோரிய தகவல்கள் அனைத்தும் எங்கள் துறையைச் சார்ந்ததாகும். விண்ணப்பத்தினை பரிசீலித்த தலைமைச் செயலகத் துறை மனுதாரர் விண்ணப்பத்துடன் விண்ணப்பக் கட்டணம் ஏதும் செலுத்தாததால் மனுதாரரின் விண்ணப்பத்தினை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பமாக ஏற்க இயலவில்லை என்று மனுதாரருக்கு தெரிவித்துவிட்டு அவ்விண்ணப்பத்தினை தற்போது எங்கள் துறைக்கு சட்டப் பிரிவு 6(3)ன்படி மாற்றம் செய்துள்ளனர். என்ன செய்யலாம்? |
| பதில்: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது" A person, who desires to obtain any information under this Act, shall make a request in writing or through electronic means in English or Hindi or in the official language of the area in which the application is being made, <u>accompanying such fee as may be prescribed</u>" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தகவல் பெற விரும்புகிற ஒரு நபர் கண்டிப்பாக விண்ணப்பத்துடன் உரிய விண்ணப்பக் கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறது.<br><br>இந்நிலையில் மனுதாரர் விண்ணப்பக் கட்டணம் செலுத்தவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் விண்ணப்பத்தினை நிராகரித்திருக்க வேண்டும். ஆனால் சட்டப்பிரிவு 6(3)ன்படி மாற்றம் செய்தது தவறு. தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண் |

| | |
|---|---|
| | 37263 நாள் 01.02.2013 ல் (திரு. எஸ். தெய்வசிகாமணி (vs) மருத்துவக் கல்வி இயக்குநரகம், சென்னை 10) கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. "இன்றைய விசாரணையின் போது அலுவலக அசல் ஆவணங்களைப் பார்க்கும் போது மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் 21.06.2012 அன்று தாக்கல் செய்த மனுவில் உரிய வில்லை ஒட்டாமல் விண்ணப்பித்திருப்பது தெரிய வருகிறது. எனவே மனுதாரரின் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது." |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்திற்கு வந்த ஆர்.டி.ஐ. விண்ணப்பத்திற்கு பதில் அனுப்பினோம். மனுதாரர் அந்த முகவரியில் இல்லை என்று திரும்பி வந்துவிட்டது. எனவே கவரை கோப்புடன் வைத்து முடித்துவிட்டோம். தற்போது மனுதாரர் தகவல் வரவில்லை என்று மேல்முறையீடு செய்துள்ளார். மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடித உறையின்மேல் மனுதாரரின் பெயரை எங்கள் அலுவலக அனுப்புகை எழுத்தர் தவறாக எழுதியிருப்பதை இப்போதுதான் கண்டுபிடித்தோம். என்ன செய்வது? |
| பதில்: | ஒரு தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பம் அலுவலகத்தில் பெறுவதிலிருந்து அதற்கான தகவலை மனுதாரருக்கு அனுப்புவது வரை அனைத்து நிலைகளிலும் பொதுத் தகவல் அலுவலர் பொறுப்பாகிறார். தவறான முகவரியை குறிப்பிட்டு தகவல் அனுப்பியது மிகப் பெரிய பிழையாகும். இதனால் தேவையற்ற அஞ்சல் செலவு ஏற்படுத்தப்பட்டது மட்டுமின்றி விண்ணப்பதாரருக்கு உரிய காலத்தில் தகவல் செல்லாததால் மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்திட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். இதன் மூலம் தனக்கு ஏற்பட்ட வீண் சிரமத்திற்காக மாநில தகவல் ஆணையத்தில் சட்டப் பிரிவு 19(8)(b) ன்படி இழப்பீடு கோர முடியும். எனவே, மனுதாரர் கோரிய தகவல்களை சட்டப் பிரிவு 7(6)ன்படி உடனடியாக அளிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு மேல்முறையீட்டு அலுவலர் உத்தரவிடவேண்டும். பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு அளிக்கும் தகவலுடன், ஏற்பட்ட தவற்றிற்கு வருத்தம் தெரிவிக்கலாம். |
| கேள்வி: | ஒரு மனுதாரர் 5 பக்கங்களின் நகல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டு விண்ணப்பித்திருந்தார். இந்த ஐந்து பக்கங்களையும் ஸ்கேன் செய்து தன்னுடைய e-mail ல் அனுப்பக் கோரியுள்ளார். இதில் எழும் சந்தேகம்<br>a) ஸ்கேன் செய்து அனுப்புவதற்கு பக்கம் ஒன்றிற்கு ரூ.2 வீதம் வசூலிக்கலாமா?<br>b) வெளியில் கடையில் ஸ்கேன் செய்து அனுப்ப பக்கம் ஒன்றிற்கு ரூ.10 கேட்கிறார்கள். எனவே ஐந்து பக்கத்திற்கும் சேர்த்து ரூ.50 வசூலிக்கலாமா?<br>c) e-mail ல் அனுப்புவதற்கென கட்டணம் ஏதும் உள்ளதா? |
| பதில்: | மனுதாரர் கோருவது போன்று ஸ்கேன் செய்து அனுப்புவதற்கு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளில் கட்டணம் நிர்ணயம் செய்யப்படவில்லை.<br>1) தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைக் கட்டண விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணத்தின் அடிப்படையில்தான் கட்டணங்களை வசூலிக்க வேண்டுமே தவிர பக்கங்களை ஸ்கேன் செய்வதறகாக பக்கம் ஒன்றிற்கு ரூ.10 வீதம் மனுதாரரிடமிருந்து வசூலிக்கக் கூடாது<br>2) e-mail ல் தகவல்களை அனுப்புவதற்கு மாநிலத்தில் இன்னும் விதிகளில் மாற்றம் செய்யப்படவில்லை. எனவே பக்கம் ஒன்றிற்கு ரூ.2 வீதம் கட்டணம் வசூலித்து அவர் கோரும் நகல்களை அனுப்பி வைக்கலாம். |

| | |
|---|---|
| கேள்வி: | மூன்றாம் தரப்பினர் என்றால் என்ன? |
| பதில்: | தகவல் கோருபவர் 1வது நபர். தகவல் அளிப்பவர் 2வது நபர். இவர்கள் இருவரை தவிர்த்து மற்ற அனைவரும் மூன்றாவது தரப்பினர். |
| கேள்வி: | ஒரு அரசு ஊழியர் தனது மேல் அதிகாரியிடம் RTI ல் கேள்வி கேட்கலாமா? |
| பதில்: | இச்சட்டத்தின்படி தகவல்களை மட்டுமே கோரலாம். கேள்விகள் கேட்க முடியாது. அரசு ஊழியரும் இந்தியக் குடிமகனே. எனவே சட்டப் பிரிவு 3–ன் படி அரசு ஊழியரும் தகவல் பெறும் உரிமைச சட்டத்தின்படி தகவல்களை மட்டுமே கேட்டுப் பெறலாம். |
| கேள்வி: | சிறைக் கைதிகள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தினை சமீப காலமாக அதிகளவு பயன்படுத்தி வருகிறார்கள். சிறைக் கைதிகளுக்கு விண்ணப்பக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு உண்டா? குறிப்பாக மரண தண்டனை கைதிகள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி கேள்விகள் கேட்கலாமா? இவர்களுக்கு விண்ணப்பக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு இருக்கிறதா? |
| பதில்: | வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களுக்கு மட்டுமே விண்ணப்பக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகளுக்கு விலக்களிப்பு இல்லை. எனவே, விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும். மரண தண்டனை கைதிகளும் இந்தியக் குடிமகன்கள் என்பதால் அவர்களும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி தகவல்களை கோரலாம் |
| கேள்வி: | மனுதாரருக்கு இடைக்கால பதில்கள் அனுப்பலாமா? |
| பதில்: | இடைக்கால பதில்கள் அனுப்பக்கூடாது. சட்டப் பிரிவு 7(1)ன்படி 30 நாட்களுக்குள் தகவல்கள் அளிக்கப்பட வேண்டும். இதேபோன்ற நிகழ்வில் மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண் 5533 நாள் 27.07.2010ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.<br>*The Commission has also taken note that the public authority has **sent interim replies**. But the Act does not provide for interim replies just to gain time to delay supply of information.* |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலருக்கும் அவரது மனைவிக்கும் விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அவரது மனைவி, கணவருடைய சம்பளம், சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் விவரங்கள், சொசைட்டி லோன், சேமிப்பு விவரங்கள். GPF விவரங்கள் கேட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி விண்ணப்பித்துள்ளார். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருப்பதை காரணம் காட்டி தகவல்களை வழங்க மறுக்கலாமா? |
| பதில்: | மனைவி மூன்றாம் தரப்பினர் அல்ல. நீதிமன்றத்தால் விவாகரத்து வழங்கப்படாதவரை கணவரது தகவல்களை கேட்டுப்பெற மனைவிக்கு உரிமை உள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற காரணத்தை காட்டி தகவல்களை வழங்க மறுக்கக் கூடாது. எனவே அவர் கோரும் தகவல்களை வழங்க வேண்டும். இக்கருத்தையே பல்வேறு மாநில தகவல் ஆணையங்களும் தங்களின் தீர்ப்பில் உறுதி செய்துள்ளன. |

| | |
|---|---|
| கேள்வி: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் *2005*, சட்டப் பிரிவு *19(8)*(b) ன்படி மனுதாரருக்கு இழப்பீட்டை பொதுத் தகவல் அலுவலர் அளிக்க வேண்டுமா? அல்லது பொது அதிகார அமைப்பு அளிக்க வேண்டுமா? |
| பதில்: | பொது அதிகார அமைப்புதான் வழங்க வேண்டும். தகவல் பெறும் உரிமைச் சட்டம் *2005*, சட்டப் பிரிவு *19(8)*(b) கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது<br>19(8)(***b)*:-** *require* ***<u>the public authority</u>*** *to compensate the complainant for any loss or other detriment suffered;* |
| கேள்வி: | பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள பதிலினை எதிர்த்து மனுதாரர் தற்போது முதல் மேல்முறையீடு செய்துள்ளார். இம்மேல்முறையீட்டு விண்ணப்பத்திற்கு எங்கள் பிரிவில் பதில் தயார் செய்துள்ளோம். இது சம்பந்தமான கோப்பினை பொதுத் தகவல் அலுவலர் பார்வையிட்டபின்பு மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பலாமா? அல்லது நேரடியாக மேல்முறையீட்டு அலுவலருக்கே அனுப்பலாமா? |
| பதில்: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் *2005*, சட்டப் பிரிவு *19(5)*ல் <u>In any appeal proceedings</u>, the onus to prove that a denial of a request was justified shall be on the State Information Officer, who denied the request எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது மேல்முறையீட்டு நடவடிக்கைகள் எவற்றிலும் கோரிக்கையின் மறுப்பு நியாயமானது என்று மெய்ப்பிக்கும் பொறுப்பு பொதுத் தகவல் அலுவலரையே சார்ந்ததாகும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் பார்வையிட்டபின்பு கோப்பினை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பலாம். |
| கேள்வி: | ஒரு மனுதாரர் பல்வேறு துறைகளுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பங்களை அனுப்பிவிட்டு அதன் நகல்களை எங்கள் துறைக்கும் அனுப்பி வருகிறார். உதாரணத்திற்கு கால்நடைத் துறை சம்பந்தமான கேள்விகளை கால்நடைத் துறையிடம் கேட்டுவிட்டு அதன் நகலினை தீயணைப்புத் துறையான எங்கள் துறைக்கு அனுப்பி வருகிறார். இந்நகல் விண்ணப்பத்தினை சட்டப் பிரிவு *6(3)*ன்படி கால்நடைத் துறைக்கு மாற்றம் செய்ய வேண்டுமா? |
| பதில்: | தேவையில்லை. சட்டப் பிரிவு *6(1)*ன்படி மனுதாரர் விண்ணப்பக் கட்டணம் செலுத்தவில்லை. எனவே நடவடிக்கை தேவையில்லை. |
| கேள்வி: | மனுதாரருக்கு பதில் அனுப்பும்போது *30* நாட்களில் அனுப்ப வேண்டும் என்று சட்டம் குறிப்பிடுகிறது. இதில் எழும் சந்தேகம் *30*வது நாள் நம் அலுவலகத்திலிருந்து பதில் அனுப்ப வேண்டுமா? அல்லது மனுதாரருக்கு அவர் விண்ணப்பித்த நாளிலிருந்து *30*ம் நாளிற்குள் அவருக்கு கிடைக்குமாறு பதில் அனுப்ப வேண்டுமா? |
| பதில்: | விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து *30* நாட்களுக்குள் தகவல்கள் அளிக்க வேண்டும் என்று சட்டம் குறிப்பிடுகிறது. |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலரின்மீது நடவடிக்கை எடுக்குமாறு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் மனுதாரர் விண்ணப்பித்துள்ளார். நடவடிக்கை எடுத்து பதில் அனுப்ப வேண்டுமா? |
| பதில்: | இச்சட்டத்தின்படி மனுதாரர் தகவல்களை மட்டுமே கோரமுடியும். நடவடிக்கை கோர இயலாது |

| | |
|---|---|
| கேள்வி: | எங்கள் அலுவலகத்திற்கு ஒரு மனுதாரர் தகவல் கேட்டு விண்ணப்பித்திருந்தார். பதில் அனுப்பிவிட்டோம். அளித்த தகவல்கள் சரியில்லை என்று அவருக்காக வழக்கறிஞர் மேல்முறையீடு செய்துள்ளார். மனுதாரர்தான் முதல் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்தால், சட்டப் பிரிவு 19(1)ன்படி யார் வேண்டுமானாலும் மேல்முறையீடு செய்யலாம் என்கிறார். 19(1)லும் <u>any person</u> who. does not receive a decision within thirty days……………… என்றுதான் உள்ளது. யார் வேண்டுமானாலும் முதல் மேல்முறையீடு செய்யலாமா? |
| பதில்: | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 19(1)ன்படி முதல் மேல்முறையீடு செய்பவர்களை இரண்டு வகையாக பிரிக்கலாம்.<br>a) விண்ணப்பித்து 30 நாட்கள் கடந்தும் எந்தவொரு தகவலுமே கிடைக்கப்பெறாதவர் (அல்லது)<br>b) திருப்தியற்ற தகவல்கள் கிடைக்கப்பெற்றவர்<br>மேற்படி இருவகையான நபர்களில் யார் வேண்டுமானாலும் முதல் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். இதைத்தான் any person <u>who. does not receive a decision within the time</u> specified in sub section (1) or clause (a) of sub-section (3) of section 7. **OR** <u>is aggrieved by a decision of the Central Information Officer or State Public Information Officer</u>, as the case may be………………… என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, தகவல் கோரி விண்ணப்பித்தவர்தான் முதல் மேல்முறையீடு செய்ய வேண்டும் |
| கேள்வி: | ஒரு மனுதாரர் 40 பக்கங்கள் கொண்ட தகவல் கேட்டு 01.05.2015 அன்று விண்ணப்பித்திருந்தார். நாங்கள் 10.05.2015 அன்றே 40 பக்கங்களுக்கும் பக்கம் ஒன்றிற்கு ரூ.2 வீதம் ரூ.80 செலுத்துமாறு மனுதாரரை கேட்டுக்கொண்டு கடிதம் அனுப்பிவிட்டோம். இதுவரை அவர் நகலுக்கான தொகை செலுத்தவில்லை. எங்கள் கடிதம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் அவர் நகலுக்கான தொகையை செலுத்த வேண்டும்? |
| பதில்: | பொதுத் தகவல் அலுவலரின் கடிதம் கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் மனுதாரர் நகலுக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. |
| கேள்வி: | மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட கருவூலகங்கள் பற்றிய தகவல்கள் வேண்டி கருவூலக் கணக்குத் துறை இயக்குநரகத்திற்கு மனுதாரர் விண்ணப்பித்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் கருவூலக் கணக்குத் துறை இயக்குநரகத்தில் இல்லை. இத்தகவல்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்டக் கருவூலகங்களிலும் பராமரிக்கப்பட்டு வரும் தகவல்களாகும். எனவே, மனுதாரர் கோரும் தகவல்கள், கருவூலக் கணக்குத் துறையில் இல்லாத நிலையில் மனுதாரரின் விண்ணப்பத்தினை சட்டப் பிரிவு 6(3)ன்படி அனைத்து மாவட்ட கருவூலகங்களுக்கும் மாற்றலாமா? அல்லது அனைத்து மாவட்ட கருவூலகங்களிலிருந்தும் தகவல்களை சேகரித்து மனுதாரருக்கு வழங்கலாமா? |
| பதில்: | மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் தங்கள் வசம் இல்லாத நிலையில் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(3)ன்படி தகவல்கள் இருக்கின்ற வேறு ஒரு பொது அதிகார அமைப்பிற்கு மட்டுமே விண்ணப்பத்தினை மாற்றம் செய்ய வேண்டும். பல்வேறு பொது அதிகார அமைப்புகளுக்கு மனுதாரரின் விண்ணப்பத்தினை மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதேபோன்று பல்வேறு பொது அதிகார |

| | |
|---|---|
| | அமைப்புகளிடமிருந்தும் தகவல்களை சேகரித்து மனுதாரருக்கு வழங்க வேண்டிய அவசியமும் இச்சட்டத்தில் இல்லை. எனவே, மனுதாரரை ஒவ்வொரு மாவட்ட கருவூல பொதுத் தகவல் அலுவலருக்கும் சட்டப் பிரிவு 6(1)ன்படி தனித்தனியே விண்ணப்பக் கட்டணம் செலுத்தி தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்த வேண்டும். |
| கேள்வி: | ஒரு மனுதாரர் தகவல்கள் கேட்டு எங்கள் அலுவலகத்திற்கு விண்ணப்பித்திருந்தார். அவர் கேட்ட தகவல்களை 30 நாட்களுக்குள் அளித்துவிட்டோம். நாங்கள் அளித்த தகவல்களில் திருப்தியடையாததால் சட்டப் பிரிவு 19(1)ன்படி எங்களிடம் முதல் மேல்முறையீடு செய்யாமல் ஆணையத்திடம் சட்டப் பிரிவு 18ன்படி புகார் செய்துள்ளார். எங்களிடம் முதல் மேல்முறையீடு செய்யாமல், ஆணையத்திடம் நேரடியாக புகார் செய்ய சட்ட விதிகளில் இடமுள்ளதா? புகாரின் அடிப்படையில் மனுதாரருக்கு தகவல் ஆணையம் இழப்பீடு வழங்கி உத்தரவிடமுடியுமா? |
| பதில்: | மனுதாரர் சட்டப் பிரிவு 18ன்படி புகார் மனுவினை ஆணையத்திற்கு அனுப்பலாம். அதே நேரத்தில் மேல்முறையீட்டு அலுவலரிடமும் முதல் மேல்முறையீடும் செய்யலாம். மனுதாரர் ஒரே சமயத்தில் இரு வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது குறித்து சட்டத்தில் தெளிவாக்கப்படவில்லை. அதேசமயத்தில் சட்டப் பிரிவு 18ன்படியான புகார் மனுவினை மாநில தகவல் ஆணையம் விசாரித்து மனுதாரருக்கு சட்டப் பிரிவு 19(8)(b)ன்படி இழப்பீடு வழங்குமாறு உத்தரவிடமுடியாது என்று மாண்பமை புதுதில்லி உயர்நீதிமன்றம் வழக்கு எண் LPA 195/2011 dated 09.04.2013 ல் தீர்ப்பு வழங்கியுள்ளது. |
| கேள்வி: | இரண்டு வருடத்திற்கு முன்னால் பொதுத் தகவல் அலுவலர் சரியாக தகவல்களை அளிக்கவில்லை என்பதற்காக ஆணையத்திலிருந்து விசாரணைக்கு அழைப்பு வந்துள்ளது. இப்போது பணியிலுள்ள பொதுத் தகவல் அலுவலர் செல்ல வேண்டுமா? அல்லது தகவல் வழங்கிய பொதுத் தகவல் அலுவலர் செல்ல வேண்டுமா? |
| பதில்: | தற்போது பணியிலுள்ள பொதுத் தகவல் அலுவலர்தான் விசாரணைக்கு ஆஜராக வேண்டும். |
| கேள்வி: | 20 வருடங்களுக்கு முந்தைய தகவல்களை வழங்க வேண்டியதில்லை என்று கூறுகிறார்களே? இக்கூற்று சரிதானா? |
| பதில்: | தவறான தகவல். இருபது வருடங்களுக்கு முந்தைய தகவல்கள் பொது அதிகார அமைப்பில் இருந்தால் வழங்க வேண்டும். இதற்கு மாண்பமை மாநில தகவல் ஆணையம் வழக்கு எண் 57971 (ம) 58218/F/2013 ல் இதுசம்பந்தமான சட்டப் பிரிவு 8(3) பிரிவினை ஆராய்ந்து வழங்கிய தீர்ப்பீனை இங்கே எடுத்தாள்வது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.<br><br>இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தனது 31.07.2013ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்த விவரத்தையே இன்றைய விசாரணையின் போதும் வலியுறுத்தி, மனுதாரர் கோரும் தகவல்கள் அடங்கிய கோப்பினை தேடியும் கிடைக்கப் பெறவில்லை எனவும், அவை 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையாக உள்ளதால் கால அளவை விஞ்சியுள்ளதாக இருப்பதாகவும் தெரிவிக்கிறார். இது ஏற்கத்தக்க பதில் இல்லை<br><br>மனுதாரர் கோரும் தகவல்கள் அடங்கிய கோப்புகள், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் |

| | |
|---|---|
| | கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். பொதுத் தகவல் அலுவலர், சம்பந்தப்பட்ட திருத்தங்கல் காவல் நிலைய ஆய்வாளரை அறிவுறுத்தி, அவரிடமிருந்து தகவல்களைப் பெற்று மனுதாரருக்கு வழங்கியிருக்க வேண்டும். ஒருவேளை மனுதாரர் தகவல் கோரும் சம்பந்தப்பட்ட கோப்புகள் கிடைக்கப்பெறவில்லை என்ற நிலைப்பாட்டினை பொதுத் தகவல் அலுவலர் எடுப்பாரேயானால், ஏன் அந்த கோப்புகள் கிடைக்கப்பெறவில்லை என்ற விளக்கத்தினை முன்னிடவேண்டும்.<br><br>அந்தக் கோப்புகள் விதிகளின்படி காலப்போக்கில் அழிக்கப்பட்டுவிட்டது என்ற நிலை ஏற்பட்டிருக்குமானால், அதனை மெய்ப்பிக்கும்பொருட்டு அதற்கான அலுவலக ஆணைகளை முன்னிடவேண்டும். இந்த நடைமுறையைப் பின்பற்றாமல் தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை என்று சொல்லும் கூற்றினை ஏற்க இயலாது. அத்தகைய கூற்றுக்கு **RTI** சட்டத்தில் இடமுமில்லை. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப் பிரிவு 8(3) பின்வருமாறு:<br><br>8. Exemption from disclosure of information. –<br><br>(3) Subject to the provisions of clause (a), (c) and (1) of sub-section (1), any information relating to any occurrence, event or matter which has taken place, occurred or happened twenty years before the date on which any request is made under section 6 shall be provided to any person making a request under that section; “<br><br>மேற்குறிப்பிட்டுள்ள பிரிவு 8(3) இரண்டு வகையான தகவல்கள் (dichotomy of information) பற்றியதாகும். அதாவது 20 வருட காலத்திற்குள்ளான ஆவணங்கள் மற்றும் 20 வருடங்களுக்கு மேற்பட்ட ஆவணங்கள் (within 20 years and more than 20 years) என்பது பற்றியதாகும். இந்த வகைமுறையை இச்சட்டத்தின் இலட்சியங்களின்/நோக்கங்களின் பின்னணியில் பார்க்கும்பொழுது, முதல்வகையான ஆவணங்கள் 20 ஆண்டுகள் வரையில் வெளியிடாமல் இருப்பதற்கான பாதுகாப்பைப் பெற்றிருக்கும். இரண்டாவது வகையான ஆவணங்கள் 20 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், அந்தப் பாதுகாப்பை இழந்துவிடும் (protection from disclosure). இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள் 20 ஆண்டுகளைக் கடந்தவை, சொல்லப்போனால், 35 ஆண்டுகள் நிறைவு பெற்றவை எனத் தெரியவருகிறது. அவ்வாறானால், இந்த வகைமுறைகளின்படி அந்த ஆவணங்களின் நகல்களை வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக, அந்த ஆவணங்கள் 20 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், அவைத் தேடிப்பார்த்தும் கிடைக்கப்பெறவில்லை என்று பிரிவு 8(3)ற்கு எதிர்மறையான பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வகைமுறையைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட குறைபாட்டைச் சுட்டிக்காட்டுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். |
| கேள்வி: | எங்கள் அலுவலகத்திற்கு ஒருவர் 10.06.2015 அன்று விண்ணப்பம் அனுப்பினார். ஆனால் விண்ணப்பக் கட்டணத்தை 20.06.2015 அன்றுதான் மணி ஆர்டர் மூலம் அனுப்பினார். நாட்கள் கணக்கிடும்போது 10.06.2015 அன்றிலிருந்து கணக்கிட வேண்டுமா? அல்லது 20.06.2015 அன்றிலிருந்து கணக்கிட வேண்டுமா? |
| பதில்: | மணி ஆர்டர் பெறப்பட்ட நாளான 20.06.2015 அன்றிலிருந்துதான் கணக்கிட வேண்டும். |
| கேள்வி: | மனுதாரர் எங்கள் அலுவலகத்திலுள்ள ஒரு கோப்பினை பார்வையிட அனுமதி கேட்டார். நாங்கள் அனுமதித்த நாளில் அவர் வரவில்லை. அன்றைய தினம் தனக்கு |

| | |
|---|---|
| | முக்கியமான வேலைகள் இருந்ததால் வரவில்லை என்று கூறி தற்போது தன்னை அனுமதிக்குமாறு கேட்கிறார். அனுமதிக்கலாமா? |
| பதில்: | நியாயமான காரணங்களை அவர் தெரிவித்தால் அனுமதிக்கலாம். தன்னை அனுமதிக்க கோருவது குறித்து எழுத்துப்பூர்வமாக அவரிடம் கடிதம் வாங்கிக்கொண்டு அனுமதிப்பது நல்லது. |
| கேள்வி: | மணி ஆர்டர் மூலம் பெறப்படும் விண்ணப்பத் தொகையை என்ன செய்வது? |
| பதில்: | விண்ணப்பத் தொகை கிடைக்கப்பெற்ற அன்றே பணப்பதிவேட்டில் பதிவுசெய்து உரிய கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். |
| கேள்வி: | மனுதாரர், சில தகவல்கள் கேட்டு உதவிப் பொதுத் தகவல் அலுவலரிடம் விண்ணப்பித்தார். உதவிப் பொதுத் தகவல் அலுவலர், அவ்விண்ணப்பத்தினை ஐந்து நாட்களுக்குள் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பி வைத்துவிட்டார். இவ்விவரத்தினை மனுதாரருக்கு உதவிப் பொதுத் தகவல் தெரிவிக்க வேண்டுமா? |
| பதில்: | சட்டப் பிரிவு 6(3)ன்படி ஒரு பொது அதிகார அமைப்பிலிருந்து மற்றொரு பொது அதிகார அமைப்பிற்கு மாற்றம் செய்யப்படும் விண்ணப்பங்கள் குறித்து மட்டுமே மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். |
| கேள்வி: | ஒரு மனுதாரர், சில தகவல்கள் கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு விண்ணப்பித்திருந்தார். அவ்விண்ணப்பத்தினை சட்டப் பிரிவு 6(3)ன்படி எங்கள் அலுவலகத்திற்கு மாற்றம் செய்துவிட்டார்கள். மனுதாரர் கேட்டுள்ள விவரங்களை பார்க்கும்போது, அத்தகவல்கள் வேறொரு துறையைச் சார்ந்ததாகும். தவறுதலாக எங்கள் துறைக்கு மாற்றம் செய்துவிட்டதால் மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கே அவ்விண்ணப்பத்தினை திருப்பி அனுப்பிவிடலாமா? |
| பதில்: | கூடாது. தகவல்கள் இருக்கின்ற பொது அதிகார அமைப்பிற்கு சட்டப் பிரிவு 6(3)ன்படி தாங்களே மாற்றம் செய்து அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கவும். |
| கேள்வி: | ஒரு மனுதாரர் சில ஆவணங்களை பார்வையிட அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தார். அவர் கோரியிருந்த ஆவணங்களை சம்பந்தப்பட்ட சார்நிலைக் கருவூலத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டுக்கொள்ள அனுமதியளித்து கடிதம் அனுப்பிவிட்டோம். தன்னால் சார்நிலைக் கருவூலத்திற்கு சென்று பார்க்க இயலாது என்றும் மாவட்ட கருவூலத்தில் வைத்து அவ்வாவணங்களை பார்வையிட ஏற்பாடு செய்து தருமாறு கேட்டு தற்போது மனுதாரர் கடிதம் அனுப்பியுள்ளார். என்ன செய்வது? |
| பதில்: | இச்சட்டத்தின்படி கோரிக்கைகளை நிறைவேற்றித் தர இயலாது. மனுதாரர் கோரியவாறு ஆவணங்களை சார்நிலைக் கருவூலத்திலிருந்து மாவட்டக் கருவூலத்திற்கு கொண்டு வருவதினால், பொது அதிகார அமைப்பின் பணிகள் உரிய விகிதத்தில அல்லாமல் திசை திருப்பும் நோக்கத்தில் அமையவும் வாய்ப்புள்ளது. எனவே ஆவணங்களின் பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட சார்நிலைக் கருவூலத்திற்கு சென்று ஆவணங்களை பார்வையிட்டுக் கொள்ளுமாறு மனுதாரரை மீண்டும் அறிவுறுத்தலாம். |

| | |
|---|---|
| கேள்வி: | ஒரு மனுதாரர், சில பக்கங்களின் xerox நகல்கள் கேட்டு விண்ணப்பித்திருந்தார். சம்பந்தப்பட்ட பக்கங்களை xerox எடுத்து தரவேண்டுமா? அல்லது அதனை தட்டச்சு செய்து True copy என்று குறிப்பிட்டு தகவல் அளிக்கலாமா? |
| பதில்: | *தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 7(9)ல்* ........<br>தகவல் நாடப்பட்ட படிவத்திலேயே சாதாரணமாக அளிக்கப்படுதல் வேண்டும் (information shall ordinarily be provided in the form in which it is sought….) என்று குறிப்பிடுகிறது.<br>*சட்டப்பிரிவு* 2(j) *ல்* True copy/Xerox copy/photostat copy *குறித்து தெளிவாக்கப்படவில்லை.*<br>*சட்டப் பிரிவு* 2(j)(ii)*ல் சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவுருக்கள் குறித்தும், கணினி அல்லது பிறசாதனங்கள் எவற்றிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை* printout *எடுத்துக்கொள்ளவும் அனுமதியளிக்கிறது.*<br>*எனவே, மனுதாரர் கோரும் பக்கங்களை தட்டச்சு செய்து* True copy என்று குறிப்பிட்டு வழங்கலாம். இதே போன்ற நிகழ்வில் மாண்பமை கல்கத்தா உயர்நீதிமன்றம், வழக்கு எண் W.P. No.32187(W) of 2013 நாள் *15.01.2014ல்* மனுதாரர் கோரிய பக்கங்களின் நகல்களை True copy வடிவத்திலும் வழங்குவதை உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது. |



# முக்கியத் தீர்ப்புரைகள்

# தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

# முக்கியத் தீர்ப்புரைகள்

## பொருளடக்கம்


| வ.எண் | தீர்ப்புரைகள் |
|---|---|
| 1. | பொதுத் தகவல் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர்கள் நீதியியல் அலுவலர்களுக்கு *(Quasi judicial authorities)* ஒப்பானவர்கள் |
| 2. | குறைவாக விண்ணப்பக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்பதற்காக விண்ணப்பத்தினை திருப்பி அனுப்பக்கூடாது |
| 3. | தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பங்களை பெற மறுத்தல் கூடாது |
| 4. | விண்ணப்பங்கள் அனைத்து நாட்களிலும் பெறப்பட வேண்டும் |
| 5. | பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் அலுவலகப் பணியிடங்கள் காலியாக இருப்பதை காரணம் காட்டி மனுக்கள் மீது தகவல் வழங்குவதை தாமதப்படுத்துவது இச்சட்டத்தின்கீழ் குற்றமாகும். |
| 6. | ஆறுமாதங்களாக கோப்பினை தேடி வருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. |
| 7. | அலுவலகத்தில் வெள்ளையடிக்கும் பணி நடைபெற்றதால் கோப்புகள் இடம் மாறிவிட்டன |
| 8. | தகவல்களை கோருவதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவம் ஏதும் இல்லை |
| 9. | குறிப்பிட்ட படிவத்தில்தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று விண்ணப்பதாரரை நிர்பந்திக்கக்கூடாது |
| 10. | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல்களை மனுதாரர் பயன்படுத்துவது அவரது தனிப்பட்ட உரிமையாகும் |
| 11. | மனுதாரருடன் பேசும்போது கவனத்துடன் இருக்க வேண்டும் |
| 12. | கையொப்பமிடப்படாத விண்ணப்பங்களை நிராகரிக்கலாம் |
| **சட்டப் பிரிவு 2(f):-** | |
| 13. | சட்டப் பிரிவு 2(f) மற்றும் 2(j)ற்குட்பட்டு தகவல்களை வழங்க வேண்டும் |
| 14. | கோப்பு பரிசீலனையில் உள்ள நிலையில் தகவல்கள் வழங்க வழிவகையில்லை |
| 15. | குறிப்புக் கோப்பு (Note file) வழங்க வேண்டியதில்லை |
| 16. | கணவரது சம்பள விவரங்களை மனைவி கேட்டால் அளிக்க வேண்டும் |
| 17. | கோப்பு அழிக்கப்பட்டிருந்தால் அதற்கான ஆதாரத்தினை அளிக்க வேண்டும் |
| 18. | சுருக்கொப்பமிட்டுள்ள அலுவலரின் பெயர் மற்றும் பதவி குறித்த விவரங்கள் கோப்பில் இராது |
| 19. | விடைத்தாள் நகல்களை வழங்க வேண்டும் |

| வ.எண் | தீர்ப்புரைகள் |
|---|---|
| 20. | Case Sheet copy மற்றும் Discharge Summary Copy ஆகியவற்றை சம்பந்தப்பட்ட நபரே கோரும்போது அளிக்க வேண்டும் |
| 21. | கேள்வி வடிவத்தில் கோரப்படும் தகவல்கள் |
| 22. | ஆவணங்களில் உள்ள தகவல்களை கேள்வி வடிவத்தில் கேட்டால் வழங்க வேண்டும் |
| 23. | அரசின் கொள்கை முடிவு/நிர்வாக நடவடிக்கை முடிவுறாத நிலையில் தகவல்களை கோரினால் வழங்க வேண்டியதில்லை |
| 24. | தான் அளித்த மனுவின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? |
| 25. | அரசு இணையதளத்தில் உள்ள தகவல்கள் |
| 26. | சட்டப் பிரிவு 2(f)ன்கீழ் தகவல்கள் என்ற இலக்கணத்தின்கீழ் வராத விவரங்கள் |
| 27. | ஏன்? எதற்கு? என்ன காரணம்? எப்படி? சரியா? தவறா? |
| 28. | ஏன் செய்யவில்லை? ஏன் தயக்கம்? |
| 29. | ஏன்? ஏன்? ஏன்? |
| 30. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா? நீதிமன்றம் செல்ல வேண்டுமா? |
| 31. | உள்ளதா? இல்லையா? ஆய்வு செய்தீர்களா? இல்லையா? |
| 32. | "ஏன்" என்ற கேள்வி சட்டப் பிரிவு 2(*f*)ற்குட்படாதது - பம்பாய் நீதிமன்றம் |
| 33. | சட்டம் குறித்த ஆலோசனைகள் |
| 34. | யூகங்களின் அடிப்படையிலான கேள்விகள் |
| 35. | எதிர்கால நடவடிக்கைகள் |
| 36. | பொதுத்தகவல் அலுவலரின் சொந்தக் கருத்துக்களை வழங்கக் கோருதல் |
| 37. | ஆலோசனைகளை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்க இயலாது |
| 38. | அறிவீர்களா? |
| 39. | மருத்துவ ஆலோசனைகள் |
| 40. | குறைதீர் நடவடிக்கைகள் கோர இயலாது |
| 41. | தகவல்களை உருவாக்கித் தர இயலாது |
| 42. | இனவாரியாகப் பிரிப்பது, தொகுப்பது, மனுதாரர் விரும்பும் பிரிவுகளில் அளிப்பது போன்றவை தகவல்களை உருவாக்குவதற்குச் சமமாகும் |
| 43. | உருவாக்கப்பட்ட தகவல்கள் வழங்குவதை பொதுத் தகவல் அலுவலர்கள் தவிர்க்க வேண்டும் |
| 44. | கோப்பில் உள்ள தகவல்களை மாற்றி வழங்கக் கூடாது |
| 45. | மொழியாக்கம் செய்து வழங்க இயலாது |

| வ.எண் | **தீர்ப்புரைகள்** |
|---|---|
| 46. | புதிதாக தகவல்களை உருவாக்கி மனுதாரருக்கு வழங்க வேண்டியதில்லை |
| 47. | கோப்பிலுள்ள வரைபடம் தரப்படாமல் கையினால் வரைந்த ஒரு வரைபடம் தரப்பட்டுள்ளதை ஆணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது |
| 48. | இடத்தை பார்வையிட்டு தகவல்களை வழங்க வேண்டியதில்லை |
| 49. | விடுப்பு குறித்த தகவல்களை வழங்க மறுக்கக்கூடாது |
| 50. | வருகைப் பதிவேட்டின் நகல்களை வழங்க வேண்டும் |
| 51. | வழக்கில் ஒரு தரப்பினராக இல்லாத நிலையில் தகவல்களை வழங்கக் கோரும்போது |
| 52. | கேட்ட தகவல்களையே மீண்டும் மீண்டும் கேட்பது |
| 53. | காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் கோரப்படும் தகவல்கள் |
| 54. | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி நேரில் சந்திக்க வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு கோரினால் |
| 55. | ஒப்பந்தக்காரர்/ஒப்பந்தக்காரர் நியமனம் சம்பந்தமான கோப்புகள் நிரந்தரமானவை |
| 56. | *DPC minutes* வழங்க வேண்டும் |
| 57. | *LTC* குறித்த தகவல்கள் |
| 58. | ஏதேனும் ஒரு சட்டத்தின்மூலம் தனியார் குறித்த தகவல்களையும் பெற முடியுமானால் சட்டப் பிரிவு 2(*f*)ன்படி பெற்று மனுதாரருக்கு வழங்க வேண்டும் |
| 59. | செய்தித்தாள்களில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் F.I.R. copy வழங்கக் கோருவது |
| **சட்டப் பிரிவு 2(h):** | |
| 60. | அரசு உதவி பெறாத தனியார் டிரஸ்டான சம்பந்தப்பட்ட பள்ளி பொது அதிகார அமைப்பாக கருத சட்டத்தில் வழி வகை இல்லை |
| **சட்டப் பிரிவு 2(h)(d)(ii)** | |
| 61. | மத்திய கூட்டுறவு வங்கியானது பொது அதிகார அமைப்பின் வரையறைக்குள் வராது |
| **சட்டப் பிரிவு 2(j):** | |
| 62. | கோப்புகளைப் பார்வையிட்டு தனக்குத் தேவையான பக்கங்களை மட்டும் எடுத்துக் கொள்ள மனுதாரரை அனுமதிக்கலாம் |
| 63. | கோப்புகளை பார்வையிட மனுதாரரை அனுமதிக்கலாம் |
| 64. | எந்த வேலை இடத்தையும் பார்வையிட மனுதாரருக்கு உரிமை உண்டு |
| 65. | ஆய்வின்போது videography எடுத்துக் கொள்ள அனுமதிக்கலாம் |
| 66. | மாதிரியை (samples) வழங்க வேண்டும் |
| 67. | அலுவலக கணினிகளை ஆய்வு செய்ய அனுமதிக்க இயலாது |

| வ.எண் | தீர்ப்புரைகள் |
|---|---|
| 68. | ஆவணங்களை சான்றொப்பமிட்டு வழங்கும்போது |
| 69. | அலுவலக நேரத்தில், நேரில் சென்று பார்வையிட்டுக் கொள்ள மனுதாரரை அனுமதிக்கலாம் |
| | **சட்டப் பிரிவு** 3: |
| 70. | ஒன்றுக்கு மேற்பட்டோர் (இருவர்) கையொப்பமிட்டிருந்தால் |
| 71. | அரசு ஊழியர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல்களை கோரலாம் |
| 72. | பெயர் விவரத்தாளை (*Letter head*) பயன்படுத்தி தகவல்களை கேட்கலாம் |
| 73. | தகவல்களை கோர குறைந்தபட்ச வயது வரம்பு இல்லை |
| 74. | வழக்கறிஞர் தனது கட்சிக்காரருக்காக தகவல்களை கோரும்போது |
| 75. | நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக தகவல்களை கேட்கும்போது |
| | **சட்டப் பிரிவு** 5(1): |
| 76. | ஒரு பொது அதிகார அமைப்பில் ஒன்றிற்கும் மேற்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களை நியமித்துக் கொள்ளலாம் |
| | **சட்டப் பிரிவு** 5(2): |
| 77. | துணைக் கோட்ட/உள் மாவட்ட அளவில் உதவிப் பொதுத் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் |
| | **சட்டப் பிரிவு** 5(3): |
| 78. | பொதுத் தகவல் அலுவலர்கள், தகவல் கோருபவர்களுக்கு நியாயமான உதவிகள் செய்ய வேண்டும் |
| | **சட்டப் பிரிவு** 5(4) : |
| 79. | The Public Information Officer cannot be expected to go from table to table, seat to seat to collect the information. |
| | **சட்டப் பிரிவு** 5(5) : |
| 80. | சட்டப்பிரிவு *5(5)*-ன்படி உதவி நாடப்படுகின்ற அலுவலர்கள் பொதுத் தகவல் அலுவலர் களாக கருதப்படுவார்கள் |
| 81. | தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு *5(5)*ன்படி மாற்றப்பட்ட பொதுத் தகவல் அலுவலராகக் (Deemed PIO) கருதப்படுவார் |
| | **சட்டப் பிரிவு** 6(1): |
| 82. | ஒரு பொதுத் தகவல் அலுவலருக்கு ஒரு இந்திய குடிமகனால் மட்டுமே மனு அனுப்பப்பட வேண்டும். |
| 83. | மனுதாரர் ஒரே விண்ணப்பத்தில் பல்வேறு பொது அதிகார அமைப்புகள் குறித்த தகவல்களை கேட்டுப் பெறுவதற்கு இச்சட்டத்தில் வழிவகை இல்லை |

| வ.எண் | தீர்ப்புரைகள் |
|---|---|
| 84. | உரிய விண்ணப்பக் கட்டணம் செலுத்தாமலிருந்தால் நிராகரிக்கலாம் |
| 85. | தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைக் கட்டண விதிகளுக்குட்பட்டே விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் (முத்திரைத் தாள் ஏற்புடையதல்ல) |
| 86. | இந்திய அஞ்சல் ஆணை *(Indian Postal Order)* ஏற்புடையதல்ல |
| 87. | துறைத் தலைவருக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் |
| 88. | அனைத்துத் தகவல்களையும் ஒரே பொதுத் தகவல் அலுவலரிடம் கேட்டுப்பெற வழிவகை இல்லை |
| 89. | ஒன்றிற்கும் மேற்பட்டவர்கள் கையொப்பமிட்டு விண்ணப்பித்திருந்தால் |
| 90. | தெளிவாகக் குறிப்பிடப்படாமல் கேட்கப்படும் தகவல்கள் |
| 91. | கோப்பு எண் குறிப்பிடப்படாமல் கோரப்படும் தகவல்கள் |
| | **சட்டப் பிரிவு** 6(2): |
| 92. | இந்தியக் குடிமகன்தானா என்பதற்கான அத்தாட்சியை மனுதாரரிடம் கேட்கக் கூடாது |
| 93. | தகவல்களை கேட்பதற்கான காரணங்களை மனுதாரரிடம் கேட்கக்கூடாது |
| 94. | சட்டம் சார்ந்த வழக்கு தொடர்பான நிலையில் அடையாளச் சான்றினை கோரி பெறலாம் |
| | **சட்டப் பிரிவு** 6(3): |
| 95. | பல்வேறு பொது அதிகார அமைப்புகளிடமிருந்து தகவல்களை சேகரித்து வழங்க வேண்டியதில்லை |
| 96. | அனைத்து அலுவலகங்களிலிருந்தும் தகவல்களை சேகரித்து வழங்க வேண்டிய தில்லை |
| 97. | வேறு ஒரு பொது அதிகார அமைப்பிற்கு விண்ணப்பத்தினை மாற்றம் செய்தவுடன் பொதுத் தகவல் அலுவலரின் கடமை முடிவடைந்துவிடுகிறது. |
| 98. | பல்வேறு பொது அதிகார அமைப்புகளுக்கு மனுவினை மாற்றம் செய்ய வேண்டியதில்லை |
| 99. | தகவல்கள் பொது அதிகார அமைப்பிடமே இருக்கும்போது, விண்ணப்பத்தினை துறைத் தலைமை அலுவலகத்திற்கு மாற்றம் செய்வது தவறாகும் |
| | **சட்டப் பிரிவு** 7(1): |
| 100. | பொதுத் தகவல் அலுவலர், தான் பதில் அளிக்காமல், தன்கீழ் பணியாற்றும் அலுவலரை தகவல் அளிக்குமாறு பணிக்கக்கூடாது |
| 101. | வாழ்வு மற்றும் சுதந்திர உரிமை குறித்த தகவல்கள் |
| | **சட்டப் பிரிவு** 7(3): |
| 102. | கோப்பில் எழுதப்படாத பக்கங்களுக்கும் கட்டணம் வசூலிக்க வேண்டுமா? தகவல்களை பதிவு அஞ்சலில்தான் அனுப்ப வேண்டுமா? |
| 103. | தேடு கூலியை செலுத்துமாறு மனுதாரரை கோர முடியாது |

| வ.எண் | **தீர்ப்புரைகள்** |
|---|---|
| 104. | அஞ்சல் செலவுத் தொகையை மனுதாரர் செலுத்த வேண்டியதில்லை |
| 105,. | விண்ணப்பக் கட்டணத்துடன் நகலுக்கான கட்டணத்தையும் முன்கூட்டியே மனுதாரர் செலுத்த இயலாது |
| 106. | ஆவணங்களை பெற சம்பந்தப்பட்ட துறை கட்டணம் நிர்ணயம் செய்திருந்தால் அக்கட்டணத்தைத்தான் மனுதாரர் செலுத்த வேண்டும் |
| 107. | பதிவுச் சட்டத்தின்கீழ் தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும்போது அத்தொகையைச் செலுத்தித்தான் மனுதாரர் நகல்களை பெற முடியும் |
| 108. | நீதிமன்ற விதிகளின்படி நகல்களை பெற்றுக்கொள்ளலாம். |
| 109. | 30ம் நாளன்று நகலுக்கான கட்டணத்தை செலுத்துமாறு மனுதாரருக்கு கடிதம் அனுப்ப முடியாது |
| **சட்டப் பிரிவு** 7(6): | |
| 110. | 30 நாட்களுக்குள் தகவல் அளிக்காவிட்டால் மனுதாரர் கோரும் தகவல்களை இலவசமாக வழங்க வேண்டும். |
| **சட்டப் பிரிவு** 7(8): | |
| 111. | கோரிக்கையை மறுக்கும்போது யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்ற விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் |
| **சட்டப் பிரிவு** 7(9): | |
| 112. | அளவுக்கு அதிகமான தகவல்கள் - உச்சநீதிமன்றம் விளக்கம் |
| 113. | மனுதாரர் கோரியுள்ளவை பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை பாதிப்பதாக இவ்வாணையம் கருதுகிறது. |
| 114. | பண்பாடற்ற முறையில் எழுதி விண்ணப்பித்திருந்தால் |
| 115. | மனுதாரர் கோரும் ஆவணங்கள் சிதைவடைந்த நிலையில் இருந்தால் |
| **சட்டப் பிரிவு** 8(1)(**a**): | |
| 116. | அயல்நாட்டிலிருந்து பெறப்பட்ட ரகசியமான தகவல்கள் |
| **சட்டப் பிரிவு** 8(1)(**b**): | |
| 117. | நீதிமன்றத்தால் தடைசெய்யப்படாத தகவல்களை வழங்க வேண்டும் |
| 118. | நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக ஆணையம் எந்த ஆணையையும் பிறப்பிக்க இயலாது |
| **சட்டப் பிரிவு** 8(1)**(d):** | |
| 119. | வணிக ரகசியங்கள் குறித்த தகவல்கள் |
| **சட்டப் பிரிவு** 8(1)**(e):** | |
| 120. | நம்பகத்தன்மையின் அடிப்படையில் வழக்கறிஞரிடமிருந்து பெறப்படும் கருத்துகள் |

| வ.எண் | தீர்ப்புரைகள் |
|---|---|
| **சட்டப் பிரிவு** 8(1)(**g**): | |
| 121. | தனி நபரின் பாதுகாப்பு கருதி அரசு ஊழியரின் நிரந்தர முகவரி வழங்கதக்கதல்ல |
| **சட்டப் பிரிவு** 8(1)(**h**): | |
| 122. | புலன் விசாரணை முடிவடையாத நிலையில் பிரேதப் பரிசோதனை அறிக்கையை கேட்டுப்பெற முடியாது |
| 123. | புலன் விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் தகவல்களை வழங்கக் கோருவது |
| **சட்டப் பிரிவு** 8(1)(**j**): | |
| 124. | அரசுப் பணியாளருடைய பணிப் பதிவேட்டின் நகலினை மூன்றாம் நபருக்கு வழங்க வேண்டியதில்லை |
| 125. | அரசுப் பணியாளருடைய பணிப் பதிவேட்டின் நகலினை மூன்றாம் நபருக்கு வழங்கியுள்ளது வருந்தத்தக்கதாகும் |
| 126. | தாயாரின் பணிப் பதிவேட்டினை மகன் கேட்டுப்பெற முடியாது |
| 127. | அரசுப் பணியாளரது தனிப்பட்ட விவரங்களை வழங்க வேண்டியதில்லை |
| 128. | சாதிச் சான்றிதழ் மற்றும் பள்ளிச் சான்றிதழ் நகல்கள் மூன்றாம் தரப்பினரின் தனிநபர் குறித்த தகவல்களாகும் |
| 129. | விடுப்பிற்கான காரணங்களை வழங்க வேண்டியதில்லை |
| 130. | ஒழுங்கு நடவடிக்கை குறித்த கோப்புகள் |
| 131. | சம்பளம் மற்றும் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் விவரங்கள் தனி நபர் குறித்த தகவல்களாகும் |
| 132. | மந்தண அறிக்கையை சம்பந்தப்பட்ட அலுவலரே கோரும்போது வழங்கவேண்டும் |
| 133. | மந்தண அறிக்கையை மூன்றாம் தரப்பினருக்கு வழங்க வேண்டியதில்லை |
| 134. | *Appointment Order, Pay Slips -* மூன்றாம் தரப்பினர் தகவல்கள் |
| 135. | அரசுப் பணியாளரின் பணி விவரங்கள் |
| 136. | அலுவலகத்திற்கு வந்தபின்பு அலுவலரால் மேற்கொள்ளப்படும் செலவின விவரங்கள் |
| 137. | வருமான வரி கணக்கு விவரங்கள் |
| 138. | அலுவலரின் வங்கிக்கணக்கு எண் விவரங்கள் |
| 139. | பயணப் பட்டியல்களின் நகல்கள் |
| 140. | அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளின் பெற்றோர் குறித்த விவரங்கள் |
| **சட்டப் பிரிவு** 9: | |
| 141. | பதிப்புரிமையை மீறுவதாக அமையும் தகவல்கள் |
| **சட்டப் பிரிவு** 11: | |
| 142. | மூன்றாம் தரப்பினர் குறித்த தகவல்கள் |

| வ.எண் | **தீர்ப்புரைகள்** |
|---|---|
| 143. | மூன்றாம் தரப்பினருக்கு அனுப்பப்பட்ட கடிதம் திரும்பப் பெறப்பட்டால் |
| 144. | யார்மீது புகார்கள் கூறப்பட்டுள்ளதோ, அந்நபர் புகார் மனுவின் நகலைக் கேட்கும்போது |
| 145. | பணியாளருக்கு சேரவேண்டிய தொகைகள் குறித்து மூன்றாம் நபர் கோரும்போது |
| 146. | பட்டா மாறுதல் குறித்த கோப்புகள் மூன்றாம் தரப்பினர் தகவல்களாகும் |
| **சட்டப் பிரிவு** 19(1): | |
| 147. | முதல் மேல்முறையீட்டினை 30 நாட்களுக்குள் மனுதாரர் செய்திருக்க வேண்டும் |
| 148. | தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி மனு செய்தவர்தான் மேல்முறையீடு செய்ய வேண்டும் |
| 149. | மேல்முறையீட்டு மனுவில் புதிய கேள்விகள் கேட்கக்கூடாது. |
| 150. | ஒவ்வொரு மனுவிற்கும் தனித்தனியாக மேல்முறையீடு செய்ய வேண்டும் |
| 151. | மனுதாரரை விசாரணைக்கு அழைப்பது தவறாகும் |
| **ஆணைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் கவனத்தில் கொள்ள வேண்டியவை:** | |
| 152. | வாய்தா கேட்டு கடிதம் அனுப்ப முடியாது |
| 153. | "வேலைப் பளுவின்" காரணமாக ஆணையத்தின் விசாரணைக்கு வர இயலவில்லை என்ற காரணம் ஏற்கத்தக்கதல்ல |
| 154. | விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரிடம் நேரடியாக பேசக்கூடாது |
| 155. | விசாரணைக்கு வரும்போது உரிய ஆவணங்கள்/கோப்புகளைக் கொண்டு வரவேண்டும் |
| 156. | தகவல் வழங்கவில்லை என்றால் T.A., D.A மற்றும் O.D. அனுமதிக்கக் கூடாது |
| 157. | பிரிவு 19(6)ன் கீழான தமது கடமையை சரியான முறையில் செய்யத் தவறிய மேல்முறையீட்டு அலுவலர்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக்கூடாது? |
| **சட்டப் பிரிவு** 19(7): | |
| 158. | மீண்டும் மீண்டும் விசாரணை மேற்கொள்ள சட்டத்தில் இடமில்லை |
| **சட்டப் பிரிவு 19(8)(a)(ii):-** | |
| 159. | மாநில தகவல் ஆணையம் பொதுத் தகவல் அலுவலரை நேரடியாக நியமிக்கலாம் |
| **சட்டப் பிரிவு 20(1):** | |
| 160. | தகவல் அளிக்காமல் வேறு இடத்திற்கு பணிமாறுதலில் சென்றாலும்கூட சட்டப் பிரிவு 20-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

| வ.எண் | **தீர்ப்புரைகள்** |
|---|---|
| 161. | தகவல் அளிக்காமல் ஓய்வு பெற்றாலும் ஓய்வூதிய விதி 9-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 162. | அபராதத் தொகையை சரிசமமாகப் பிரித்து சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும் |
| 163. | *6* பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்தும் தனித்தனியாக ரூ.*25,000/–* தண்டம் வசூலிக்கப்படவேண்டும் |
| 164. | தாமதம் ஏற்பட்டதற்காக தெரிவிக்கப்பட்ட காரணம் ஏற்கத்தக்கது |
| | **சட்டப் பிரிவு 20(2):-** |
| 165. | விண்ணப்பத்தினை வாங்க மறுத்ததற்காக கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் |
| | **சட்டப் பிரிவு** 22: |
| 166. | *10*ம் வகுப்பு விடைத்தாளின் நகலினை பெறலாம் |
| 167. | விதி *22*ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிற அரசு ஆணைகளை மீதுர்ந்து இயங்கும் தன்மை கொண்டது |
| | **மனுதாரருக்கு தகவல்களைஅனுப்பும்போது:** |
| 168. | பெயரினை தவறாக குறிப்பிட்டு பதில் அனுப்புவது கண்டிக்கத்தக்கது |
| 169. | தொகையைப் பற்றி தகவல் கேட்கும்போது தவறின்றி வழங்க வேண்டும் |
| 170. | ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக பதில் அளிக்க வேண்டும் |
| 171. | மனுதாரர் குறிப்பிட்டுள்ள இனங்களின் வரிசை எண்ணைக் குறிப்பிட்டு மனுதாரருக்கு தகவல் தரப்பட்டது சரியான நடைமுறையாகும் |
| 172. | பொதுத் தகவல் அலுவலர் என்ற பதவியை முன்நிறுத்தி பதில் அனுப்ப வேண்டும் |
| 173. | மனுதாரருக்கு தகவல்களை முறையாக அலுவலகக் கடிதத்துடன் *(with proper covering letter)* இணைத்து அனுப்ப வேண்டும் |
| 174. | மனுதாரருக்கு அனுப்பப்படும் கடிதங்களில் பொதுத் தகவல் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர்கள்தான் கையொப்பமிட வேண்டும். |
| 175. | மனுதாரர் இறந்துவிட்டால் அவருடனே அவரது வழக்கும் முடிந்துவிடுகிறது |

# தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005

## முக்கியத் தீர்ப்புரைகள்

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 1. | "The Public Information Officer and Appellate Authorities are quasi judicial authorities" | (CIC Appeal No.743/ ICPB/2007 F.No.PBA/07/ 587 dated 1-8- 2007) |
| 2. | ***"the public authority could not answer under what provisions of the Act, the original letter was returned for resubmission, instead of asking for additional payment if any which is required under the Act" | Case No.1012/Enquiry/2008 dated 24.04.2008 (Thiru Vai.Kaveri, M.L.A., Edappadi Constituency (vs) The PIO, Agriculture Dept., Secretariat Chennai) |
| 3. | பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில், அலுவலர் இல்லாத போது பெறப்படும் அஞ்சல்களைப் பெறுவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு பொதுத் தகவல் அலுவலருக்குஅறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் *5319* நாள் *31.08.09* (வே. ராஜா (vs) திருவலம் பேரூராட்சி, வேலூர்) |
| 4. | The school cannot adopt a procedure for accepting RTI applications only on a particular day and for a particular time | (CIC No. CIC/SG/C/2010/ 000337/7381 dated 07.04.2010) |
| 5. | மனுதாரருக்கு நிரந்தர முதல்வர் பணியேற்றதும் தகவல் வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. மனுதாரர் கூற்றுப்படி நிரந்தர முதல்வர் பணியேற்றும் தகவல் வழங்கப்படவில்லையென்று தெரிவித்தார். தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி நிரந்தர முதல்வர் வந்த பிறகுதான் மனுதாரருக்கு தகவல் வழங்கப்படும் என்று தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்க இயலவில்லை | வழக்கு எண் *30807* நாள் *07.03.2011* (திரு. கே. திருமுருகன் (vs) அரசு பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரி விருத்தாசலம்) |
| | மனுதாரருக்கு மேல்முறையீட்டு அலுவலர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் எனவும், எனவே மேல்முறையீட்டு அலுவலர் நியமிக்கப்பட்டவுடன் மேல்முறையீடு செய்யலாம் என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதை வருங்காலங்களில் தவிர்க்குமாறு தெரிவிக்கப்படுகிறது | வழக்கு எண் *13603* நாள் *13.1.2011* (Thiru V Gopalakrishnan (vs) The PIO, TNEB Chennai 8) |
| | அலுவலகத்தில் பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது என்ற காரணத்தால் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது தகவல் வழங்குவதை தாமதப்படுத்துவது இச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, இனி வரும் காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து உரிய தகவல்களை வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் *23009* நாள் *18.01.2010* (திரு. M.தர்மலிங்கம் (vs) கோவில்பட்டி நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம்) |
| 6 | *22.07.2009* அன்று ஆணையம் ஆணையிட்ட பிறகு 6 மாதங்களுக்கு மேலாகக் கோப்புகளைத் தேடி வருவதாகப் பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்கவில்லை. | வழக்கு எண் *21273/(O8)/* நாள் *08.02.2010* (திருமதி R. வள்ளிமயில் (vs) வட்டாட்சியர் அலுவலகம் பாளையங் கோட்டை) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 7. | முந்தைய பதிவேடுகள் என்ன ஆயிற்று? என்று பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்தபோது அலுவலகத்தில் வெள்ளையடிக்கும் பணிநடைபெற்றதாகவும், கோப்புகள் இடம் மாறிவிட்டதாகவும் கூறியதை ஆணையம் ஏற்கவில்லை | *வழக்கு எண் 1001678 நாள் 04.05.2010* (K.பன்னீர்செல்வம், (vs) இராஜ பாளையம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, இராஜபாளையம்) |
| 8. | No particular application format necessary/no reasoning required for seeking information | Case No.CIC/C/I/2006 dated 16.1.2006) |
| 9. | The petitioner had complained that on his appeal the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments Department, Thanjavur, had, instead of sending the information, sent a form to fill up as the form in which appeals must be made and also stated that only one query can be made under Right to Information Act. He had complained that both of these are not as per the Right to Information Act, upon which the Commission summoned the Public Information Officer concerned under Section 18(3) of the Act in Case No.1001115/O-8/2010 today (29-4-2010) | Case No.1001115/O-8/2010 dated 29-04-2010<br>(Thiru K. Balakumar, Thanjavur District (vs) The Public Information Officer/ Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments Department, Thanjavur. |
| 10. | மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் கொடுப்பது குறித்து சட்டம் விரிவாக தெரிவித்துள்ளது. மனுதாரர் பெற்ற தகவல்களை பயன்படுத்துவது குறித்து எந்தவித குறிப்பும் இச்சட்டத்தில் இல்லை. தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கமே தனிப்பட்ட நபர்கள் பொது அதிகார அமைப்பில் உள்ள தகவல்களை பெற்று அதன் மூலம் பொது அதிகார அமைப்பு வெளிப்படையான அமைப்பாக செயல்பட இச்சட்டம் வழி வகை செய்துள்ளது. அப்புனிதமான சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களை மனுதாரர் நீதி மன்றத்திற்கோ அல்லது ஊடகங்களுக்கோ அளிப்பது அவருடைய தனிப்பட்ட உரிமையாகும். | *வழக்கு எண் 11665 நாள் 15.03.2011* (டாக்டர். C. ஸ்ரீகுமார், உதவி பேராசிரியர், கால்நடை இனப் பெருக்கம் ஆராய்ச்சி மையம், (vs) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை *600 051*) |
| 11. | மனுதாரர் விசாரணையின்போது ஒரு குறுந்தகடை ஆணையத்திற்கு அளித்து, மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் பல்வேறு மனுக்களைப் போட்டு தகவல்கள் பெறுகின்றபடியால் தன்னை அச்சுறுத்தி வேண்டுமென்றே குறுகிய நோக்கத்தில் தான் பணிமாற்றம் செய்யப்பட்டதாகவும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களைப் பெறுகின்ற வழக்கத்தைத் தான் கைவிட வேண்டுமென்றும், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்றும் பொதுத் தகவல் அலுவலர் உள்ளிட்ட சில அலுவலர்கள் தன்னுடன் பேசிய பேச்சு அந்தக் குறுந்தகட்டில் உள்ளது என்று புகார் செய்துள்ளார். மனுதாரரது புகாரில் ஏதேனும் உண்மையிருப்பின், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. விசாரணையின்போது மனுதாரர் அளித்துள்ள இந்தக் குறுந்தகட்டில் கண்டுள்ள | *வழக்கு எண் 9475 நாள் 18.9.2009*<br>(ஆர். இரவிகுமார், *76*, சேரன் நகர், II மேட்டுப்பாளையம் *641 301* (vs) பொதுத் தகவல் அலுவலர், தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மேட்டுப்பாளையம் சாலை, கோயமுத்தூர் *641 043*) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | விவரங்களை கணினியின் மூலமாக கேட்டறிந்து தகுந்த மேல் நடவடிக்கைக்கு உரிய பரிந்துரைகள் செய்யுமாறு இவ்வாணையத்தின் பதிவாளர் பணிக்கப்படுகிறார். | |
| 12. | The petition of Thiru A. Krishnamachari dated nil, received by the Commission on 18.01.2012 is rejected as the same is without any signature. | Memo No.2383/A/12 dated 31.01.2012 |
| | **சட்டப் பிரிவு 2(f):-** | |
| 13. | The RTI Act can only provide such information, as is defined in Sec.2 sub sections (f) & (j) | (CIC Appeal No.CIC/WB /A/2009/ 000288 dated 16.3.2009) |
| 14. | மனுதாரர் கோரும் தகவல் குறித்த கோப்பு பரிசீலனையில் (process) உள்ள நிலையில் தகவல்கள் வழங்க வழிவகை இல்லை. கோப்பு முடிவுற்ற பின்தான் தகவல்கள் வழங்க இயலும். எனவே, பொதுத் தகவல் அலுவலர் அளித்துள்ள பதில் சரியானதுதான் என்று ஆணையமும் கருதுகிறது. | ஆணை எண் SA7620/F/2015 நாள் 22.09.2015 |
| 15. | 7. இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் Note Fileல் அதிகாரிகளின் கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் அவை அவர்களது அன்றாட அரசு பணி தொடர்பானவை என்றும், அன்றாட நிர்வாக நடவடிக்கைகளை வெகுவாக பாதிக்கும் அளவில் அமையும் என்றும், அதிக அளவிலான பொது நலன் கருதி இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றும் கூறினார்.<br><br>8. இந்நேர்வில் மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் பின்வருமாறு:<br><br>"The Hon'ble Supreme Court in THE STATE OF BIHAR AND ORS -Vs- KRIPALU SHANKAR & ORS { (1987) 3 SOC 34 }, has held that 'the officers of the Government are often times confronted with giving free vent to their opinion and expression in the internal files for the use of the Department and not for outside exposure or for publicity.'In SODHI SUKHDEV SINGH { AIR 1961 SC 493 } case, the Hon'ble Supreme Court has held that the internal documents are privileged documents and held that such a special class may also extend to notes and minutes made by the respective officers in the relevant files, information expressed or reports made and gist of official decisions reached in the course of determination of questions of policy.<br>to be entitled in the public interest to be immune from disclosure". It was also held that there may be classes of documents which public interest requires should not be disclosed, no matter what the individual documents in those classes may contain or in other words, the law recognizes that there may be classes of documents which in the public interest should be immune from disclosure. There is one such class of documents which for years | வழக்கு எண் **SA4388/** விசாரணை /**E**/2015 நாள் 22.12.2015 (திரு. க.மு.நீலமேகம் (vs) பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், எண்.493, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | has been recognized by the law as entitled in the public interest to be protected against disclosure and that class consists of documents which it is really necessary for the proper functioning of the public service to withhold from disclosure. The documents falling within this class are granted immunity from disclosure not because of their contents but because of the class to which they belong."<br><br>9. The Bench of Hon'ble Madras High Court in "The Public Information Officer vs The Central Information Commission and Mr.B.Bharathi" in W.P.No.26781 of 2013 and M.P.No.1 of 2013 has held that:<br><br>"Considering the facts and circumstances of the present case as stated above and also going by the earlier decisions rendered by the Honourable Supreme Court and the Division Benches of this Court, cited supra, we are of the view that the present case is squarely covered by those decisions against the second respondent, and therefore, the second respondent is not entitled to get the information in respect of those six appeals by way of attested file copies of the relevant documents including the file notings and the correspondences made thereon. The impugned order of the first respondent - Commission in directing the petitioner to furnish those information, is erroneous and not sustainable, in view of the earlier decisions rendered by this Court and the Honourable Supreme Court as discussed supra. Hence, the impugned order passed by the first respondent – Commission in so far as six appeals are concerned, is liable to be set aside"<br><br>*10.ஆவணங்களின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்களை நோக்கும் போது, மேலே குறிப்பிட்ட மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் இவ்வழக்கிற்கு பொருந்தும் என ஆணையம் முடிவு செய்கிறது. மாநில தகவல் ஆணையத்தின் அமர்வு வழக்குகளில் (வழக்கு எண் 41600/SCIC/2014, 36783/SCIC/2014 (ம) 44226/ SCIC/2014)) எடுக்கப்பட்ட நிலைபாடு இதுதான். மேற்கூறிய தீர்ப்புகளின் அடிப்படையில் Note Fileயை தகவலாக வழங்க இயலாது என ஆணையம் முடிவு செய்கிறது.* | |
| 16. | Especially when the wife is seeking the salary particulars of the Husband, from the public authority where he is working as public servant, it is the duty of the public authority to render required assistance by providing necessary information to her to secure justice. Denial of such information to wife is thus, highly unreasonable, not justified and it will also amount to breach of legal obligation | File No.CIC/AD/A/2012/ 003341SA dated 7.1.2014 (Jyoti Seherawat Vs. Home (General) Dept., GNCTD) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 17. | தகவல் அறியும் உரிமை சட்டப்படி, ஒன்று, தகவல் வழங்கப்பட வேண்டும் அல்லது அது அழிக்கப்பட்டிருந்தால், அழிக்கப்பட்டதற்கான ஆதாரம் முன்னிடப்படவேண்டும். அழிக்கப்பட்டு விட்டன என்று பொதுவாக பதில் அளிப்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தை சிதைத்துவிடும் பதில் ஆகும். | வழக்கு எண் 35100/ விசாரணை/ A/2014 நாள் 04.06.2015 (திரு. S.ஜெயபால் (vs) பொதுத் தகவல் அலுவலர் வட்டாட்சியர் அலுவலகம், திருக்கழுக்குன்றம் வட்டம், திருக் கழுக்குன்றம்–603109.) |
| 18. | தங்கள் அலுவலக மேல்முறையீட்டு அலுவலர் அவர்களின் கடித எண் 900/13/அந2/627, நாள் 07.11.2011 கடிதத்துடன் பெறப்பட்ட தங்கள் அலுவலக நேர்முகக் கடிதத்தை தயாரித்து சுருக்கொப்பம் இட்டுள்ள நான்கு அலுவலர்களின் பெயர், அப்போதைய பதவி, தற்போதைய பதவி, அடுத்த பதவி உயர்வு பதவியின் பெயர், ஓய்வு பெற்றிருந்தால், எந்த பதவியிலிருந்து ஓய்வு பெற்றார் மற்றும் இருப்பிட முகவரி ஆகிய தகவல்களை கேட்டிருக்கிறார் விசாரணைக்கு வந்திருக்கும் பொதுத் தகவல் அலுவலர். கோப்பில் உள்ள சுருக்கொப்பத்தை வைத்து யார் என்று யூகிக்க இயலாத நிலையில், மனுதாரர் கோரும் தகவல்களை யூகத்தின் அடிப்படையில் வழங்க இயலாது என்று தெரிவிக்கிறார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. | வழக்கு எண் 6199/விசாரணை/F/2014 (திரு. ம. இராமசுப்பு (vs) கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை 18) |
| 19. | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மேல்முறையீட்டாளருக்கு அவர் எழுதிய நான்கு விடைத்தாள்களின் சான்றிட்ட நகல்களை கட்டணமின்றி தரவேண்டுமென்று ஆணையிடப் படுகிறது. | வழக்கு எண். 46195 மற்றும் MP 7260/மா.த.த.ஆ./2015 விசாரணை நாள் 16.09.2015 (திரு. D. செல்வராஜ், (vs) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம், சென்னை 3) |
| 20. | மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 08.09.2014 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் 27.05.2013 அன்று அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் தனக்குப் பெண் குழந்தை பிறந்ததாகத் தெரிவித்து, தன்னுடைய Case Sheet copy மற்றும் Discharge Summary Copy ஆகியவற்றைத் தகவலாகக் கோரியுள்ளார். இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 10.04.2015 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் பதிவஞ்சலில் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர்/மேல்முறையீட்டாளரும் தான் கோரிய தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக ஆணையத்தின் முன்பு ஒப்புக் கொண்டார். | வழக்கு எண் 41143/E/2014 ஆணை நாள் 15.04.2015 (திருமதி S.கவிதா (vs) பொதுத் தகவல் அலுவலர், அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.) |
| 21. | தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரிய தகவல் கேள்விகளாக இருந்தபோதிலும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் தகவல் வழங்கிய பொதுத் தகவல் அலுவலரின் செயலை ஆணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது. | வழக்கு எண் 8451/விசாரணை/E/2013 நாள் 02.05.2013 (திரு. என். ஐயப்பன் (vs) ஆர்.எஸ். ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை, சென்னை 13) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 22. | வரிசை எண் *1* முதல் *7* வரை கேள்விகளாக உள்ளதெனவும், கேள்விகளுக்கும், காரணங்களுக்கும் பதில் தெரிவிக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வழிவகை இல்லை என்று தெரிவித்துள்ளார். இதனை இவ்வாணையத்தால் ஏற்க இயலவில்லை. ஆவணங்களில் உள்ள தகவல்களை கேள்வி வடிவத்தில் கேட்டாலும், மனுதாரருக்கு தகவல் வழங்க வேண்டுமென்று இவ்வாணையம் கருதுகிறது | வழக்கு எண் *24898* நாள் *02.09.2013* (திரு. ஏ. ரெங்கசாமி (vs) நகராட்சி அலுவலகம், இராஜபாளையம்) |
| 23. | மனுதாரர் கேட்டுள்ள கோப்பின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும், ஆகவே, தகவல் தர இயலாது என்றும் தெரிவித்துள்ளது. எந்த ஒரு இனத்திலும், அரசின் கொள்கை முடிவோ அல்லது நிர்வாக நடவடிக்கையோ எடுக்கப்படக்கூடிய நிகழ்வில், ஒவ்வொரு காலக் கட்டத்திலும் ஆவணங்களை கேட்பது நடைமுறையில் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் என்று இவ்வாணையம் பல்வேறு வழக்குகளில் தெரிவித்துள்ளது. | வழக்கு எண். *33455* (ம) *46840/*மா.த.த.ஆ/*2013* விசாரணை நாள் *29.01.2014* (திரு.சி.நவநீதகிருஷ்ணன் (vs) பொதுத்தகவல் அலுவலர் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை, தலைமைச் செயலகம், சென்னை *600009*) |
| 24. | மனுதாரர்/மேல்முறையீட்டாளர் இந்த மனுவில் கோரியிருப்பது, தான் *25/09/2012* அன்று கொடுத்த புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவலாகும். அதற்கு, பொது அதிகார அமைப்பு தனது *19/01/2013* தேதியிட்ட பதிலில் தங்கள் மனு வினா வடிவில் உள்ளதால் தகவல் அறியும் சட்டம் பிரிவு 2(f) ன் கீழ் பதில் கூற வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துள்ளது.<br>இந்த அணுகுமுறை சரியல்ல. மனுதாரர் கோரியிருப்பது தான் கொடுத்த புகார் மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவலாகும். இன்றைய விசாரணையின்போது, <u>பொதுத் தகவல் அலுவலர் இந்தப் புகார் மீது விசாரணை செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.</u> அத்தகவலை எழுத்துபூர்வமாக மேல்முறையீட்டாளருக்கு உடனடியாகக் கொடுக்கும்படி இவ்வாணையம் ஆணையிட்டது. அவ்வாறே, பொதுத் தகவல் அலுவலரும் மனுதாரருக்கு தகவலை எழுத்துபூர்வமாக வழங்கினார். | வழக்கு எண் *11813/*மா.த.த.ஆ/*2013* விசாரணை நாள் *26.07.2013* (திரு. வி. கோவிந்தராசன் (vs) பொதுத் தகவல் அலுவலர் (ம) தலைமை எழுத்தர், அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக் கோவில், ஒப்பிலியப்பன் கோவில், திருநாகேஸ்வரம் *612 204*) |
| 25. | The State Public Information Officer, after confirming the availability of the Information sought for by the applicant in the Government web-site, may direct the applicant, to refer to the specific departmental page, in the Government web-site, "tn.gov.in" where the information sought for by applicant is available. | G.O. Ms. No.16, P&AR (AR-II) Department, dated 11-2-2008 |
| 26. | இனம் 2ல் "தாங்கள் எல்லா ஆவணங்களையும் பார்த்தீர்களா, அல்லது கீழ் அதிகாரிகள் எழுதி வைத்த பேப்பரில் மொட்ட கையெழுத்து போட்டீர்களா" என்றும். ஆவணங்கள் பார்த்திருந்தால் அவற்றின் நகல்களைக் கேட்டுள்ளார். இதுவும் சட்டப் பிரிவு 2(f) ன்கீழ் தகவல்கள் என்ற இலக்கணத்தின்கீழ் வராது. | வழக்கு எண்கள். *16411*(ம)*17426–17427, 17683* (ம) *17684/F/2014* நாள் *16.07.2015* (திரு. P. தீனதயாளன் (vs) பொதுத் தகவல் அலுவலர்/ செயற் பொறியாளர்/ மின்னியல் தலைமைப் பொறியாளர். பகிர்மானம் அலுவலகம் தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மானக் கழகம் வேலூர் மண்டலம் / காந்தி நகர், வேலூர்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 27. | ஏன், எதற்கு, எப்படி, என்ன காரணம், சரியா, தவறா, குற்றவியல் நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது, என்பதற்கான தகவல்களைத் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தகவல் தருவதற்கு வாய்ப்பில்லை என்பதை மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. | வழக்கு எண் 5168 நாள் 16.07.2010 (திரு டி எச் காளைய்யா (vs) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை) |
| 28. | மனுதாரரின் "ஏன் செய்யவில்லை", "ஏன் தயக்கம்" என்பன போன்ற காரண கேள்விகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதில் அளிக்க வேண்டியதில்லை. இதன் தொடர்ச்சியாக கேட்கப் பட்டிருக்கும் தகவல்களும் பொதுநோக்கத்தில் கேட்கப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. எனவே, பொது அதிகார அமைப்பு எடுத்த நிலைப்பாடு சரியெனக் கருதி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. | தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண் 49190/A/11-2 நாள் 28.03.2012 |
| 29. | 4 கேள்விகளில் 3 கேள்விகள் ஏன்? ஏன்? ஏன்? என்று வினாக்கள் முறையில் அமைந்துள்ளன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஏன்? எதற்கு? என்ன காரணம்? என்பவற்றிற்குக் கோப்புகளில் தகவல் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. எந்த விதமான தேதிகளும் குறிப்பிடாமல் முதலமைச்சரிடம் தான் அளித்த மனு எந்த நிலையில் உள்ளது என்று வட்டாட்சியர் அலுவலகத்தில் கேட்பது அர்த்தமற்றது. | வழக்கு எண் 29461 நாள் 22.04.2010 (திரு T. பச்சையப்பன் (vs) வட்டாட்சியர் அலுவலகம், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம்) |
| 30. | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோப்புகளில் உள்ள தகவல்களைக் கேட்டுப் பெறலாம். ஏன்? எதற்கு? என்ன காரணம்? எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா? நீதிமன்றம் செல்ல வேண்டுமா? நடவடிக்கை எடுக்காதது ஏன்? நியமனம் ஏன் செய்யப்படவில்லை? போன்ற கேள்விகளுக்குக் கோப்புகளில் தகவல் இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே உள்ள தகவல்களைக் கேட்டுப் பெறும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 6046 நாள் 26.07.2010 (K Govindasamy Chennai 57 (vs) The PIO, District Collector office Tiruvallur District & Office of the Tahsildar Ambattur Taluk Tiruvallur District) |
| 31. | பிரிவு 6(1)-ன் படி பொது தகவல் அலுவலருக்கு மனு கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் முதல் மேல்முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டில் குறுக்குக் கேள்விகள் கேட்பது என்பது சட்டப்படி அனுமதிக்க இயலாத ஒன்று. மேலும் மனுதாரர் கோரியிருப்பது பல இனங்களில் கேள்விகள். உள்ளதா? இல்லையா? ஆய்வு செய்தீர்களா? இல்லையா? போன்ற கேள்விகளைக் கேட்க சட்டத்தில் இடமில்லை. பொது அதிகார அமைப்பு எடுத்த நிலைபாடு சரியானது என கருதி இம்மேல்முறையீட்டு மனுவினை ஆணையம் தள்ளுபடி செய்கிறது. | வழக்கு எண் 12994/மாததஆ/13 நாள் 31.07.2013 |
| 32. | 'Information' as defined in the Right to Information Act does not include answers to the questions like 'why'. | (Dept of P&T, GOI, New Delhi, O.M. No.1/7/2009-IR, dated 1st June 2009) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 33. | மேல்முறையீடுதாரர், கோரியிருப்பது சட்டம் குறித்த ஆலோசனைகள். தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 2(ஊ)-ன் கீழ் அமையவில்லை. எனவே பொதுத் தகவல் அலுவலரின் நிலைப்பாடு சரி என்று ஆணையம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படுகின்றது. | தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண்.13423/மா.த.த.ஆ/2013 நாள் 03.05.2013 |
| 34. | தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி, அரசு ஆவணங்களில் ஏற்கனவே பதியப்பட்டவைகளை மட்டுமே தகவல்களாகத் தர இயலும் என்றும், யூகங்களின் அடிப்படையிலான இனங்களுக்குத் தகவல் அளிக்க இயலாது என்றும் மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 21648 நாள் 05.02.2010 (திரு ஏ. பஞ்சாட்சரம், (vs) துணை இயக்குநர் அலுவலகம் சுகாதாரப் பணிகள், திருவள்ளூர்1) |
| 35. | **future course of action** which is not in any material form is not "information" within the definition of "information" in Section 2(f). | CIC Appeal No.ICPB/A-15/CIC/2006, April 13, 2006 |
| 36 | மனுதாரர் பொதுத் தகவல் அலுவலருடைய கருத்தினைக் கோரியுள்ளார். அது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வராது. | வழக்கு எண் 29263 நாள் 20.4.2010 (திருமதி. வி. சந்தான லெட்சுமி (vs) மாவட்ட வன அலுவலகம் திண்டுக்கல் கோட்டம்) |
| 37. | அனுமானங்கள் அல்லது யூகங்களின் அடிப்படையில் பொது அதிகார அமைப்பு தகவல் வழங்க வேண்டுமென்பதில்லை. மேலும் மனுதாரருக்கு 'அறிவுரை' அல்லது 'கருத்து' தெரிவிப்பதோ மட்டுமல்லாது 'அறிவுரை' அல்லது 'கருத்தினை' பெற்று மனுதாரருக்கு வழங்க வேண்டுமென்பதும் பொதுஅதிகார அமைப்பின் பணியல்ல. மனுதாரர் கோரியுள்ளது ஆலோசனை என்ற வகையில் அமைந்துள்ளது. பொதுத் தகவல் அலுவலர் இது போன்ற ஆலோசனைகளை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ்வழங்க இயலாது.மனுதாரர் வழக்கறிஞரையோ, இலவச சட்டஉதவி மையத்தையோ அணுகுவதுதான் முறையாக இருக்கும். | ஆணை எண் SA-17135/ மா.த.த.ஆ. /2015 நாள் 09.02.2016 |
| 38. | மனுதாரர் தனது 11.7.13 தேதியிட்ட மனுவில் தலைமை காவல் இயக்குநரக பொது தகவல் அலுவலரிடம் கேள்வியாக கேட்டு அனுப்பியுள்ளார். "பொதுமக்கள் காவல்துறை மேல் வெறுப்பில் உள்ளனர் என்பதை அறிவீர்களா? பொய் வழக்கு என்று முறையீடு வந்தாலும் காவல்துறை அவ்வழக்கு ரத்து செய்ய நிலைய காவலர்களுக்கு அதிகாரம் உண்டா? என கேள்விகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தொடுத்துள்ளார். அதன் பிறகு 10.8.13 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவற்றின் மீது தனக்கு தகவல்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என 10.9.13ல் ஆணையத்தை அணுகியுள்ளார். முதல் நோக்கிலேயே இவை போன்ற இனங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வராது என தெளிவாகிறது. | வழக்கு எண் 46012 நாள் 27.01.2014 (திரு வெ.க.அழகுத்தேவன் 2/246 இராசாசி வீதி, தகைகன்குளம், மதுரை 6) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | –இவை போன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்க சட்டத்தில் இடமில்லை என்பதால் இவ்வினாக்களில் எந்தவிதமான சாரமும் இல்லை என கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | |
| 39. | தாங்கள் தங்கள் மனுவில் கோருவது மருத்துவ ஆலோசனை. “தகவல்” என்ற விளக்கத்திற்கு உட்பட்ட தல்ல என்பதால் தங்களது மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. | வழக்கு எண் 26364/தொடர் நடவடிக்கை/2012 நாள்: 01.08.2012 |
| 40. | மனுதாரர் தனது குடும்ப அட்டை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதனை புதுப்பித்துத் தருமாறு கோரியுள்ளார். இக்கோரிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வராது. இச்சட்டத்தின் கீழ் தகவல் மட்டுமே கோர இயலும். குறைதீர் நடவடிக்கை கோர இயலாது. மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்து மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லையென்று கருதி, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது. மனுதாரர் குடும்ப அட்டையை புதுப்பித்துத் தரக் கோருவது குறித்து துறை மேலதிகாரிகளிடம் முறையாக விண்ணப்பம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 1000006 நாள் 31.03.2010 (Thiru K P Chennimalai (vs) The Special Tahsildar Civil Supplies Taluk Supply Office Gopichettipalayam Erode District) |
| 41. | மனுதாரருக்கு ஏதாவது ஒரு வடிவில் இருக்கும் தகவலைத்தான் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் இல்லாத கருத்துக்களை உருவாக்கி தர இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. | வழக்கு எண் 23000 நாள் 19.01.2010 (T N Vidyanandan (vs) Director of Elementary Education) |
| 42. | மனுதாரர் இன வாரியாகத் தனித் தனியாகப் பட்டியல் தயாரித்து அனுப்பும்படி கேட்டுள்ளார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோப்புகளில் உள்ள தகவல்களை உள்ளவாறு கேட்டுப் பெறுவதற்குத் தான் மனுதாரருக்கு உரிமை உள்ளது. அவற்றை இன வாரியாகப் பிரிப்பது, தொகுப்பது, மனுதாரர் விரும்பும் பிரிவுகளில் அளிப்பது போன்றவை தகவல்களை உருவாக்குவதற்குச் சமமாகும். | வழக்கு எண் 28002 நாள் 17.03.2010 (Thiru S Kannan (vs) Commissioner of Employment and Training) |
| 43. | தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் ஆவணங்கள் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். ஆவணங்களில் உள்ள தகவல்கள் தரப்படாமல் உருவாக்கப்பட்ட தகவல்கள் தருவதை தவிர்க்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். | வழக்கு எண் 3016 நாள் 18.05.2011 (K Natrajan (vs) Assistant Director of Town Panchayats Cuddalore) |
| 44. | மனுதாரர் தகவல்களை cubic metre அளவில் கேட்டுள்ளார். கோப்புகளில் உள்ள அளவுகளை, 2(f)ன்படி அப்படியே தந்ததாகப் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். மெட்ரிக் டன்களில் உள்ள அளவை cubic metre இல் மாற்றுவது தகவலை உருவாக்குவது ஆகும். இச்சட்டத்தில் அதற்கு இடமில்லை. | வழக்கு எண் 26239 நாள் 16.02.2010 (திரு ஆ. ரமேஷ் குமார், (vs) புவியியல் மற்றும் சுரங்கத் துறை, பெரம்பலூர்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 45. | ஆணை ஆங்கிலத்தில் உள்ளதாகவும், தமிழாக்கம் செய்து, சான்றொப்பமிட்டுத் தரும்படியும் மனுதாரர் வேண்டினார். விதி 2(f) ன்படி கோப்பில் என்ன தகவல் எப்படி இருக்கிறதோ, அதைத்தான் கேட்டுப் பெறலாமே தவிர மொழியாக்கம் செய்துத் தரும்படி கூறுவது ஆணையத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது | வழக்கு எண் *14065* நாள் *22.02.2011* (Thiru Syedjamal Thirupature 635 601 (vs) Directorate of School Education) |
| 46. | மனுதாரர் சம்பள ஏற்ற முறை *5000-150-8000* selection grade *01/08/2000* முதல் *31/12/2007* முடிய ஒவ்வொரு மாதமும் கணக்கிட்டு மேற்கூறிய வருடத்திற்கு மொத்த சம்பளம் எவ்வளவு வித்தியாசம் என்ற விவரத்தைக் கேட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தான் பணிபுரியும் அலுவலக ஆவணங்களில் உள்ள விவரங்களைத்தான் வழங்க முடியும். தகவல்களைப் புதிதாக உருவாக்கி வழங்கிட இயலாது. ஆகவே, இல்லாத தகவலை மனுதாரருக்கு வழங்க வேண்டியதில்லை. | வழக்கு எண் *15595* நாள் *03.02.2009* (திரு. ஆர். சீனிராஜ் (vs) பொதுத் தகவல் அலுவலர், கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம், கோவை) |
| 47. | கோப்பிலுள்ள வரைபடம் தரப்படாமல் அலட்சியமாகக் கையினால் வரைந்த ஒரு வரைபடம் தரப்பட்டுள்ளதை ஆணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது. | வழக்கு எண் *63* நாள் *26.04.2011* (A Senthilkumar (vs) Thasildar Manachanallur Taluk) |
| 48. | பொதுத் தகவல் அலுவலர் *27/02/2009* அன்று இடத்தைப் பார்வையிட்டு அதன் அடிப்படையில் சில தகவல்களை வழங்கியுள்ளார். சட்டப்படி ஏற்கனவே உள்ள தகவல்களைத்தான் தரவேண்டும். புதிதாக உருவாக்கித் தர வேண்டியதில்லை. அரசு ஆவணங்களில் மனுதாரர் கேட்ட தேதியில் உள்ள தகவல்கள் தரப்பட வேண்டும் என்பதுதான் சட்டத்தில் உள்ளது. *27/02/2009* அன்று தல பார்வையிட்டு தகவல்கள் வழங்கியது என்பது புதிதாகத் தகவல்களை உருவாக்குவதாகும். இது தேவையற்றது. இதுபோன்ற முயற்சிகள் தவிர்க்கப்படவேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது | வழக்கு எண் *15895* நாள் *02/03/2009* திரு.வி.கோபாலகிருஷ்ணன் (vs) பொது தகவல் அலுவலர், அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் நுங்கம் பாக்கம் சென்னை *600 034*) |
| 49. | Leave details cannot be denied under sec 8(1)(e) and 8(1)(j) | (CIC Decision No. IC/SG/A/2010 /000505/11673 dated 25-03-2011) |
| 50. | *01.04.2013* முதல் *30.04.2013* வரையிலான திருமதி கே.ஆர். வித்யா என்பவரின் வருகைப் பதிவேட்டின் நகலை மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்குத் தகவலாக இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு வார காலங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் *2005*, பிரிவு *7(6)*ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்புமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது. | வழக்கு எண் *53270* நாள் *02.04.2013* (திருமதி ரெ. கஸ்தூரிபாய் (vs) பொதுத் தகவல் அலுவலர், அரசு தலைமை மருத்துவமனை,திருவள்ளூர் |
| 51. | மனுதாரர் அந்த வழக்கில் ஒரு தரப்பினராக இல்லாத நிலையிலும் வழக்கு முடிவு பெறாத நிலையிலும், அவர் மேற்சொன்ன ஆவணங்களின் நகல்களை கேட்டுப் பெறுவதற்கு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் வழிவகை இல்லை | (வழக்கு எண் *47361*/மா.த.த.ஆ/*2012* நாள் *13.02.2013*) (திரு.எஸ்.கணேசன் (vs) இந்துசமய அறநிலையத் துறை, சேலம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 52. | தேவையில்லாமல் கேட்டத் தகவல்களையே மீண்டும் மீண்டும் கேட்டு அரசின் நேரத்தையும் ஆணையத்தின் நேரத்தையும் வீணாக்காமல் இருக்கும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது | வழக்கு எண் 12524 நாள் 19.1.2011 (S Radhakrishnan Ranipet (vs) AH&F Dept. Chennai 6) |
| 53. | மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் 17.04.2013 அன்று கலை பண்பாட்டு இயக்ககத்தில் ஆணையராகப் பணியாற்றிய அதிகாரியின் பணிப்பதிவேடு நகல்களைத் தகவல்களாகக் கேட்டு, பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். இன்றைய விசாரணையின்போது, ஆஜரான மனுதாரர் தனக்கு விருது/பரிசில் வழங்கப்படவில்லை என்றும், அதன் காரணமாகவே, தான் இந்தத் தகவலைக் கேட்பதாகவும் தெரிவித்தார். ஆகவே, முழுக்க முழுக்க இது ஒரு தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாகக் கேட்கப்படும் தகவல் என்பதும், இதில் எவ்விதப் பொது நலனும் இல்லை என்பதும் தெளிவாகிறது. | வழக்கு எண் 39419/மா.த.ஆ./2013 விசாரணை நாள் 08–01–2014 (திரு. A.P.சண்முகம் (VS) பொதுத்தகவல் அலுவலர் கலை பண்பாட்டு இயக்ககம், தமிழ் வளர்ச்சித்துறை வளாகம் (2ம் தளம்) ஆல் சாலை, எழும்பூர், சென்னை–8 |
| 54. | 23.05.2013 நாளிட்ட மனுவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்திக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுமதி கோரியுள்ளார். இது போன்ற நிகழ்வுகள் தகவல் அறியும் உரிமைச் கீழ் நடவடிக்கை எடுக்க இயலாது. எனவே மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | வழக்கு எண் 23221/ மா.த.த.ஆ/13 நாள் 23.07.2013 (திரு. எ.கண்ணன் த/பெ. அய்யாவு சின்னமாரியம்மன் கோயில் தெரு, க.எண்.20, பரசுராமன் பிள்ளை சந்து கருங்கல்பாளையம் அஞ்சல், ஈரோடு 3) |
| 55. | ஒப்பந்தக்காரர் பட்டியல் மற்றும் ஒப்பந்தக்காரர் நியமனம் சம்பந்தமான கோப்புகள் நிரந்தரமானவை என்று ஆணையம் கருதுகிறது | வழக்கு எண் 24218 நாள் 08.02.2010 (திரு. கே. முத்து கிருஷ்ணன் (vs) வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், தியாக துர்க்கம்) |
| 56. | DPC minutes are to be disclosed | (CIC-Decision Appeal No.566 ICPB/2007, F. No.PBA/ 06/537 dated 14.06.2007) |
| 57. | The Commission in the past has held that most transactions in tax payer's money such as salary and wages, allowances and financial benefits such as LTC etc. are in public domain for the reasons that they involve transactions in public funds. Accordingly, the details about the amounts claimed as LTC, destination, block years for which claims were made, number of persons for whom the claim was made, dates of filing the claim, advance taken if any should be provided to the appellant within 30 days from the date of receipt of this order. However, the other personal details such as the names of family members, their age etc. are personal information and need not be disclosed. | File No. CIC/BS/A/2012/ 001880/ 4009 26 November 2013 (Mr. M. A. Khan (vs) CPIO & Sr. Superintendent of Post Offices) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 58. | Under Section 2 (f) of the RTI Act, the Anna University should have stepped in and collected the information from the Velammal College of Engineering and Technology and furnished to the petitioner. They should not have confirmed the orders of the Principal, Velammal College of Engineering and Technology. The Public Authority has miserably failed on this. The Anna University, Tirunelveli is conducting examinations for Velammal College of Engineering and Technology, as it is one of the affiliated Colleges of Anna University. They have access to the information asked for by the petitioner. There is no orders from the Court directing the Public Authority not to supply the information. Keeping the objective of the Act in mind and as per Section 2 (f) of the RTI Act, the Public Authority of the Anna University is directed to obtain the information from the College and furnish the same to the petitioner | Case No.11841 Dated 8.10.2010 (Thiru A. Riyaz (vs) Registrar, Anna University, Tirunelveli) |
| 59. | மனுதாரர் தனது பிரிவு 6(1)ன் கீழ் கொடுத்துள்ள மனுவில் ஒரு தினசரி நாளிதழின் செய்தி நறுக்கு ஒன்றினை இணைத்து அந்த செய்தி நறுக்கிலுள்ள வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலினை கேட்டுள்ளார். அதன் பிறகு முதல் மேல்முறையீடும் செய்துள்ளார். இவை போன்ற இனங்களுக்கு பொது அதிகார அமைப்பு தகவல்கள் அளிக்க தேவையில்லை, இவை போன்ற நடவடிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை தவறாக பயன்படுத்துவதற்கு உதவுவதாகும் என தீர்மானித்து இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | வழக்கு எண்.43345 நாள் 08.01.2014 (திரு சொ.குமார், த/பெ.சொக்க லிங்கம் நெ.5 வேம்புலி பண்ணைக் காரன் தெரு, உள்ளகரம், சென்னை 91 காஞ்சிபுரம் மாவட்டம்) |
| | **சட்டப் பிரிவு 2(h):-** | |
| 60. | இவ்வாணையத்தின் விசாரணையில் தலைமையாசிரியர் தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்று தகவல் உரிமைச் சட்டப் பிரிவு 2(h) இன் கீழ் அரசு உதவி பெறாத தனியார் டிரஸ்டான சம்பந்தப்பட்ட பள்ளி பொது அதிகார அமைப்பாக கருத சட்டத்தில் வழி வகை இல்லை என்று இவ்வாணையம் முடிவு செய்கிறது. | வழக்கு எண் 28143 நாள் 09.04.2010 (திரு. எஸ். ஜெயராமன் (vs) ஸ்ரீ திருவொற்றீஸ்வரர் இலவச உயர்நிலைப் பள்ளி, சென்னை 600 112) |
| | **சட்டப் பிரிவு 2(h)(d)(ii)-:-** | |
| 61. | சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 2(h)(d)(ii)ன்படி பொது அதிகார அமைப்பின் வரையறைக்குள் வராது எனவும், இம்மேல்முறையீட்டு மனு ஆணையத்தின் விசாரணைக்கு உட்பட்டதல்ல எனவும் ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. | வழக்கு எண்.23059/E/2014 ஆணை நாள் 20.11.2015 (திரு. பி. சசிகுமார் (எதிர்) பொதுத் தகவல் அலுவலர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சேலம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **சட்டப் பிரிவு 2(j):-** | |
| 62. | மேலும், மனுதாரர் கோரும் ஆவணங்கள் முதல் கேள்வி, 8 Volume கள் ஆகும். இவை சுமார் 1750 பக்கங்களைக் கொண்டதாகும். மனுதாரர் அந்தக் கோப்புகளைப் பார்வையிட்டு தனக்குத் தேவையான பக்கங்களை மட்டும் எடுத்துக் கொள்ளலாம். 1750 பக்கங்களும் தேவை என்று மனுதாரர் கூறினால், அது தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 7(9)ஐ ஈர்க்கும் என்பதால், தேவையான பக்கங்களை மட்டும் எடுத்துக்கொள்ளுமாறு மனுதாரர் பணிக்கப்படுகிறார். | வழக்கு எண் 32483/09/விசாரணை நாள் 15/06/2010 (திரு. P. சீனுவாசன் (vs) பொது தகவல் அலுவலர் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கடலூர் 1 |
| 63. | மார்ச் மாதம் 21 முதல் 25 தேதி வரையுள்ள 5 நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் கல்லூரி நிர்வாகத்திற்கும், மனுதாரருக்கும் வசதிப்பட்ட ஒரு நாளை முடிவு செய்து மனுதாரர் 30.09.2010 நாளிட்ட மனுவில் கேட்டுள்ள தகவல்கள் தொடர்பான ஆவணங்களைப் பார்வையிடுவதற்குக் கல்லூரி முதல்வர் ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று ஆணையிடப் படுகிறது. ஏதேனும் ஆவணங்களின்நகல்கள்மனுதாரருக்குத்தேவைப்பட்டால் பக்கத்திற்கு ரூ.2/- வீதம் பெற்றுக்கொண்டு நகல்களை அளிக்கும்படி ஆணையிடப்படுகிறது. ஆவணங்களைப் பார்வையிடுவதற்கு முதல் ஒரு மணி நேரம் இலவசமாகவும், அடுத்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூ.5/- வீதம் பெற்றுக்கொண்டு அனுமதிக்குமாறு ஆணையிடப்படுகிறது. மனுதாரர் கோப்புகளைப் பார்வையிடும்போது கல்லூரியைச் சார்ந்த ஒருவர் கோப்புகளின் பாதுகாப்பைக் கருதி மனுதாரருடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 31931 நாள் 10.03.2011 (திரு S. முஹம்மது ஷாஜகான் (vs) தமிழ் நாடு வக்ஃபு வாரியம், 1, ஜாபர் சிராங் தெரு, சென்னை) |
| 64. | டீசல் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடம் ஒரு பாதுகாப்புப் பகுதியாக கருதப்படுவதால் வெளி நபரை அனுமதிப்பதில் உள்ள சிரமங்களை பொதுத் தகவல் அலுவலர் எடுத்துரைத்தார். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 2(j) ன்படி எந்த வேலை இடத்தையும் பார்வையிட மனுதாரருக்கு அனுமதி வழங்கலாம். எனவே, டீசல் சேமித்து வைக்கப்பட்டுள்ள இடத்தையும் மனுதாரர் பார்வையிடலாம். பார்வையிட்டு அவர் விவரங்களைச் சேகரிக்கலாம். அப்போது பாதுகாப்புக்குக் குந்தகம் இல்லாமல் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை கடைப்பிடித்து மனுதாரருக்கு அலுவலகக் கோப்புகளையும், இருப்பு வைத்திருக்கும் டீசலையும் பார்வையிட இவ்வாணையம் உத்தரவிடுகிறது. | வழக்கு எண் 15410 நாள் 09.01.2009 (திரு. கலைச்செல்வன் (vs) பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 65. | The issues are two:<br>1. Whether videography can be permitted.<br>2. The status of providing information sought by the appellant.<br>There is no provision in the Act disallowing Videography, and therefore, cannot be excluded unless it violates the parameters of any information sought and agreed to be provided. | Appeal No. CIC/WB/A/2006/ 00144 Dated: 20.3.06 (Shri Sanjay Singh (vs) P.W.D.) |
| 66. | சத்துணவுக் கூட மேம்பாட்டுப் பணியின் போது பயன்படுத்திய செங்கற்களின் தரம் பற்றி அறிய அதன் மாதிரியை (sample) மனுதாரர் கேட்டுள்ளபடி (அவர் ஆய்வகத்தின் சோதனை மேற்கொள்ள) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. | வழக்கு எண் 24446 நாள் 21.10.10 (திரு டி ராஜா (vs) ஊராட்சி ஒன்றியம், கிணத்துக் கடவு) |
| 67. | The inspection of computers cannot be allowed as there would be many other information on the computers which would qualify for exemption | (File No.CIC/SM/A/2013/001302/ RM dated 30.07.2014) |
| 68. | மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்படும் தகவல்களில், உரிய பொதுத் தகவல் அலுவலரின் கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை கண்டிப்பாக இருக்க வேண்டும். வழங்கப்படும் தகவல்களில் ''தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005இன் வகைமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள்'' என்று முத்திரையிட்டு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். | வழக்கு எண். 32576 நாள் 27.03.2014 (திருமதி ஜெ.வாசுகி, (vs) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், 37, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர்43) |
| 69. | தமிழாண்டு 1087 (ஆங்கில ஆண்டு 1912) வருடத்திய தொன்மை வாய்ந்த ஆவணத்தின் நகலை இப்போது கொடுப்பது இயலாத காரியம் என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கிறார். இந்த வழக்கின் சூழ்நிலையில், மனுதாரர் அவ்வாறு கையாள முடியாத ஆவணத்தை அலுவலகத்திற்கு, அலுவலக நேரத்தில், நேரில் சென்று பார்வையிட்டுக் கொள்ளலாம் என்றும் அந்த அளவிற்குத்தான் மனுதாரருக்கு வாய்ப்பு அளிக்க இயலும் என்றும் ஆணையம் கருதுகிறது. | வழக்கு எண் 14416/F/2014 நாள் 23.06.2015<br>(திரு. V. தங்கப்பன் (vs) பொதுத் தகவல் அலுவலர், சார் பதிவாளர் அலுவலகம், இடலாக்குடி, கன்னியாகுமரி மாவட்டம்) |
| | **சட்டப் பிரிவு** 3: | |
| 70. | தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு, மேல்முறையீட்டு மனு, ஆணையத்திற்கு அனுப்பிய இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் 04.12.2014 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய கடிதத்தில் எல்லாவற்றிலும் ரப்பர் முத்திரையிட்டு (Rubber Stamp) அதில் ஒன்றுக்கு மேற்பட்டோர் (இருவர்) கையொப்பமிட்டு செயலாளர், பொருளாளர் என உள்ளது. இவை போன்ற மனுக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்கத்தக்கதல்ல. தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி ஒரு இந்திய குடிமகனால் தகவல்கள் கோரப்படவேண்டும். இவ்வாறு அறக்கட்டளை சார்பாக பெயரின்றி தகவல் கோரும் மனுக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. | வழக்கு எண்.22434 (7288/14)/மா.த.த.ஆ/2014 நாள் 11.12.2014 (வீரமங்கை ஸ்ரீதவமாரி யாதவ் (vs) பொதுத்தகவல் அலுவலர் முதலமைச்சரின் தனிப்பிரிவு அலுவலகம் தலைமைச் செயலகம், சென்னை 600 009) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 71. | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் அரசு ஊழியர் ஒருவர் தகவல் பெற உரிமையில்லையென்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 26.03.2010 அன்று அரசு ஊழிய ரும் இந்தியக் குடிமகனே, எனவே மனுதாரர் கேட்ட தகவல்களை விதி 7(6)ன் கீழ் இலவசமாக அளிக்கும்படி ஆணையம் ஆணையிட்டுள்ளது. | வழக்கு எண் 17993 நாள் 09.05.2011 (G.மனோகரன் (vs) அரசு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை) |
| 72. | மனுதாரர் குறிப்பிட்ட நிறுவனத்தின் பெயர் விவரத்தாளில் (Letter Pad) தகவல் கேட்டு விண்ணப்பித்ததாகவும், மனுதாரருக்கு நிறுவனம்/சங்கம்/கம்பெனி மூலமாக கோரும் தகவல்கள் தர இயலாது என்று தெரிவித்தது தவறு என்றும் தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் அளிக்கப்பட்ட விவரங்களின்படி நிறுவனங்களோ/ சங்கங்களோ/கம்பெனிகளோ தகவல் கோரி விண்ணப்பிக்கும் போது மறுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி குறிப்பிட்ட நபர் கையெழுத்திட்டு பெயரை தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்ட சங்கத்தினுடைய பெயர் விவரத்தாளை பயன்படுத்துவது எந்தவிதத்திலும் தகவல் தர மறுப்பதற்கு காரணமாக எடுத்துக்கொள்வதை இவ்வாணையம் ஏற்கவில்லை. | வழக்கு எண் 7708 நாள் 30.05.2011 (G.ரகோத்தமன் (vs) உதவி தொடக்கக்கல்வி அலுவலர், வாலா ஜாப்பேட்டை (மேற்கு), வேலூர் மாவட்டம்) |
| 73. | The Block Development Officer (Village Panchayat), also stated in that letter that as per the Right to Information Act only those above 18 years of age has the right to ask for information and necessary age proof for the same must be submitted, which is a specious invention of his. | Case No 10993 Dated: 25-03-2009 (Thiru T. Nataraj (vs) The PIO, Ponni Andal Panchayat, Tirukoilur Tk.) |
| 74. | The Public information officer who appeared before the Commission submitted that the petition filed under Section 6(1) of Right to Information Act, 2005 dated.21.09.2012 was filed by Thiru. A.R. Sakthivel, advocate, wherein he has stated that he has filed this petition on behalf of his client Mr.N.Ramani. There is no enclosure to the effect that Mr.Ramani has authorised Mr.Sakthivel to file the petition. The Public Information Officer quoted Section 3 of Right to Information Act, 2005 which runs as follows:<br>"Subject to the provisions of this Act, all citizens shall have the right to information"<br>He further added that as the petitioner/appellant is a 3rd party seeking information about the allotment made to Thiru.N.Ramani quoting Section 3 of the Right to Information Act, 2005 declined the request of the petitioner/ appellant under Section 8(1)(j) of Right to Information Act, 2005 Perusal of records reveal the submission of Public Information Officer as correct. Hence, on the basis of the records and enquiry the commission upheld the reply furnished by the Public Information Officer by letter dated.29.09.2015. As the petitioner/ appellant has filed this petition on behalf of another person, the petition filed under Section 6(1) of Right to Information Act, 2005 could not be accepted and hence the appeal is dismissed | தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண் 31482/E/2014 நாள் 01.10.2015 (Thiru A. R. Sakthivel, Advocate (vs) The Public Information Officer/Executive Engineer & Administrative Officer, Arignar Anna Nagar Division, Tamil Nadu Housing Board, Anna Nagar, Chennai – 600 040) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 75. | As far as the appellant is concerned he has requesting certain information through his advocate since his client has filed petition before Hon'ble High Court. In the application he is seeking only third party information which the appellant is not entitled to get through advocate. Since he has filed case before the Court he can seek this information only through the Court. Under RTI Act this information is exempted under section 8(1) (j) of the Act and therefore the appeal is dismissed. | CIC Appeal No.2709/ICPB/2008/ F.No.PBC/08/177 dated 14-08-2008 ((Mr. Om Prakash Mahana (vs) Union Bank of India) |
| | **சட்டப் பிரிவு 5(1): -** | |
| 76. | ...under the RTI Act there is no bar in designating more than one PIO in the same public authority. | (Case No. CIC/SS/A/2012/003523 Dated: 04.092013) |
| | **சட்டப் பிரிவு 5(2): -** | |
| 77. | Sub-section 5(1) of the Act requires every public authority to appoint as many Public Information Officers as may be necessary to provide information to persons requesting information under this Act. The public authority is also required by sub-section 5(2) of the Act to designate an officer at each sub-divisional level or other sub-district level as an Assistant Public Information Officer to receive the applications for information or appeals under this Act for forwarding the same forthwith to the Public Information Officer. | (Appeal No. 10/1/2005-CIC Dated: 25.02.2006) |
| | **சட்டப் பிரிவு 5(3): -** | |
| 78. | Sub-section 5(3) of the act empowers the Public Information Officers to deal with requests from persons seeking information and render reasonable assistance to the persons seeking such information. | (Appeal No. 10/1/2005-CIC Dated: 25.02.2006) |
| | **சட்டப் பிரிவு 5(4): -** | |
| 79. | The information asked for by the petitioner is quite voluminous in nature and is liable to be rejected under Section 7(9) of the Right to Information Act. The Public Information Officer explained the action taken by him to gather the information from the concerned departments and his inability to go beyond a limit to collect the information. The Public Information Officer should bear in mind that once the internal notes are sent seeking information from where they reside, the holder of information becomes a transferred Public Information Officer and as such the transferred Public Information | Case No.9703 dated 29.09.2010 (Thiru V Seshadri Salem 636 007 (vs) The Public Information Officer, Periyar University, Salem) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| . | Officer becomes liable under the penal provisions of the Act. The Public Information Officer may be having several limitations to collect the information from the various departments concerned, but the Act empowers only the Public Information Officer and Appellate Authority to facilitate supply the information to the petitioner. The Public Information Officer has all the powers as mandated by the Act to collect the information from the concerned. This is a typical case wherein the Public Information Officer has to depend on various other sections / departments to collect the information. The Public Information Officer cannot be expected to go from table to table, seat to seat to collect the information. He can only send office note to the concerned departments asking for the information to be supplied to the petitioner. | |
| | **சட்டப் பிரிவு 5(5): -** | |
| 80. | The Public Authority had also stated that as early as 15.6.07 they have written to the Village Panchayat President to supply the information and periodically reminded him and also sent a staff member to meet him in person and advised him to supply the information. The Panchayat President has been unrelenting. Finally under the pressure of to-day's enquiry the information was obtained yesterday and supplied yesterday to the petitioner and this was also acknowledged by the petitioner It is stated in this case that the Panchayat President has not supplied the information and he is the transferred Public Information Officer as per the provisions of the Act Section 5 (5) . Hence he is liable for penalty as per the Act. | Case No 26805 dated 24.6.2009 |
| 81. | விசாரணையின்போது, பொதுத் தகவல் அலுவலர், ஆணையம் 30 நாட்கள் கால அவகாசம் வழங்கினால், மனுதாரரின் நான்கு மனுக்களுக்கும் உரிய தகவல்களை வழங்கி அதுகுறித்து அறிக்கையை அனுப்புவதாக உறுதியளித்தார். பொதுத் தகவல் அலுவலரின் இக்கூற்றினை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பல்கலைக் கழகத்தின் வேறு பிரிவுகளிலிருந்து மனுதாரர் கோரிய தகவல்களைப் பெற்று வழங்க வேண்டியிருந்தால், சம்பந்தப்பட்ட பிரிவின் உதவிப் பதிவாளர், தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 5(5)ன்படி மாற்றப்பட்ட பொதுத் தகவல் அலுவலராகக் (Deemed PIO) கருதப்படுவார் எனப் பொதுத் தகவல் அலுவலருக்குத் தெளிவாக்கப்பட்டது. | வழக்கு எண் 47034/ விசாரணை/ சி/2013 ஆணை நாள் 29.12.2014 (திரு.ஆ.முத்துகிருஷ்ணன்,(VS) பொதுத் தகவல் அலுவலர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **சட்டப் பிரிவு 6(1): -** | |
| 82. | மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் பிரிவு 6(1)ன் கீழ் விண்ணப்பம் என தெரிவித்து கோரப்படும் தகவல்கள் என எழுதி சிறப்பு ஆணையாளர் மற்றும் அரசு செயலாளர், மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் (State Nodal Officer) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார். இதற்கு பொது அதிகார அமைப்பு தனது 17.04.2014 தேதியிட்ட கடிதத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)ன் வரப்பிற்குள் மனுதாரரின் மனு அமையப் பெறாததால் அவரது மனு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுவாக கருத இயலாது என தெரிவித்து கடிதம் அனுப்பியிருக்கிறது. இதே கருத்தை மேல்முறையீட்டு அலுவலரும் தனது 23.05.2014 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக உறுதி செய்துள்ளார்.<br>4. ஆணையத்திற்கு அனுப்பிய மனு, மேல்முறையீட்டு மனு மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டு மனு ஆகிவற்றை பரிசீலிக்கையில் மனுதாரர் "Tamil Nadu Consumer Association"என பெயரிட்டு அதில் மூன்று பேர்களின் பெயர் குறிப்பிட்டு மனுக்கள் அனுப்பியிருப்பதாக தெரியவருகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி ஒரு பொதுத் தகவல் அலுவலருக்கு ஒரு இந்திய குடிமகனால் மட்டுமே மனு அனுப்பப்படவேண்டும். யார் பெயரில் யார் கையெழுத்திட்டிருக்கிறார் என்பதை ஒரு குத்து மதிப்பாகத்தான் அறிய வேண்டியுள்ளது, தெளிவுபட இல்லை. பொது அதிகார அமைப்பு எடுத்த நிலைப்பாடு சரியென ஆணையம் கருதுகிறது. இந்நிலையில் இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை யெனக் கருதி வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. | வழக்கு எண் 22994/மா.த.த.ஆ/2014 நாள் 11.12.2014<br>(திரு சுப்புராயன் பொதுத் தகவல் அலுவலர் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை தலைமைச் செயலகம், சென்னை 600 009) |
| 83. | The above petition is not maintainable in the eyes of the RTI Act on the following grounds:<br>Section 6(1) reads<br>"**A person, who desires to obtain any information under this Act, shall make a request** in writing or through electronic means in English or Hindi or in the official language of the area in which the application is being made, accompanying such fees as may be prescribed, **to**-<br><br>a) The Central Public Information Officer or **State Public Information Officer**, as the case may be, **of the concerned public authority;**<br>b) the Central Assistant Public Information Officer or State Assistant Public Information Officer, as the case may be; | CASE NO.10764/SCIC/2013 dated 29.7.2013<br>(Thiru C.Anilkumar No.15/68 Tamarai Street, Chelli Amman Koil Street, Athipet, Chennai 600 058) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **specifying the particulars** of the information sought by him or her<br>The Act very clearly states that an individual shall make any request to the State Public Information Officer and not by a common petition addressed to several public authorities by affixing just one stamp of Rs.10/-. | |
| 84. | இன்றைய விசாரணையின் போது அலுவலக அசல் ஆவணங்களைப் பார்க்கும் போது மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் 21.06.2012 அன்று தாக்கல் செய்த மனுவில் உரிய வில்லை ஒட்டாமல் விண்ணப்பித்திருப்பது தெரிய வருகிறது. எனவே மனுதாரரின் இம்மனுதள்ளுபடி செய்யப்படுகிறது. | வழக்கு எண் 37263 நாள் 01.02.2013 (திரு. எஸ். தெய்வசிகாமணி (vs) மருத்துவக் கல்வி இயக்குநரகம், சென்னை 10) |
| 85. | The Personal Assistant to Revenue Divisional Officer, who was present for the enquiry was asked to produce the relevant file. A perusal of the file reveals that his petition dated 20-2-2008 has been affixed with two Rs.5/- stamps. Therefore the contention of the petitioner that the Public Information Officer/Appellate Authority are wrong in saying that his petition was not affixed with stamp. A letter has gone to the petitioner on 30-4-2008 saying, "பார்வையில் காணும் மனுதாரர் மனுவில் அரசிற்குச் செலுத்த வேண்டிய ரூபாய் 10க்கான விண்ணப்ப முத்திரைத் தாள் ஒட்டப்படவில்லை என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்ப முத்திரைத் தாள் ரூபாய் 10 ஒட்டப்பட்டு மீள சமர்ப்பிக்குமாறு மனுதாரர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்;". | Case No. 1173 Date 01.09.2009<br>(Thiru B.S. Manivannan, 184, Thennampalayam, Tirupur – 641 604 (vs) The Public Information Officer, Office of the Revenue Divisional Officer, Tirupur – 641 604) |
| 86. | மனுதாரர் முதலில் அஞ்சலக ஆணையை இணைத்து மனுக்கள்செய்துள்ளார். இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. ஆரம்ப கட்டத்திலேயே பொது அதிகார அமைப்பால் இம்மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br>தகவல்களைப் பொறுத்தவரையில், மனுதாரர் தனது மனுக்களில் கோரியுள்ளவை எல்லாம், மூன்றாவது நபர்களைக் பற்றிய தகவல்களாகும். மூன்றாவது நபர்களான சில வனச்சரக அலுவலர்களின்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை பற்றியும், அவற்றின் குற்றத்தாள் நகல்களும் கேட்டுள்ளார். பொது அதிகார அமைப்பு, மூன்றாவது நபர் குறித்து, இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றாமல், ஆவணங்களின் அடிப்படையில் இருக்கின்ற நகல்களைக் கொடுத்துள்ளது. இவ்வாறு மூன்றாவது நபர் பற்றிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் தகவல்களைக் கொடுப்பது, பொது அதிகார அமைப்பு, இச்சட்டத்தை முறையாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது. இது தவறானது. இனிவரும் காலங்களில் | வழக்கு எண். 58663 /மா.த.த.ஆ/ 2013 விசாரணை நாள் 20.05.2014<br>(திரு. எம். முருகேசன் (vs) பொதுத் தகவல் அலுவலர் மாவட்ட வன அலுவலகம் திண்டுக்கல் கோட்டம், திண்டுக்கல்–4) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | –இதுபோன்ற இனங்களில் கவனமாக இருக்க பொது அதிகார அமைப்பு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், மூன்றாவது நபரின் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கை பற்றிய தகவல்களைப் பொது நலன் இல்லாத பட்சத்தில் கொடுக்க வேண்டியதில்லை என்று உச்சநீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது. இவ்வாணையமும்இதுபோன்ற பல வழக்குகளில் இந்நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவித்துள்ளது. | |
| | நீதிமன்ற வில்லை மட்டுமே ஏற்புடையதாகும். இந்திய அஞ்சல் ஆணை ஏற்புடையதல்ல | ஆணை எண் 44635/B /2013 நாள் 01/11/2013 |
| | மனுதாரர் 07.11.2011 என்று தகவல் அறியும் உரிமைச் சட்ட முதல் மனுவில் எழுதியிருந்தாலும் அவர் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய தேதி 09.12.2011 என்று தெரியவருகிறது. அதோடுகூட மனுதாரர் அனுப்பியிருக்கக்கூடியது ரூபாய் பத்துக்கான (ரூ,10/) அஞ்சல் ஆணையெனவும் விசாரணையில் தெரியவந்தது. தகவல் அறியும் உரிமைச் சட்ட விதிகளின்படி இந்த அஞ்சல் ஆணை செல்லுபடியாகாது. ஆதலால் முதல் நோக்கிலேயே இந்த மனுவை பொது அதிகார அமைப்பு நிராகரித்திருக்க வேண்டும் என ஆணையம் கருதுகிறது. | வழக்கு எண் 27835 நாள் 18.09.2012 (திரு ஆர். செல்வராஜ் வழக்கறிஞர், vs பொது தகவல் அலுவலர்/காவல் ஆய்வாளர் அலுவலகம், கிராமிய காவல் நிலையம், ஆம்பூர் 635 802, வேலூர் மாவட்டம்) |
| 87. | மனுதாரர் திரு ப. பாவேந்தன் அவர்களின் 20.12.2011 நாளிட்டு, திரு என். அரிகிருஷ்ணன் அவர்களைப் பற்றி தகவல் கோரிய மனு மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 6(1) ல் தெளிவாக "பொதுத் தகவல் அலுவலருக்கு" மனு கொடுக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் துறைத் தலைவருக்கு அதுவும், பெயரால் கடிதம் அனுப்பிவிட்டு தகவல் வரவில்லை எனப் புகார் அனுப்பியுள்ளார். ஆரம்ப நிலையிலேயே இதனைப் புகாராக ஏற்க இயலாத நிலை உள்ளது. ஆகையால் தகவல் அறியும் சட்டத்தில் விதித்துள்ளபடி முறையாக மனு செய்யுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டு மனு நிராகரிக்கப்படுகிறது. | ஆணை எண் 3413/A/121 நாள் 10.02.12<br>(திரு ப. பாவேந்தன், 5/1, கீரமங் கலம், தாளக்குடி அஞ்சல், லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி 621 216) |
| 88. | மேற்கண்ட சட்டத்தின்படி, ஆவணங்களின் நகல்களை கோராமல் விளக்கம் கோரப்பட்டுள்ளது. இது இச்சட்டத்தின் வரம்பில் வராது. மேலும் எந்த தகவல் எந்த பொதுத் தகவல் அலுவலரிடம் கேட்டுப்பெற வேண்டும் என்று முதற்கண் மனுதாரர் தெரிந்து வைத்துக்கொண்டு அந்தந்த பொதுத் தகவல் அலுவலரிடம் தனித்தனியாக மனு செய்ய வேண்டும். அவ்வாரல்லாமல் அனைத்து தகவல்களையும் ஒரே பொதுத் தகவல் அலுவலரிடம் கோர வழிவகைகள் இல்லை மேலும் தங்களது முதல் மேல்முறையீடு குறித்து பொதுத் தகவல் அலுவலர்/ மேல்முறையீட்டு அலுவலர் அளித்துள்ள பதில் சரியானதே | ஆணை எண் 32483/F/2014 நாள் 10.03.2015 |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | என ஆணையம் கருதுகிறது. எனவே, தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 2(f) ன்படியான தகவல்களை மட்டுமே கேட்டுப்பெறலாம் என மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது | |
| 89. | மேலே குறிப்பிடப்பட்ட பிரிவின்படி தகவல் பெற விரும்புகிற ஒருவர் என்றுதான் உள்ளது. ஆயினும், ஒரு குழுவைச் சார்ந்த மூவர் கையொப்பமிட்ட மனுவினை அளித்துள்ளனர். எனவே, முதல் நோக்கிலேயே இந்த மனு இச்சட்டத்தின்கீழ் ஏற்க இயலாத மனு என்று தள்ளுபடி செய்யப்படவேண்டும். | ஆணை எண் 57090/2012 நாள் 05.03.2013 |
| 90. | மனுதாரர் தான் கோரும் தகவலை தெளிவாகக் குறிப்பிடவில்லை என்பதால் மனு நிராகரிக்கப் படுகிறது. | தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண் 48766/A/11-2 நாள் 22.02.2012 |
| 91. | எந்தவிதமான கோப்பு எண்களும் இல்லாமல் மனுதாரர் கேட்கின்ற தகவல்களைத் தேடிப் பார்த்தல் கடினமென்று பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்கின்றது. | வழக்கு எண் 11306 நாள் 14.10.2010 (திரு S.B. காந்தி, (vs) முதன்மை மாவட்ட நீதிபதி அலுவலகம், காஞ் சிபுரம்) |
| | **சட்டப் பிரிவு 6(2): -** | |
| 92. | Proof of citizenship is not required from an information seeker as matter of principle | Case No. CIC/LS/A/2010/000030 dated 26.04.2010 |
| 93. | பொதுத்தகவல் அலுவலர் தனது 08.11.2011 தேதியிட்ட கடிதத்தில் தகவல்கள் எதற்காகத் தேவைப்படுகிறது என்பதைத் தெரியப்படுத்தவும் என்று குறிப்பிட்டு மனுவைத் திருப்பி அனுப்பியுள்ளார். மனுதாரர் இந்த பதிலையும் இணைத்து இவ்வாறு திருப்பியனுப்பியது சரியல்ல என்று இவ்வாணையத்திற்கு புகார் அனுப்பியுள்ளார். தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(2)ல் தகவல் பெறுவதற்கு எவ்விதக் காரணங்களையும் கேட்கக்கூடாது என்றுமிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் சூழ்நிலையில், ஒரு தலைமை குற்றவியல் நீதிபதி இவ்வாறு காரணத்தைக் கேட்டு மனுவைத் திருப்பியனுப்பியிருப்பது சட்டத்திற்கு முரணானதாக உள்ளது என்று மனுதாரரே சுட்டிக்காட்டியுள்ள சூழ்நிலையிலும், விசாரணையின்போது, இதுகுறித்து மனுதாரர் ஆணையத்தின் கவனத்தை ஈர்த்ததாலும், இச்சட்டப் பிரிவு 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை இவ்வாணை பெற்ற 15 நாட்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு பொதுத் தகவல் அலுவலர் பணிக்கப்படுகிறார். | வழக்கு எண். 54916/மா.த.த.ஆ/ 2012 விசாரணை நாள் 09.07.2013 (திரு. அ.சங்கரலிங்கம் (vs) பொதுத் தகவல் அலுவலர் தலைமை குற்ற வியல் நீதிபதி மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்றம், தூத்துக்குடி) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 94. | மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் மனு பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தால் கிடைக்கப் பெற்று 30 நாட்களுக்கு மேல் ஆன நிலையில் மனுதாரர்/ மேல்முறை யீட்டாளரை உரிய கட்டண தொகையான ரூ.6 யை செலுத்த அறிவுறுத்தியது தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005ன் படி ஏற்புடைய செயல் அல்ல. இவ்வழக்கில் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரும் தகவலானது சட்டம் சார்ந்த வழக்கு தொடர்புடைய தகவல் என பொதுத் தகவல் அலுவலர் கூறும் கூற்று, மனுதாரர்/ மேல்முறையீட்டாளரின் மனுவில் மனுதாரர் சிலரால் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டதால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்று குறிப்பிட்டுளள நிலையில் உறுதியாகிறது.<br>மேற்கூறிய சூழ்நிலையில் இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரண்டு வார காலத்திற்குள் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் ஆளறி அடையாளத்துடன் நேரில் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் தாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தால் அவருடைய சிகிச்சை தொடர்புடைய ஆவணங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி மனுதாரருக்கு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது. | (வழக்கு எண் SA4014/E/2015 நாள் 06.08.2015)<br><br>(திருமதி. காசியம்மாள், (எதிர்) பொதுத் தகவல் அலுவலர் / உதவி மருத்துவ அலுவலர், அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருவண்ணாமலை மாவட்டம்) |
| **சட்டப் பிரிவு 6(3): -** | | |
| 95. | The Public authority to whom the application is made is not required to collect information from different public authorities to supply it to the applicant. | No.10/2/2008-IR, GOI, Ministry of Personnel, Public Grievances & Pensions, Department of Training dated 01-06-2009 |
| 96. | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு பொதுத் தகவல் அலுவலகத்தில் என்ன என்ன தகவல்கள் உள்ளதோ அதைத் தான் தர வேண்டுமே தவிர 172 கிராமங்களில் இருந்தும் தகவல்களை வாங்கித் தருவது என்பது அலுவலகப் பணியைப் பெரிதும் பாதிக்கும் என்பதால் விதி 7(9)ன் கீழ் இவ்வினா தள்ளுபடி செய்யப்படுகிறது. உரிய அலுவலகங்களை அணுகி உரிய தகவல் பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதை ஆணையம் ஏற்கிறது. | வழக்கு எண் 30038 நாள் 15.02.2011 (Thiru P Ravi Villupuram District (vs) The Public Information Officer Office of the Tahsildar Sankarapuram Villupuram District) |
| 97. | மேற்கண்ட பிரிவின்படி இந்த நிகழ்வில் மனு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. அதுவும் சட்டத்தில் ஒரு அதிகார அமைப்பு என்றுதான் குறிப்பிட்டுள்ளதே தவிர, பல்வேறு அதிகார அமைப்புகளுக்கு மாறுதல் செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. அது மட்டுமல்லாமல், ஒரு பொது அதிகார அமைப்பு | தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண் 31988/2012 நாள் 08.10.2012<br>(திரு. இரா.பாலகிருஷ்ணன் (vs) பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவண் ணாமலை) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | வெறொரு பொது அதிகார அமைப்புக்கு மனுவை மாறுதல் செய்தவுடன், எந்த ஒரு பொதுஅதிகார அமைப்புக்கு முதன் முதலில் மனு அனுப்பப்பட்டதோ, அந்த பொது அதிகார அமைப்பின் கடமை தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி முடிந்து விடுகிறது. அதன்பின்னர், மனு எந்தப் பொது அதிகார அமைப்பிற்கு மாறுதல் செய்யப்பட்டதோ அந்தப் பொது அதிகார அமைப்பைத்தான் மனுதாரர் அணுகவேண்டும்.<br>ஒரே மனுவில் பல்வேறு அமைப்புகளிடம் தகவல் கோரி பெறுவதற்கு சட்டத்தில் வழிவகை இல்லை. எனவே, நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கருதி வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. | |
| 98. | தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6 (3) பின்வருமாறு –<br><br>"6(3) எந்த ஒரு தகவல்,–<br><br>i. பிறிதொரு பொது அதிகார அமைப்பினால் வைத்து வரப்படுகிறதோ, அல்லது<br><br>ii. பிறிதொரு அதிகார அமைப்பின் செயற்பணிகளுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக அதன் உறு பொருளைக் கொண்டிருக்கிறதோ,<br><br>அந்தத் தகவலைக் கோரி ஒரு பொது அதிகார அமைப்பிடம் விண்ணப்பம் ஒன்று செய்கிறவிடத்து, அந்த விண்ணப்பம், எந்தப் பொது அதிகார அமைப்புக்குச் செய்யப்பட்டதோ அந்தப் பொது அதிகார அமைப்பு அந்த விண்ணப்பத்தினை அல்லது அதன் பகுதியினை பிற அதிகார அமைப்பிற்கு மாற்றல் செய்து, அத்தகைய மாற்றம் பற்றி உடனடியாக விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தல் வேண்டும்."<br>மேற்கூறிய பிரிவில் "ஒரு பொது அதிகார அமைப்பிற்கு மனு செய்யப்படுமேயானால், பிறிதொரு அமைப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. பிறிதொரு என்பது ஒரு அதிகார அமைப்பைத்தான் குறிக்குமே தவிர பல்வேறு அதிகார அமைப்புகளைக் குறிக்காது. இந்த சட்டத்தில் ஒரு பொது அதிகாரஅமைப்பிற்கு என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, பல்வேறு பொது அதிகார அமைப்புகளுக்கு என்று பொருள் இல்லை. இவ்வாறிருக்கக்கூடிய சூழ்நிலையில், மனுதாரர் தனது மனுவினை தனித்தனியே ஒவ்வொரு குறிப்பிட்ட பொது அதிகார அமைப்பிற்கும் அனுப்பியிருக்க வேண்டும்.<br>அந்தப் பொது அதிகார அமைப்பும் தங்கள் அமைப்பின் வசம் தகவல் இல்லாத நிலையில், வேறு ஒரு பொது அதிகார அமைப்பிற்குத்தான் மாற்ற முடியுமே தவிர, பல்வேறு பொது அதிகார அமைப்புகளுக்கு | வழக்கு எண் 14609/மா.த.த.ஆ/2013<br>விசாரணை நாள் 14.08.2013<br>(திரு. P.கல்யாணசுந்தரம் (vs) உள் (காவல்) துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009.) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | மாற்ற வேண்டிய கட்டாயம் சட்டப்படி இல்லை. அதுமட்டுமல்லாமல், மாற்றப்பட்ட பொதுஅதிகார அமைப்பும் தொடர்ச்சியாக வேறு பல பொது அதிகார அமைப்புகளுக்கு மாற்ற வேண்டும் என்றும் இச்சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆக, சட்டப் பிரிவுகளை கூர்ந்து நோக்குகையில், ஒரே ஒருபொது அதிகாரஅமைப்பிற்கு மனுசெய்து அந்த பொது அதிகார அமைப்பும் தகவல் வேறு ஒரு பொது அதிகார அமைப்பில் இருக்குமானால், அந்த அமைப்பிற்கு மாற்ற வேண்டும் என்பதே சரியாகும். | |
| 99. | மனுதாரர் மனுவில் அரசுக் கோப்பில் உள்ள ஒளி நகல்கள் கேட்டு விண்ணப்பித்துள்ளார். மனுதாரர் தெளிவாக அரசுக் கோப்பின் நகல்கள் கேட்டிருந்தும் தவறுதலாக தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு தகவல் தர அனுப்பப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம் தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்கவில்லை. | வழக்கு எண் *22997* நாள் *19.01.2010* (திரு. இரா. சுப்பையன் (vs) பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை *600 009)* |
| | **சட்டப் பிரிவு 7(1): -** | |
| 100. | The PIO is also warned that not to delegate the statutory authority vested in him under Section 7(1) of the RTI Act to his subordinates, by allowing them to reply to the RTI applications. | File No: CIC/AD/A/2010/001254 dated 08-11-2010 |
| 101. | **LIFE & LIBERTY CASES:-**<br>The life and liberty provision can be applied only in cases where there is an imminent danger to the life and liberty of a person and the non-supply of the information may either lead to death or grievous injury to the concerned person. Liberty of a person is threatened if she or he is going to be incarcerated or has already been incarcerated and the disclosure of the information may change that situation. If the disclosure of the information would obviate the danger then it may be considered under the proviso of Section 7(1). The imminent danger has to be demonstrably proven. The Commission is well aware of the fact that when a citizen exercises his or her fundamental right to information, the information disclosed may assist him or her to lead a better life. But in all such cases, the proviso of Section 7(1) cannot be invoked unless imminent danger to life and liberty can be proven. | Decision No. CIC/SG/C/2009/ 001169/ 4696 Complaint No. CIC/ SG/C/ 2009/ 001169 Dated 3-09-2009 |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **சட்டப் பிரிவு** 7(3):--- | |
| 102. | மனுதாரர் திருவாரூர் வட்டாரம், கூடூர் ஊராட்சிக்கு உட்பட்ட நாரணமங்கலம் கிராமத்தில் கழிவுநீர் வாய்க்கால் அமைப்பது குறித்துத் தகவல்களைக் கேட்டிருக்கின்றார். 554 பக்கங்களுக்கு உரிய ரூ.1108/– செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளதால் மனுதாரர் தொகையைச் செலுத்தியுள்ளார். ஆனால் 323 பக்கங்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. 231 பக்கங்கள் விடுபட்டுள்ளன எனவும், அளிக்கப்பட்ட பக்கங்களின் எண்கள் வரிசையாக இல்லையெனவும், அழிக்கப்பட்டு மாற்று எண்கள் தரப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் மேல் முறையீட்டு மனுவில் குறித்துள்ளார். இது குறித்துப் பொதுத் தகவல் அலுவரிடம் விசாரித்த போது அரசு கோப்புகளில் உள்ள தகவல்களை நகல் எடுத்துத் தரும்போது தகவல் இல்லாத பின்பக்கங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல் மற்ற பக்கங்களுக்கு எண்கள் போடப்பட்டதில் கோப்புகளிலுள்ள எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறியதை ஆணையம் ஏற்கின்றது. நகல் எடுக்காத பக்கங்களுக்கும் சேர்த்து மொத்த கோப்பிற்கும் ரூ.1108/— கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது. தகவல்கள் அனைத்தும் பதிவுத் தபாலில் மனுதாரருக்கு அனுப்பப் பட்டதாகவும், ரூ.440/— செலவாயிற்று எனவும், இது குறித்து வழக்கு நடைபெற்று வருவதாகவும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தகவல்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டுமென்று விதிமுறைகள் இல்லை. இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மனுதாரர் கூறுவது போல விடுபட்ட 231 பக்கங்களுக்கு உரிய தொகை ரூ.462/—ஐ உடனடியாக மனுதாரருக்குத் திருப்பித் தரவேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. இந்த செலவினத்தைப் பொதுத் தகவல் அலுவலர் தனது சொந்த பொறுப்பில் ஏற்க வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது | வழக்கு எண் 22147 நாள் 15.07.2011 (திரு என். சம்பந்தம் (vs) பொதுத் தகவல் அலுவலர், இணை இயக்குநர் (ஊராட்சிகள்), திருவாரூர் 610 004) |
| 103. | பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் தகவல்களைப் பெறுவதற்கு உத்தேசமாக ரூ.10,000/-மும், தகவல்களைச் சேகரிக்கும் 2 நபர்களுக்கு ஊதியமாக ரூ.15,000/-மும் செலுத்த வேண்டுமென்று பதிலளித்துள்ளார். மனுதாரருக்கு 1000 பக்கங்கள் ரூ.10/- வீதம் ரூ.10,000/– கொடுக்க வேண்டுமென்றும், தேடு கூலி ஊதியமாக ரூ.15,000/- தரப்பட வேண்டுமென்றும் தகவல் உரிமைச் சட்டத்திற்கு முற்றிலும் முரணான. தவறான தொகையைச் செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் மீது தகவல் உரிமைச் சட்டம் விதி 20(2)ன் கீழ் உரிய நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்கு 2 மாதத்திற்குள் அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் கேட்டுக் கொள்ளப் படுகிறார். | வழக்கு எண் 15687 நாள் 03.02.2009 திரு பெ.குமார் (vs) வட்டார வளர்ச்சி அலுவலர், காரியாப்பட்டி, விருதுநகர் மாவட்டம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 104. | There is no provision for charging the cost of postage from the appellant as per the notified rules under the RTI Act | (CIC No. CIC/DS/A/2010/000289 decided on 28.05.2010) |
| 105. | In the instant case, the Complainant was required to deposit an application fee of Rs. 10 only. Where the Complainant deposited an application fee exceeding Rs. 10 for covering the expenses incurred in providing the information, the PIO was not bound to accept the same. | Decision No. CIC/SG/C/ 2010/001124/10057 Complaint No. CIC/SG/C/2010/001124 Dated: 16-11-2010 (Mr. M. Kumar (vs) The PIO, Centralized RTI Cell, P. R. Department, New Delhi) |
| 106. | இனம் 1ல் மனுதாரர் மேற்படி திட்டத்தின் முழு வரைபட நகலை தகவலாக கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் அலுவலக நடைமுறைப்படி வரைப்பட நகலை பெற்றுக் கொள்ள திட்டப்பகுதியைத் தெளிவுபட குறிப்பிட்டு மனு தாக்கல் செய்து வரையறுக்கப்பட்ட கட்டணமான ரூ.500யை பொது அதிகார அமைப்பின் அலுவலகத்தில் நில அளவை பிரிவில் கட்டினால் வரைப்பட நகலை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படும் நடைமுறை உள்ளது எனவும், அந்நடைமுறையின்படி மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் இனம்1ல் கோரும் முழு வரைபட நகலை பெற்றுக் கொள்ளலாம் என்றும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். பொது அதிகார அமைப்பில் முழு வரைப்பட நகலை பெற்றுக் கொள்ள வழிவகை வரையறுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் தகவலாக வழங்க கோருவது ஏற்புடையது அல்ல. எனவே, இனம் 1யை பொறுத்த வரையில் பொது அதிகார அமைப்பின் அலுவலக நடைமுறையின்படி மனு தாக்கல் செய்து உரிய கட்டணம் செலுத்தி வரைப்பட நகலை பெற்றுக் கொள்ள மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் அறிவுறுத்தப்படுகிறார். | வழக்கு எண்.25543/ E/2014 நாள் 12.11.2015 (திரு. J. செல்வம், பொதுத் தகவல் அலுவலர்/ எஸ்டேட் அலுவலர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் சென்னை) |
| | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நகல்களைப் பெறுவது என்றால் ஒரு பக்கத்திற்கு ரூ.2/- செலுத்த வேண்டும் என்று விதி அமைந்துள்ளது. RSO 173 விதியின்படி மனுதாரர் கேட்கின்ற நகல்களை உரிய முறையில் சான்றொப்பமிட்டுத் தர வேண்டு மென்றால் பக்கத்திற்கு ரூ.5/- செலுத்த வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் ஏற்கிறது. | வழக்கு எண் 29459 நாள் 22.04.2010 (திரு ஆ. செய்யது முகம்மது (vs) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மாவட்டம்) |
| | மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் இனம் 2க்கு வில்லங்கச் சான்று உள்ளிட்ட அனைத்து சான்றுகளும் வழங்க குறிப்பிட்ட கட்டணம் செலுத்துமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் சான்றிட்ட நகல்கள் உரிய கட்டணம் ரூ.2/- பெற்றுக்கொண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 7(1)ன்படி வழங்கப்பட வேண்டுமென்று | வழக்கு எண் 4443 நாள் 30.07.2010 (Thiru C Baranivel Vellore District (vs) The Public Information Officer Office of the Sub Registrar Kaniyambadi Vellore District 632 102) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | தெரிவித்தார். மனுதாரருக்கு பிரிவு 7(3)ல் சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்கு சம்பந்தப்பட்டத்துறையில் குறிப்பிட்டத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போது அத்தொகை செலுத்தப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. | |
| 107. | திரு. O. முத்து என்பவர் தாக்கல் செய்த நீதிப் பேராணை மனு W.P. MD Nos.7009, 7013 of 2014 என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் தமது 03.06.2014 தேதியிட்ட ஆணைகளில் வில்லங்கச் சான்று பதிவுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றிதான் பெற வேண்டும் என தமிழ்நாடு தகவல் ஆணையம் பிறப்பித்த ஆணையை உறுதி செய்துள்ளது. எனவே பதிவுத்துறை ஆவணங் களை பெற பதிவுச் சட்டம் அல்லது சங்கச் சட்டத்தில் (Registration Act or Society Act) குறித்துரைக் கப்பட்டுள்ள விண்ணப்ப வழிமுறையை பின்பற்றி உரிய கட்டணத்தை செலுத்தி அதன்படி அவைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். | வழக்கு எண் SA 15661/மா.த.த.ஆ. /2015நாள் 03.02.2016 (திரு. P. கல்யாணசுந்தரம் (vs) பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மத்திய சென்னை, சென்னை 600 014 |
| | மனுதாரர் வராத நிலையில், அவர் கோரிய 1905 மற்றும் 1985ஆம் ஆண்டிற்கு (பதிவுச் சட்டத்தின் கீழ் ஒரு ஆண்டிற்குத் தேடுதல் கட்டணமாக ரூ.16/- வீதம்) தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்த தகவலை இவ்வாணையம் ஏற்கிறது. பதிவுச் சட்டத்தின் கீழ் தொகை நிர்ணயம் செய்யப் பட்டிருக்கும்போது, அதற்குரிய தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, அவைகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற இயலாது என மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 23475 நாள் 18.1.2010 (திரு ஏ. மணிவாசகன் (vs) மாவட்டப் பதிவாளர் அலுவலகம். பத்திரப் பதிவுத் துறை, தருமபுரி) |
| 108. | மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P. No.28202 of 2012 and M.P. No.1 of 2012 என்ற வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரை நகல்களோ மற்ற தகவல்கள் ஏதேனும் பெறுவதற்கு அந்தந்த துறைகளில் சட்டப்படியான சிறப்பு விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், அந்த நடைமுறையைப் பின்பற்றாமல், தகவல்களைப் பெறுவதற்கு வழிவகையில்லை என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த தீர்ப்பினை இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். மேல்முறையீட்டாளர், உரிய நீதிமன்றத்தில், நகல் விண்ணப்பம் தாக்கல் செய்து, உரிய கட்டணத்தைச் செலுத்தித், தேவைப்படும் தீர்ப்பின் நகல்களைப் பெற்றுக் கொள்வதுதான் சட்டத்திற்கும், நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என இந்த ஆணையம் கருதுகிறது. மனுதாரருக்கு, இந்த ஆணையம் வழங்கக்கூடிய பரிகாரம் வேறு ஏதுமில்லை. | (வழக்கு எண் 6650/F/2014 நாள் 16.03.2015) (திரு. ஆர். கணேசன் (vs) மாவட்டக் காவல் அலுவலகம், சேலம் மாவட்டம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | It is informed that the order of the Commission is clear. The petitioner has to go only through the copy application procedure as laid down by the High Court Procedure Rules and not through the RTI rules. The Public Authority has given a clear reply also in this regard. It is up to him to apply as per procedure. The appeal is closed. | Order No. 41200 & 41614(26849/14)/ SCIC/2014 Dated 31/12/2014 |
| | It is suggested by the Public Information Officer's representatives that since the petitioner wants a copy of SLP he should file a petition under relevant rules for obtaining copies of the documents from the Supreme Court following the prescribed procedure. It is further stated that under the relevant rules of the Supreme Court copies of such documents cannot be obtained under RTI Act and instead an application should be filed following the prescribed procedure and paying fees as laid down. | **Case No.SA-9260/SCIC/2015 Date of Enquiry – 27.11.2015** Thiru.T.N.Vidyanandan vs The Public Information Officer/ High Court of Madras, Chennai-600 104. |
| 109. | The Appellant has paid Rs.600/- as additional fee but has not received the information within 30 days as specified in the RTI Act. The PIO has sent a letter on the 30th day asking for additional fee. After the payment of the additional fee the PIO was not able to provide the information in zero days. In view of this the PIO is directed to refund the amount taken from the Appellant as additional fee. | No. CIC/SG/A/2011/002134/15619 Appeal No. CIC/SG/A/2011/002134 Dated 11-11-2011 |
| | **சட்டப் பிரிவு 7(6):-** | |
| 110. | தகவல் பெறும் உரிமைச் சட்டம், 20005-ன் சட்டப் பரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல்கள் வழங்காததால், மனுதாரர் செலுத்திய கட்டணத்தை ரூ.150/- (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) மனுதாரருக்குத் திருப்பி அளிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. | வழக்கு எண் 5455 நாள் 27.08.2009 (P Palaniappan (vs) Dist Collector's Office Namakkal) |
| | மனுதாரர், ஆவணங்களின் நகல்களுக்காக கட்டணத்தை தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி செலுத்தியிருந்தும், உரிய காலத்திற்குள் மனதாரருக்கு வழங்காததால், சட்டப் பிரிவு 7(6)ன் கீழ் அனைத்து ஆவணங்களின் நகல்களும், கட்டணம் வசூலிக்காமல், தரப்பட வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது. மேலும், ஆவணங்களின் நகலுக்காக மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகையை திரும்ப அளிக்க வேண்டுமென்றும், இச் செலவினத்தை பொதுத் தகவல் அலுவலர் தன்னுடைய சொந்தப் பொறுப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவிடுகிறது. | வழக்கு எண் 221 நாள் 11.08.2009 (திரு ஏ.பழனியப்பன் (vs) வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் (கிராம ஊராட்சி), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பரமத்தி, நாமக்கல் மாவட்டம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **சட்டப் பிரிவு 7(8):-** | |
| 111. | மனுதாரர்/மேல் முறையீட்டாளர் இனம் 5(இ)ல் இந்த விண்ணப்பத்திற்கு அடுத்து யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று மனுதாரர் கோரியுள்ள தகவலுக்கு தேவை எழவில்லை என பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர்/ மேல்முறையீட்டாளரின் கேள்வி புரிந்து முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என்பதையும் விலாசத்தையும் மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்கு தகவலாக வழங்க பொதுத் தகவல் அலுவலர் தவறியுள்ளதை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. | வழக்கு எண்.*35235/E/2014* நாள் *09.04.2015* திரு. எஸ். இராமச்சந்திரன் பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகம், விருதுநகர் *626 002.* |
| | A show cause notice be issued to CPIO why penalty should not be imposed on him U/s 20 of the RTI Act for not providing particulars of the appellate authority to appellant as per the mandatory provision of section 7 (8) of the RTI Act. | F.No.CIC/SS/A/2012/000982-YA Dated 26.06.2014 |
| | **சட்டப் பிரிவு 7(9):-** | |
| 112. | மாண்பமை உச்சநீதிமன்றமும் பொது அதிகார அமைப்பின் *75* சதவிகிதப் பணியாளர்கள் தங்களின் பணி நேரத்தில் *75* சதவிகிதத்தைத் தங்களின் அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு செலவழிக்காமல், தகவல்களை சேகரிப்பதற்கும், அத்தகவல்களைக் கொடுப்பதற்குமே செலவழிக்கும் நிலையை உருவாக்கக்கூடாது என Central Board of Secondary Education and Anr -Vs- Aditya Bandopadhyay and Ors (Civil Appeal No.6454 of 2011 dt.09-08-2011) என்ற வழக்கில் தெரிவித்துள்ளது. | வழக்கு எண் *56776* நாள் *18.06.2013* (திரு.எஸ்.எம். கோவிந்தசாமி (vs) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி) |
| 113. | இம்மேல்முறையீட்டு மனுவை பரிசீலிக்கையில் மனுதாரர் பொது அதிகார அமைப்பிடம் *10* இனங்களில் தகவல்கள் என்ற போர்வையில் அரசியல் கட்சி நிகழ்ச்சிகளுக்கு வைக்கப்படும் பிளக்ஸ் போர்டுகள் எத்தனை நாட்கள் வைக்க அனுமதி தரப்படும் என்றும் நடைமுறையை பயன்படுத்தாதவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாரிடம் புகார் செய்ய வேண்டும் எனத் தொடங்கி கடந்த *10* ஆண்டுகளில் பதியப் பட்டிருக்கக்கூடிய வழக்குகளின் பல விவரங்கள் போக்குவரத்து விதிமீறல் போன்ற பல இனங்களில் பல தகவல்கள் கேட்டுள்ளார். இவரது மனுவை நோக்குங்கால் மனுதாரர் கேட்டிருப்பது பரவலாக, பொத்தம் பொதுவாக வெகு அதிக எண்ணிக்கையில் தகவல்கள் கோரியிருப்பது தெரியவருகிறது. ஒரு பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்புவதாகவும் அன்றாட | வழக்கு எண் *49394* நாள் *27.01.2014* (திரு ஜே.கிருஷ்ணகுமார், *124* நேரு காலனி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடிய வகையில் தகவல்கள் கோரியுள்ளதாக தெரிகிறது. மாண்பமை உச்ச நீதிமன்றம் Central Board of Secondary Education and the Anr. Vs. Aditya Bandopadhyay and Ors. (Civil appeal No.6454 of 2011 dated 9.8.2011) என்ற வழக்கின் தீர்ப்பு இம்மேல்முறையீட்டிற்குப் பொருந்தும். மேலும் இம்மனுவை பரிசீலிக்கையில் மனுதாரர் கேள்விகள் எழுப்பியுள்ளதும், தெளிவுரை வேண்டியுள்ளதும், கருத்து, காரணங்கள் கேட்டுள்ளதும் தெரியவருகிறது. இவைபோன்ற கேள்விகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இடமில்லை என கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | |
| | வேறு எந்த வேலைகளையும் செய்ய இயலாத நிலை உள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஏற்று ஆணையம் இம்மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்கிறது | வழக்கு எண் 994 நாள் 26.04.2011 (Thiru P Vijayakumar (vs) The PIO Office Of The Thasildar Tharapuram Taluk Tirupur District) |
| | ஒரு பொது அதிகார அமைப்பின் பணியைப் பெரிதும் பாதிக்குமெனில் ஒரு மனுவினை 7(9)ன்கீழ் தள்ளுபடி செய்வதற்கு இச்சட்டம் வகை செய்கிறது | வழக்கு எண் 820 நாள் 26.04.2011 (Thiru S Kasinathan (vs) Panchayat Union Kallal Sivagangai District) |
| | தேவையற்ற முறையில் அளவுக்கு அதிகமான தகவல் களைக் கேட்பது விதி 7(9)ன் கீழ் தள்ளுபடி செய்யத்தக்கது என்று மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 5737 நாள் 23.07.2010 (Thiru Jeyamurthy (vs) The PIO Sarva Siksha Abiyan Villupuam District) |
| | மனுதாரர் கோரும் தகவலானது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 7(9)ன் கீழ் அவர் பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்பும் விதத்தில் அமைந்துள்ளதாக இருந்த போதிலும், சுமார் 140 பதிவேடுகளிலிருந்து எடுக்க 15 நாட்களுக்கு மேல் முழுமையாக செலவிடப்பட்டதாகத் தெரிவித்த பொதுத் தகவல் அலுவலரின் செயலானது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை அவர் முழுமையாக தெரிந்து கொள்ளவில்லையென்பதை உணர்த்துகின்றது. | வழக்கு எண் 12686 நாள் 14.05.2013 (திரு. ஏ. முத்துசாமி (vs) பொ.த.அ. கைத்தறி மற்றும் துணிநூல் துறை, திருப்பூர்.) |
| | மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 08.01.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில், "தக்கினி முஸ்லீம் சாதியை சேராதவர்களுக்கு தகுந்த ஆவணங்கள் இல்லாமல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தக்கனி முஸ்லீம் என்று தங்கள் அலுவலகம் மூலம் சாதிச் சான்றிதழ் தரப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது" என யூகத்தின் அடிப்படையில் தெரிவித்து 01.01.2011 முதல் 30.12.2012 வரை பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகம் மூலம் தகுந்த ஆவணங்களின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட தக்கனி முஸ்லீம் சாதிச் சான்றிதழ் தரப்பட்டதா? இல்லையா? என தகவல் கோரியுள்ளார். மனுதாரர் கோரும் விவரங்கள் தக்கினி முஸ்லீம் சான்றிதழ் | வழக்கு எண். 10919/சி /2013 ஆணை நாள்: 09.06.2015. |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | வழங்கப்படுவது குறித்து மட்டும் என தனியாக ஆவணங்கள் பராமரிக்கப்படுவதில்லை என்றும், சாதிச் சான்றிதழ் தொடர்பான ஆவணங்கள் தங்கள் அலுவலகத்தில், எல்லா சாதிச் சான்றிதழ்களுக்கும் இணைத்து ஒரே ஆவணமாக பராமரிக்கப்படுகிறது என்றும், அதன் காரணமாக மனுதாரர் கோரும் வகையில் பிரித்து வழங்குவது எளிதான செயல் அல்ல என்றும், கால விரயம் ஏற்படுத்தும் என்றும், பொது அதிகார அமைப்பின் அன்றாட வேலை பணிகளை பாதிக்கும் வகையில் இருப்பதாகவும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். மனுதாரர் யூகத்தின் அடிப்படையில் கோரியுள்ள தகவல் மேற்கூறிய சூழ்நிலையில் வழங்கத் தக்கது அல்ல என ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு முற்றாக்கப்படுகிறது | |
| | கடந்த 10 ஆண்டுகளாக IPC Section 392 லிருந்து 402 வரை மற்றும் Section 109,110 ஆகிய வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் மற்றும் அவர்களது பெயர், முகவரி, வயது ஆகியவற்றைப் பற்றியும் மற்றும் பல தகவல்களையும், பொள்ளாச்சி நகரிலுள்ள அனைத்து காவல் நிலையங்களில் கடந்த 5 ஆண்டுகளாக IPC Section 302, 307, 506 (I) மற்றும் 506(II) ஆகிய வழக்குகளில் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் என்பது போன்று பல இனங்களில் பல தகவல்கள் கேட்டுள்ளார். இவரது மனுவை நோக்குங்கால் மனுதாரர் கேட்டிருப்பது ஒரு துறையில் அதிக எண்ணிக்கையில் தகவல்கள் கோரியிருப்பது தெரியவருகிறது.<br>ஒரு பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாமல் திசை திருப்புவதாகவும் அன்றாட அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடிய வகையில் தகவல்கள் கோரியுள்ளதாக தெரிகிறது. மேலும் இம்மனுவை பரிசீலிக்கையில் மனுதாரர் கேள்விகள் எழுப்பியுள்ளதும், தெளிவுரை வேண்டியுள்ளதும், கருத்து, காரணங்கள் கேட்டுள்ளதும் தெரியவருகிறது. இவைபோன்ற கேள்விகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இடமில்லை எனக் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | வழக்கு எண் 49393/மாததஆ/13 நாள் 27.01.2014<br>(திரு ஜே.கிருஷ்ணகுமார், 124 நேரு காலனி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி) |
| | மனுதாரர் தனது 12.3.2009 நாளிட்ட மனுவில், 108 இனங்களுக்கு பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல் கோரியுள்ளார். மனுதாரர் கோரியுள்ளவை பெரும்பாலும் கேள்விகளாக அமைந்துள்ளன. இச்சட்டத்தின்படி கேள்விகள் கேட்க இயலாது. தகவல்கள் மட்டுமே கோர இயலும். மேலும் கோரப்படும் தகவல்கள் பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை திசை திருப்புவதாகவும், அல்லது பிரச்சினையிலுள்ள பதிவுருவினை பாதுகாப்பதற்கு அல்லது பேணிக் காப்பதற்கு குந்தகம் விளைவிப்பதாகவும் இருக்கக் கூடாது. மனுதாரர் கோரியுள்ளவை பொதுஅதிகார | வழக்கு எண் 27467 நாள் 8.3.2010<br>(R.Kannan(vs)The Public Information Officer Transport Department Secretariat Chennai 600 009<br><br>The Public Information officer Tamil Nadu State Transport Madurai Corporation Ltd Main Road Madurai 625 010) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | அமைப்பின் வள ஆதாரங்களை பாதிப்பதாக இவ்வாணையம் கருதுகிறது. இந்நிலையில், மனுதாரரின் 28.10.2009 நாளிட்ட மேல்முறையீட்டு மனு, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் சட்டப் பிரிவு 7(9)ன் கீழ் நிராகரிக்கப்படுகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி பண்புடன் கோரப்படும் சரியான மனுக்கள் மட்டுமே ஆய்வு செய்யத்தக்கவை. குற்றச்சாட்டு குறிப்புகளும், முன்மொழிவுகளும் பண்பான, அன்பான மொழிகளில் வழங்கப்படாத முறையீடுகளும் நிராகரிக்கத்தவை. மேலும் இச்சட்டத்தின் கீழ் குறுக்கு கேள்விகள் கேட்க முடியாது என மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | |
| 114. | இவ்வழக்கில், மனுதாரர் தனது மனுவில் மிகவும் தரக்குறைவான வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளார். தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 மக்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டதேயன்றி இந்த மனுதாரரைப் போல், அரசு அலுவலர்களையும், மற்றவர்களையும் தொல்லைப்படுத்தும் நோக்கிலும், துன்புறுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதல்ல. இப்படிப்பட்ட தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தி மனுதாக்கல் செய்துள்ள மனுதாரரின் அணுகுமுறையை இவ்வாணையம் கண்டிக்கிறது. இவை போன்ற மனுக்கள் இனி வருங்காலங்களில் இவ்வாணையத்திற்கு வருமானால், அவை ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. | வழக்கு எண் *525* நாள் *22.05.2013* |
| | மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் வேண்டி மனுச் செய்யாமல் மனதில் தோன்றியவற்றை எல்லாம் பண்பாடற்ற முறையில் எழுதி மனுச் செய்துள்ளார். விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். அதை ஆணையம் ஏற்று மனுதாரரின் மனுவை விதி 7(9)ன் கீழ்த் தள்ளுபடி செய்கிறது. எதிர்காலத்தில் இது போன்ற பண்பற்ற முறையில் மனுச் செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறார் | வழக்கு எண் *30192* நாள் *21.1.2011* (G Tamilselvan (vs) Office of the Joint Commissioner of HR & CE Srirangam Trichirapalli) |
| 115. | மனுதாரர் கேட்ட ஆவணங்கள் அலுவலகத்திலிருந்தும் பெரும்பகுதி சிதைவடைந்துள்ள நிலையில் இருப்பதாலும் மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் சிதைவடைந்த பகுதியில் இருப்பதாலும் தகவல் அளிக்கப்படவில்லையென்று இவ்வாணையம் முடிவு செய்கிறது. | வழக்கு எண் *4209* நாள் *08.07.2010* (Thiru T Daisy Margret (vs) The PIO, TNSTC, Madurai Ltd Rani Garden Nagercoil) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **சட்டப் பிரிவு** 8(1)(**a**): - | |
| 116. | The Applellant filed an application dated 24.01.2013 under the RTI Act, seeking copies of file notings and correspondence between India and the U.S. government for a certain extradition. CPIO denied the information under section 8(1)(a) and (h) of the Act vide letter dated 07.02.2013. Respondent stated that disclosure of information as sought by the applellant would prejudice the relations with a foreign state, therefore, the information sought by the appellant was denied under section 8(1)(a) of the RTI Act. Respondent further stated that the documents received from the US government were marked as confidential. | CIC Decision No. CIC/SM/A/2013/000891/VS/06107<br>Appeal No.CIC/SM/A/2013/000891/(VS) dated 18.02.2014 |
| | **சட்டப் பிரிவு** 8(1)(**b**): - | |
| 117. | பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கேட்டுள்ள தகவல் குறிப்பிட்ட நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் ஆகவே, தகவல் மறுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரர் கேட்டுள்ள தகவல் பிரிவு *8(1)* (b)-ன் கீழ் நீதிமன்றத்தில் தடை செய்யப்பட்ட தகவலாக இல்லாதபட்சத்தில் மனுதாரருக்கு தகவல் வழங்கிட வேண்டுமென்று இவ்வாணையம் முடிவு செய்கிறது | வழக்கு எண் *31158* நாள் *07.03..2011* (திரு.பி.இசக்கிமுத்து (vs) பொதுத் தகவல் அலுவலர், செயற் பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மின்சார வாரியம், நகர்புற பகிர்மான வட்டம், தூத்துக்குடி பகிர்மான வட்டம் எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி-*628002*) |
| 118. | நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக இவ்வாணையம் எந்த ஆணையையும் பிறப்பிக்க இயலாத நிலையிலுள்ள தென்று மனுதாரருக்குத் தெளிவாக்கப்பட்டது. | வழக்கு எண் *38023*/விசாரணை */A/2014* நாள் *24.04.2015* (திரு.கோ.பரமன் (vs) பொதுத்தகவல் அலுவலர் வட்டாட்சியர் அலுவலகம், செஞ்சி வட்டம்) |
| | **சட்டப் பிரிவு** 8(1)**(d): -** | |
| 119. | The appellant has also sought copies of the valuation report obtained by the bank from its valuer at the time of sanctioning of the credit facility. As per Commission's decision No. CIC/SM/A/2009/002063AT dated 23.9.2010, such information is exempted from disclosure under Section 8 (1) (d) of the RTI Act. | File No. CIC/SH/A/ 2014/000812 & CIC/SH/A 2014/000984 dated 27th April 2015 (Shri Suraj Prakash Kapoor (vs) The CPIO, Punjab & Sind Bank H:O: RTI Cell, Bank House, 4th Floor, 21, Rajendra Place, New Delhi-110008) |
| | **சட்டப் பிரிவு** 8(1)**(e): -** | |
| 120. | the exemption of Section 8(1)(e) was available only to the advice received by a client from an Advocate or the Counsel and not the opinion of one of its officers even if such an opinion is a legal advice. | F.No.CIC/SM/A/2009/001904AT Dated, the 18th November, 2010. (Shri Amarjit Singh (vs) State Bank of India) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| **சட்டப் பிரிவு 8(1)(g): -** | | |
| 121. | அரசு ஊழியரின் நிரந்தர முகவரியை மனுதாரர் கோரியிருப்பது தனிநபரின் பாதுகாப்பு கருதி, வழங்கத்தக்க தகவல் அல்ல என ஆணையம் முடிவு செய்கிறது. | வழக்கு எண்.*58731/C/2013* dated *18.06.2015*<br>திரு. க. இராமசாமி, (vs) நிலமெடுப்பு, தேசிய நெடுஞ்சாலை, திருச்சி |
| | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அரசு கோப்புகளில் உள்ள தகவல்களைக் கேட்டுப் பெறலாம். குறிப்பிட்ட ஆசிரியையின் குடும்பம், குழந்தைகள், இல்ல முகவரி போன்ற தகவல்கள் மூன்றாம் நபர் குறித்த தகவல்கள் ஆகும். அவை பற்றிய தகவல்கள் அரசு கோப்புகளில் இராது. தனிப்பட்டவரின் முகவரியைப் பாதுகாப்பினை கருதி தர வேண்டிய அவசியம் இல்லையென்று ஆணையம் கருதுகிறது. மனுதாரருக்குக் குறிப்பிட்ட ஆசிரியை மீது உள்ள குடும்ப பிரச்சினையின் காரணமாகத் தேவையற்ற மனுக்களை அனுப்பி அரசின் நேரம், ஆணையத்தின் நேரம் இவற்றை இனி வருங்காலங்களில் வீணடிக்க வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் *6067* நாள் *27.07.2010* (Thiru V S Vasan Salem 636 015 (vs) The Public Information Officer Office of the Inspector of Matriculation Schools Egmore Chennai 600 008) |
| **சட்டப் பிரிவு 8(1)(h): -** | | |
| 122. | இந்நேர்வில், மனுதாரர் இனம் *3, 4* மற்றும் *5* ஆகியவற்றில் கோருவது, நடத்தப்பட்ட பிரேத விசாரணை அறிக்கை பற்றிய விபரம். இந்நேர்வில், அரசு உத்தரவின் கீழ் கோட்டாட்சியர் அவர்கள் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு *174* Cr.P.C ன்படி பிரேத விசாரணை நடத்தி அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது. அரசு பிரேத விசாரணை அறிக்கையை ஆழ்ந்து இறுதி செய்யும் வரை விசாரணை முடிந்துவிட்டதாக கருத முடியாது. பிரேத விசாரணை என்பது ஒரு நபர் இறந்துபோகும் தருவாயில் அதில் நடத்தப்படும் முதல் விசாரணையாகும். எனவே, அரசு இறுதி செய்யும் வரையில் புலன் விசாரணை முடிவுற்றதாக கருதவியலாது.<br>*5.* மனுதாரர் இதுகுறித்து தமது முதல் மேல்முறையீட்டை *08.10.14* அன்று முதல் மேல்முறையீட்டு அலுவலர் என்று வருவாய் கோட்டாட்சியருக்கு செய்ய, அதற்குப் பின்பாக முதல் மேல்முறையீட்டு அதிகாரி *27.10.14* அன்று மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 8(a) முதல் (j) வரையில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்குள், விபரங்களை தெரிவிப்பது சாட்சி அளிப்பவர்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதாகவும்தெரிவித்துள்ளார். மேலே பத்தி 4ல் தெரிவித்துள்ளபடி, இந்நேர்வில் மனுதாரர் ஒரு புலன் | வழக்கு எண் S.A.*1257/* விசாரணை */A/2015*<br>(Smt/Selvi. S. Palaniammal vs The Public Information Officer, O/o the Revenue Divisional Officer, Thambaram, Kanchipuram District) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | விசாரணை முடிவடையாத நிலையிலுள்ள பிரேத விசாரணை அறிக்கையை கோருவதால், அது 8(1)(h)ன் கீழ் விலக்களிக்கப்பட்ட தகவலாக ஆணையம் கருதுவதால், அதுகுறித்த தகவலை மனுதாரருக்கு இந்நேர்வில், தற்போதைய சூழ்நிலையில் வழங்க வியலாதென்பதை தெரிவித்து இந்த வழக்கின் விசாரணை இத்துடன் முடித்துவைக்கப்படுகிறது. | |
| 123. | பொது நிர்வாக அமைப்பிலிருந்து மனுதாரருக்கு சில தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் வழக்கு புலன் விசாரணையில் இருப்பதால் மற்ற தகவல்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8(1)(h)ன்படி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. புலன் விசாரணை இதுவரை முடியவில்லை என்ற சூழ்நிலையில் பொது நிர்வாக அமைப்பால் கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியே என ஆணையம் கருதுகிறது. | *வழக்கு எண் 16514 நாள் 13.06.2012 (திரு. இரா. வைத்தீஸ்வரன் (vs) கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், விழுப்புரம்)* |
| | **சட்டப் பிரிவு** 8(1) (**j**): - | |
| 124. | மனுதாரர் 5வது இனத்தில் வனத்துறை ஊழியர்கள் பாலையா மற்றும் சேகர் ஆகியோரின் பணிப்பதிவேடு நகல்களைக் கோரியுள்ளார். இது மூன்றாவது நபர்களின் பணி பற்றிய தனிப்பட்ட தகவல்களாகும். மாண்பமை உச்சநீதிமன்றம், GIRISH RAMACHANDRA DESHPANDE -Vs- CENTRAL INFORMATION COMMISSIONER - Ors{S.L.P. (Civil) No.27734 of 2012} என்ற வழக்கில் அளித்த தீர்ப்பில் இவை போன்ற பணியாளர்கள் பற்றிய தகவல்கள், சட்டப் பிரிவு 8(1)(j) ன்படி தனிப்பட்ட தகவல்கள் என்றும், அத்தகவல்களைப் பொது நலன் இல்லாத பட்சத்தில் பொது அதிகார அமைப்பு கொடுக்கத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளது. இவ்வழக்கில் உள்ள பொது நலன் குறித்து மனுதாரரால் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, இந்த இனத்திற்கு பொது அதிகார அமைப்பு தகவல்கள் கொடுக்கத் தேவையில்லை என்று ஆணையம் கருதுகிறது. | *(வழக்கு எண் 14655/மா.த.த.ஆ./2014 நாள் 28.08.2014) (திரு.ஜெ.அப்துர் ரஹ்மான் vs பொதுத் தகவல் அலுவலர் துணை இயக்குநர்/வன உயிரின காப்பாளர் களக்காடு சரணாலயம், களக்காடு திருநெல்வேலி மாவட்டம்.)* |
| 125. | மேல்முறையீட்டாளர் கேட்டிருப்பது, அரசு ஊழியர் ஒருவருடைய பணிப்பதிவேட்டின் நகல்களை. அவர் கேட்டிருக்கின்ற தகவல்களைக் கூர்ந்து நோக்கும்போது, அந்தத் தகவலுக்கும் அவருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அவையனைத்தும் மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட தகவல்கள் என்பது தெரிய வருகிறது. இருப்பினும், அந்த மூன்றாம் நபர் பொறுத்த தனிப்பட்ட தகவல்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தகவல்களையெல்லாம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 8(1)(j)யின் பின்னணியில் பார்க்கும்போது வழங்கக்கூடாது என்பது சட்ட நிலை. | *வழக்கு எண் (53074/F/12) 22655/ விசாரணை/F/2013 நாள் 28.01.2014 (திரு. சி. கனகராஜ் (vs) சம்பளக் கணக்கு அலுவலகம், சென்னை 8)* |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 126. | அப்போது பொறுப்பில் இருந்த பொதுத்தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005–ன் தாத்பர்யங்களைப் புரிந்து கொள்ளாமல், பணிப் பதிவேட்டின் நகல்களை வழங்கியிருப்பது வருந்தத் தக்கதாகும். | |
| | மனுதாரரின் மனுவை நோக்கும் போது மனுதாரர்/மேல் முறையீட்டாளர் கோரியுள்ள தகவல் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்ற தனது தாயார் திருமதி. பி. புவனசுந்தரி அவர்களின் பணிப்பதிவேட்டின் நகலை கோரி தாக்கல் செய்த மனுவின் அடிப்படையிலாகும்.<br>இவ்வழக்கில் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரும் தகவலானது 3ம் நபரான திருமதி. பி. புவனசுந்தரி அவர்களின் பணிப்பதிவேட்டின் நகலை கோரும் மனுவாக அமைகிறது. திருமதி. பி. புவனசுந்தரி என்பவரது பணிப்பதிவேடு குறித்த தகவலானது 3ம் நபர் குறித்த தனிப்பட்ட விவரங்களாகும். மேற்கூறிய சூழ்நிலையில் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரும் தகவலானது 3ம் நபர் குறித்த தனிப்பட்ட விவரங்கள் என்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8(i)(J) ன் கீழ் வழங்க கூடிய தகவல் அல்ல எனவும் ஆணையம் முடிவு செய்கிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது | வழக்கு எண் SA 3239/E/2015 (7562) DATED 05/06/2015<br>(திரு. J. ஜேம்ஸ் (vs) சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், எஸ் *33*, ஜோன்ஸ் சாலை, சென்னை *600 015)* |
| 127. | மனுதாரர்/மேல்முறையீட்டாளர் *25.12.2014* அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் *2005*, பிரிவு *6(1)*ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் Dr. E.ராஜகுமார், M.B.B.S., உதவி மருத்துவர், நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் GPHC ல் எந்த தேதியிலிருந்து எந்த தேதிவரை பணியாற்றினார், அதற்கு முன்பு எங்கு பணியாற்றினார், தற்போது எங்கு பணியாற்றுகிறார், அவரது பணிப் பதிவேடு எந்த தேதியில் சேலம் மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து நாமக்கல் மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தது, தபால் ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்ட பக்கத்தின் நகல், பணிப் பதிவேடு நாமக்கல் மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து சேலம் மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்திற்கு எப்போது அனுப்பி வைக்கப்பட்டது, தபால் ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்ட பக்கத்தின் நகல், *06.11.2014* தேதியிட்ட கடிதத்தின் நகல், அவர் *15.12.2014* தேதியில் எழுதிக் கொடுத்த மனுவின் நகல், பணிப் பதிவேட்டில் தேவையான பதிவுகளைப் பதிவு செய்து முடித்து முறையாக எத்தனை நாட்களுக்குள் திருப்பி அனுப்பியிருக்க வேண்டும், திருப்பி அனுப்பி வைக்கப்படாமல் இழுத்தடிப்பு செய்வதற்குக் காரணம் என்ன, பணிப் பதிவேட்டில் தேவையான பதிவுகளை | வழக்கு எண் SA *9075*/விசாரணை/ *E/2015* நாள் *05.02.2016* (E.சரவணன் பொதுத் தகவல் அலுவலர், துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகம், நாமக்கல், நாமக்கல் மாவட்டம். |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | பதிவு செய்து குறித்த நேரத்தில் அனுப்புவதற்கு எந்த அதிகாரி பொறுப்பு, குறித்த நேரத்தில் அனுப்பப்படவில்லை எனில் எந்த அதிகாரி மீது எந்த மாதிரியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், குறித்த நேரத்தில் அனுப்பப்படவில்லை எனில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் மேல் அதிகாரியின் பதவியின் பெயர் மற்றும் முகவரி தேவை என 15 இனங்களில் தகவல் கோரி விண்ணப்பித்துள்ளார். விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் அனைத்தும் ஒரு அரசு ஊழியர்/மூன்றாம் நபர் தொடர்புடைய தகவல்களாக அமைந்துள்ளது எனவும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 8(1)(j) ன்கீழ் வழங்கத் தக்க தகவல் அல்ல எனவும் ஆணையம் முடிவு செய்கிறது | |
| 128. | மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள மனுவில் அரசுப் பணியில் இருக்கும் மருத்துவர் ஆர்.சித்ராதேவி என்பவரது சாதிச் சான்றிதழ் மற்றும் பள்ளிச்சான்றிதழ்ஆகியவற்றைக் குறிப்பிட்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார். இன்றைய விசாரணையில் ஆஜரான பொது அதிகார அமைப்பினர் மனுதாரர்/ மேல்முறையீட்டாளரின் மனு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, உரிய கட்டணம் செலுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுவாக அமையாத காரணத்தால் மனுதாரர்/ மேல்முறையீட்டாளரின் மனுவைப் பொது மனுவாகக் கருதி நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதென்றும், இது குறித்த தகவலை 09.04.2014 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்கீழ் வரைவோலை, நீதிமன்ற வில்லை மற்றும் கருவூல செலுத்து இரசீது இவற்றில் ஏதேனும் ஒன்று மட்டுமே அனுப்ப வேண்டுமென்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்கீழ் மற்றவர் குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரும் புகார் மனு மீது மனுதாரருக்குப் பதில் ஏதும் அளிக்க வழி வகையில்லையென்றும், இருப்பினும் மனுதாரரின் மனுவின் மீது தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மனுவின் நகல் மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்குப் பதில்/ தகவல் வழங்கியதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தனர்.<br>5. மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் மனுவானது அடிப்படையில் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன்கீழ் தாக்கல் செய்த மனுவாக அமையவில்லையென்பது தெளிவாகிறது. இந்நிலையில் மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு ஏற்கத்தக்கதல்ல. | வழக்கு எண். 35619/E/2014 நாள் 09.07.2015 திரு எஸ்.நாராயணன் (vs) பொதுத் தகவல் அலுவலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009. |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | மேலும் மனுதாரர் கோரும் தகவலானது மூன்றாம் நபர் குறித்த தகவலாகவும், தகவல் பெறும் உரிமைச் சட்டம் *2005*, பிரிவு *8(1)*(j)ன்படி வழங்கக்கூடிய தகவலாகவும் அமையவில்லையென ஆணையம் முடிவு செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | |
| | மனுதாரர் தன்னுடைய மனுவில் தகவல்கள் கேட்கும்பொழுது, ஜாதி விவரங்கள் கேட்டுள்ளார். இது கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால், பொதுப்பிரிவு என்றோ, பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் என்றோ, ஆதிதிராவிடர் என்றோ பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்கள் (எஸ்.சி./ எஸ்.டி) என்றோ மட்டும் குறிப்பிட்டுத் தகவல் தந்தால் போதுமானதாகும். | வழக்கு எண் *27728* நாள் 08.03.2010 (Thiru C Baraniramalingam (vs) Office of the Director General of Police Chennai 600 004) |
| 129. | The details of leave taken by the public servant has to be disclosed, however, the purpose for which the leave was taken need not be given because it is exempted under section 8(1)(j) of the RTI Act. | (CIC Appeal No.2947/ICPB/2008 F.No. PBA/2008/00706 dated October 22, 2008) |
| 130. | மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் மனுவை நோக்கும் போது மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரும் தகலானது 3ம் நபர் மீது பெறப்பட்ட புகார்கள் தொடர்பான கோப்புகள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை தகவலாக கோரியுள்ளது தெரிய வருகிறது.<br>மேலும் மேல்முறையீட்டாளர் கோரும் மேற்படி தகவலை நோக்கும் போது, மாண்பமை உச்சநீதிமன்றம் **GIRISH RAMCHANDRA DESHPANDE -Vs- CEN. INFORMATION COMMR & ORS. { SLP (CIVIL) No.27734/2012 Dt. 03.10.2012 }** என்ற வழக்கில்:<br>"The performance of an Employee/Officer in an organization is primarily a matter between the employee and the employer and normally those aspects are governed by the Service Rules which fall under the expression "personal information", the disclosure of which has no relationship to any public activity or public interest. On the other hand, the dislosure of which would cause unwarranted invasion of privacy of that individual …………….. the petitioner cannot claim those details as a matter of right"<br>"The Petitioner in the instant case has not made a *bona fide* public interest in seeking information, the disclosure of such information would cause unwarranted invasion of privacy of the individual under Section 8(1)(j) of the RTI Act." …………… இத்தீர்ப்பு இவ்வழக்கிற்கும் பொருந்துமென ஆணையம் முடிவு செய்கிறது. | (வழக்கு எண்.37610/E/2014 விசாரணை நடைபெற்ற நாள் 09.04.2015) (திரு.இ.சர்வேஸ்வரன் (vs) பொதுத் தகவல் அலுவலர்/அரசு சார்பு செயலர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை *600 009.)* |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | 7. விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் மூன்றாம் நபர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்த தகவலாகவும், அதிக அளவிலான பொது நலன் கருதி மனு தாக்கல் செய்யப்பட்டதாக இல்லாத சூழ்நிலையிலும் இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | |
| | ……..disciplinary action details are a matter between the employer and employee and normally those aspects are governed by the service rules which fall under the expression “personal information”, the disclosure of which has no relationship to public activity or public interest and hence would not fall within the ambit of information in public domain and therefore such information need not be furnished as matter of right. | Case No.9738 dated 19-07-2013 (Thiru C. Jayaseelan (vs) Dirctorate of Sericulture, Salem) |
| | *மனுதாரர்/மேல்முறையீட்டாளரின் 05.08.2014 தேதியிட்ட மனுவில் இனம் 5 மற்றும் 6ல் கோரியுள்ள தகவலான தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டபின் திரு ஆர்.நாராயணன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்ன என்பதையும், அதில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளாரா என்பதையும் தகவலாகக் கோரியுள்ளார்.*<br>*5. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் இனம் 5 மற்றும் 6ல் கோரியுள்ள தகவலானது மாண்பமை உச்சநீதிமன்றம்* GIRISH RAMCHANDRA DESHPANDE -Vs- CEN. INFORMATION COMMR & ORS. { SLP (CIVIL) No.27734/2012 Dt. 03.10.2012 } **என்ற வழக்கில்:**<br>“The performance of an Employee/Officer in an organization is primarily a matter between the employee and the employer and normally those aspects are governed by the Service Rules which fall under the expression "personal information", the disclosure of which has no relationship to any public activity or public interest. On the other hand, the dislosure of which would cause unwarranted invasion of privacy of that individual …………….. the petitioner cannot claim those details as a matter of right"<br>"The Petitioner in the instant case has not made a *bona fide* public interest in seeking information, the disclosure of such information would cause unwarranted invasion of privacy of the individual under Section 8(1)(j) of the RTI Act." …………….<br>*என்று வழங்கியுள்ள தீர்ப்பு இவ்வழக்கிற்கும் பொருந்துமென ஆணையம் முடிவு செய்கிறது.*<br>*6. மேற்கூறிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஆய்வு செய்து, மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரும் தகவலானது அரசு ஊழியரான திரு ஆர்.நாராயணன் என்பவர் மீது எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒழுங்கு நடவடிக்கை குறித்த தகவல் என்பதால் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 8(1)(j) ன் கீழ் வழங்கக்கூடிய தகவல் அல்ல என ஆணையம் முடிவு செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.* | *(வழக்கு எண் SA1392/விசாரணை /F/2015 நாள்: 22.01.2016) (திரு. V.முத்துக்குமார் (vs) பொதுத்தகவல் அலுவலர், செயற் பொறியாளர், இயக்குதலும் பராமரித் தலும், தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், திருச்சி மின் பகிர்மான வட்டம், பெருநகரம்/ திருச்சி.)* |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 131. | A close consideration of the information sought for by the appellant would reveal that those information fit in the description of 'personal information' within the meaning of section 8(1)(j) of the R.T.I. Act. It would be appropriate to refer to the decision of the Hon'ble Supreme Court of India in GIRISH RAMACHANDRA DESHPANDE vs CENTRAL INFORMATION COMMISSION & Ors. (S.L.P (Civil) No.27734 of 2012). In the facts of the said case the details of salary to a particular post along with statutory and other deducations of an individual have been asked for in those circumstances, the Hon'ble Supreme Court took the view that those information qualifed to be 'personal information' as defined under section 8(1)(j). In the facts of the said case repetition, it may be pointed out that the information seeker wanted the details of salaries and other perquisites and having regard to the nature of information sought, the Apex had arrived at the conclusion that those information are protected information within the meaning of section 8(1)(j). In these cases, the test is whether even if the information is a protected information, whether larger public interest justifies the disclosure of such information.<br>In the case at hand, applying the principles enunciated in the said decision of the Supreme Court, it would be clear that the said decision would apply to the facts of this case and there is also no demonstrable 'public interest' justifying the disclosure of the information in this case. Hence, we hold that the reply given by the Public Authority is correct. The appeal therefore fails and the same is dismissed. | Case No 30622/SCIC/2013 dated 13.11.2013<br>(Thiru. V. Gopalakrishnan (vs) High court of Madras) |
| 132. | மனுதாரர் கோரியுள்ள தகவல் குறித்து பார்க்கையில், அவர் தன்னுடைய வருடாந்திர இரகசிய அறிக்கையின் நகலைக் கேட்டுள்ளார். இதற்கு பொது அதிகார அமைப்பு கொடுத்துள்ள பதில் ஏற்கத்தக்கதல்ல என்று இவ்வாணையம் கருதுகிறது. மனுதாரர் தன்னுடைய அறிக்கையின் நகல்களைப் பெறுவதற்கு உரிமை உள்ளது. ஆகவே, இவ்வாணை கிடைத்த ஒரு வாரத்திற்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவலை அவருக்கு அளிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. | வழக்கு எண் 37304/மா.த.த.ஆ/2013 நாள் 19.11.2013<br>(திரு. ஜெ. இரவீந்திரன், இ.கா.ப. (vs) பொதுத் தகவல் அலுவலர் காவல் துறை இயக்குநர் அலுவலகம் மயிலாப்பூர், சென்னை 600 004) |
| 133. | திரு.ஆர்.இராமராஜன், இ.கா.ப. (ஓய்வு பெற்ற காவல்துறை தலைவர்) அவர்களின் வருடாந்திர ரகசிய அறிக்கை (A.C.R.) 1985 முதல் 1995 வரையிலான அறிக்கையின் சான்றொப்பமிட்ட நகல்களைக் கேட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் மனுசெய்துள்ளார்.<br>மனுதாரர் கோரியுள்ள தகவல் குறித்து பார்க்கையில், அவர் ஒரு மூன்றாவது நபரின் பணி குறித்த தனிப்பட்ட இரகசியமான தகவல்களைக் கேட்டுள்ளார் என்பது | வழக்கு எண் 37298/மா.த.த.ஆ/2013 நாள் 19.11.2013<br>(திரு. ஜெ. இரவீந்திரன், இ.கா.ப. (vs) காவல் துறை இயக்குநர் அலுவலகம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | தெரிகிறது. மாண்பமை உச்சநீதிமன்றம் GIRISH RAMACHANDRA DESHPANDE vs CENTRAL INFORMATION COMMISSIONER & Ors. (S.L.P. (Civil) NO.27734 of 2012) என்ற வழக்கில் ஒரு மூன்றாவது நபரின் பணி குறித்த தனிப்பட்ட தகவல்களை, பொது நலனோ, பொது நடவடிக்கையோ இல்லாத பட்சத்தில், அது பிரிவு 8(1)(j)ன்கீழ் வரும் என்றும், அத்தகைய தகவல்களை அளிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் தெளிவாகத் தெரிவித்துள்ளது. இவ்வழக்கில், தான் கேட்கும் தகவலுக்கு பொது நலனோ, பொது நடவடிக்கையோ உள்ளது என்று மனுதாரரால் கூற இயலவில்லை. ஆகவே, இது முழுக்க முழுக்க ஒரு தனிப்பட்ட நபரின் பணி குறித்த தனிப்பட்ட தகவல்களாகும். ஆகவே, மேற்கூறிய உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், இத்தகவல்களை அளிக்க வேண்டிய அவசியமில்லை என்று ஆணையம் கருதுகிறது. எனவே, பொது அதிகார அமைப்பு எடுத்த நிலைப்பாடு சரியே என்று முடிவு செய்யப்பட்டு, இவ்வழக்கில் மேற்கொண்டு விசாரிக்க ஏதுமில்லை என்று கருதி, வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகிறது. | |
| 134. | மேல்முறையீட்டாளர் மேற்சொன்ன சியாமளாவைப் பொறுத்த நியமன உத்தரவு (Appointment Order), சம்பளப் பட்டியல் (Pay Slip) ஆகியவற்றைக் கேட்கிறார். அவை மூன்றாம் நபர் சம்பந்தப்பட்டவை ஆகும். பொதுத் தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பல்வேறு வகை முறைகளைச் சரிவரப் புரிந்துகொண்டு, அந்த வகைமுறைகளைப் பின்பற்றி, மனுக்களை பரிசீலனை செய்யவேண்டியது சட்டத்தின்பாற்பட்ட கட்டாயக் கடமையாகும் | வழக்கு எண் 8461 நாள் 07.10.2013 (திரு.சே.திருவேங்கிடராஜ் (vs) தமிழ் நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) |
| 135. | மனுதாரர் கேட்டுள்ள கேள்விகளைப் பார்வையிடும்போது, மனுதாரரின் மனைவி குறித்தும், அவருடைய வீட்டு செலவினங்கள் குறித்தும் அவரால் பெறப்பட்ட வருமான விவரங்கள் குறித்தும் சில தனிப்பட்ட முறையில் அவருடைய குடும்ப விவரங்கள் கேட்டிருக்கிறார். இது குறித்துப் பொதுத் தகவல் அலுவலர், அலுவலகத்தில் இருக்கும் விவரங்கள் கொடுக்கப்பட்டதாகவும், தனிப்பட்டவருடைய குடும்ப வருமானம் அல்லது மனைவியின் வேலை பார்க்கும் இடத்தில் பெறப்பட்ட சம்பளம் குறித்தோ, வீட்டு செலவினங்கள் குறித்தோ தனிப்பட்ட முறையில் அவ்வலுவலகத்தில் இல்லாத நிலையில் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். இந்நிலையில் மூன்றாம் நபரின் தனிப்பட்ட விவரங்கள் கேட்டிருப்பதாகவும் முடிவு செய்யப்பட்டு மற்ற வினாக்களுக்கு விவரங்கள் வழங்கப்பட்டதால் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது. | Case No,20600 dated 17/03/2009 (Thiru. M. Vincent (vs) The PIO, District Revenue Officer, Kanyakumari District) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 136. | மனுதாரர், இனம் 4ல் “குற்ற எண். 431/11ன் விசாரணை அதிகாரி (IO) இதற்கு முன்பு பணியாற்றிய பதவிகளின் பெயர், ஊர் போன்ற விவரங்கள் வேண்டும்?" என்று கேட்டுள்ளார். இதற்கு, பொது அதிகார அமைப்பு, பிரிவு 8 (j) ன் கீழ் இத்தகவல் விலக்களிக்கப்பட்டது என்பதால், இத்தகவலை அளிக்க இயலாது என்று தெரிவித்துள்ளது. இது தவறான தகவல் என்று மனுதாரர் வாதிட்டார். மாண்பமை உச்சநீதிமன்றம் GIRISH RAMA CHANDRA DESHPANDE -Vs- CENTRAL INFORMATION COMMISSIONER & Ors {S.L.P. (Civil) No.27734 of 2012} என்ற வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஒரு பணியாளரின் பணி பற்றிய தனிப்பட்ட தகவல்களை, எவ்விதப் பொது நலனோ, பொது நடவடிக்கையோ இல்லாத பட்சத்தில், அவை பிரிவு 8(1)(j) ன்படி வரும் என்றும், அத்தகவல்களைப் பொது அதிகார அமைப்பு அளிக்கத் தேவையில்லை என்றும் தெளிவாகத் தெரிவித்துள்ளது. ஆகவே, மேற்கண்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பு இவ்வழக்குக்கும் எல்லா விதத்திலும் பொருந்தும். மனுதாரர், ஒரு காவல் அதிகாரியின் பணி குறித்த தனிப்பட்ட தகவல்களைக் கோரியுள்ளார். இதில் எவ்விதப் பொது நலனோ, பொது நடவடிக்கையோ உள்ளதாக மனுதாரரால் தெரிவிக்க இயலவில்லை. இது முழுக்க முழுக்க மூன்றாம் நபர் பற்றிய தனிப்பட்ட தகவல்களாகும். எனவே, இது போன்ற தகவல்களை, மேற்கூறிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், வழங்க வேண்டிய தில்லை என்று ஆணையம் கருதுகிறது. ஆகவே, இந்த இனத்தில் பொது அதிகார அமைப்பு எடுத்த நிலைப்பாடு சரியே என்று முடிவு செய்யப்படுகிறது. | வழக்கு எண்.33028 நாள் 06.11.2013 (திரு ஆர். மோகனதாஸ் வழக்கறிஞர் (vs) மத்திய குற்றப் பிரிவு (CCB) எழும்பூர், சென்னை 600 220) |
| 137. | **Form 16:-** The Supreme Court has held that the income tax returns of a citizen cannot be disclosed under RTI being in the nature of personal information unless it would serve a larger public interest. The Appellant has not brought out any evidence to show that the disclosure of this information would serve any larger public interest. Hence, the desired information cannot be disclosed. | No.CIC/SM/A/2012/901420 Date of decision: 19-3-2013 (Shri V Gopalakrishnan (vs) CPIO, Madras High Court, Chennai – 600 104.) |
| 138. | மனுதாரர் குறிப்பிட்டுள்ள நபரின் வங்கி முகவரி மற்றும் வங்கி கணக்கு எண் குறித்த தகவல் மூன்றாம் நபர் தகவலாக கருதப்பட்டு வழங்கப்படவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்கிறது. | வழக்கு எண் 25846 நாள் 02.11.2010 (Thiru M Jeganathan (vs) Pension Payment Office Chennai) |
| 139. | The petition of Thiru K. Balachander, requesting details of Travelling Allowance and others of Police staff, dated 21.01.2012 has been perused by the Commission. The rejection of the petitioner’s request under ‘exempted category’ by the public authority is upheld by the Commission. The above petition is therefore rejected. | Order No.980/A/2012 Dated 31.01.12 |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 140. | மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் 02.08.2013 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் ஆலமரத்துப்பட்டியை சார்ந்த சத்யா என்ற பெண்ணுக்கு 20.07.2013 தேதியிலிருந்து மனு செய்த நாளது தேதி வரைக்குள் குழந்தை பிறந்துள்ளதா, என்ன குழந்தை, குழந்தையின் தகப்பனார் பெயர் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்றும், யார் தகவல் கொடுத்தார் என்பதை தகவலாக கோரியுள்ளார். ஆவணங்களை நோக்கும் போது மனுதாரர்/ மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் மூன்றாம் நபர் குறித்த தகவலாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 8(1)(j) ன்கீழ் வழங்கக் கூடிய தகவல் இல்லையென ஆணையம் முடிவு செய்கிறது. மேலும், இம்மனுவானது யூகத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகவும், அதிக அளவில் பொது நலன் கருதி தாக்கல் செய்யப்பட்ட மனுவாக இல்லாமலும் உள்ளது. மேற்கூறிய சூழ்நிலையில் மனுதாரர், அவர் யூகத்தின் அடிப்படையில் கோரிய மூன்றாம் நபர் குறித்த தகவல்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 8(1)(j) ன்கீழ் வழங்கக் கூடிய தகவல் அல்ல என ஆணையம் முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. | (வழக்கு எண்.6875/E/2014 (ம) 17671/E/2014 ஆணை நாள்: 26.11.2014)<br>(R. Kumar (vs) பொது தகவல் அலுவலர், அரசு மாவட்ட தலைமை பொது மருத்துவமனை, கரூர் 639 001) |
| | **சட்டப் பிரிவு** 9 :- | |
| 141. | Sh. Gurbaksh Singh submitted RTI application dated 31.10.2008 before the Central Public Information Officer, Punjab University, Chandigarh to obtain a Photo copy of thesis of Sh. Rattan Singh Jaggi. Commission has heard both parties and upholds the order of the CPIO that the disclosure of the requested information is not allowed under the provisions of Section 9 of the RTI Act, which clearly says that the CPIO can reject the request for information where such a request providing access would involve an infringement of copy right subsisting in a person other that the State. Appeal is dismissed. | CIC / DS / A / 2011 / 001837 dated 17 November 2011 |
| **சட்டப் பிரிவு 11**:- | | |
| 142. | மனுதாரர் கேட்டிருக்கும் தகவல் மூன்றாம் நபர் தொடர்புடையது என்று பொதுத் தகவல் அலுவலர் கருதும் நிலையில், அவர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 11இல் சொல்லப்பட்டுள்ள பல்வேறு வகைமுறைகளைச் சரிவரப் புரிந்து கொண்டு, அந்த வகைமுறைகளைப் பின்பற்றி, மனுக்களை பரிசீலனை செய்யவேண்டியது சட்டத்தின்பாற்பட்ட கட்டாயக் கடமையாகும். பொது தகவல் அலுவலர் மூன்றாம் நபர் சம்பந்தப்பட்ட தகவலை வழங்கக் கருதினால், | வழக்கு எண் 32845/விசாரணை/A/ 2014 நாள் 11.06.2015<br>(திரு. இராஜசேகரன் (vs) பொதுத் தகவல் அலுவலர் வட்டாட்சியர் அலுவலகம், சோழிங்கநல்லூர் வட்டம், சோழிங்கநல்லூர்-600119. காஞ்சிபுரம் மாவட்டம் |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | மனுபெறப்பட்ட ஐந்து தினங்களுக்குள், அந்த மூன்றாம் நபருக்கு, அவருடைய கருத்துக்களைக் கேட்பதற்காக ஒரு வாய்ப்பை வழங்கும் பொருட்டு, அறிவிப்பு அனுப்ப வேண்டும். அவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள், மூன்றாம் நபர், பொது தகவல் அலுவலரிடம் ஏன் அந்தத் தகவல்களை வழங்கக்கூடாது என்பதற்கான ஆட்சேபணையை விளக்கும்பொருட்டு, அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அந்த மூன்றாம் நபர் முன்னிடுகின்ற ஆட்சேபணையைப் பொது தகவல் அலுவலர் கருத்தில் கொண்டு, அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியவையா, இல்லையா என்று பரிசீலனை செய்து, பரிசீலனைக்குப் பிறகு, அந்த ஆட்சேபணைகள் ஏற்கக்கூடியது என்று பொது தகவல் அலுவலர் கருதும் நிலையில், அந்தத் தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்க மறுத்துவிடலாம். அதேபோன்று, ஆட்சேபணைகள் ஏற்கத்தக்கது அல்ல என்ற ஒரு முடிவை பொது தகவல் அலுவலர் எடுப்பாரேயானால், அந்தத் தகவல்களை மேல்முறையீட்டாளருக்கு வழங்கிவிடலாம். அதற்கு முன்பு பொது தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6–ன் கீழ் மனு பெறப்பட்ட தேதியிலிருந்து 40 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட மூன்றாம் நபருக்கு, அவருடைய ஆட்சேபணையைத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில், அவரைப் பற்றிய தகவலை வழங்கலாமா அல்லது கூடாதா என்ற பொதுத் தகவல் அலுவலரின் முடிவை எழுத்து மூலமாக அந்த மூன்றாம் நபருக்குத் தெரிவிக்க வேண்டும். பொது தகவல் அலுவலர், மூன்றாம் நபருக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 19ன் கீழ் மேல்முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு. இத்தகைய அதிகாரத்தை பெற்றிருக்கும் பொது தகவல் அலுவலர், ஒரு நீதிபதியின் அணுகுமுறையைக் கடைபிடிக்கவேண்டுமென்பது சட்டத்தின் எதிர்பார்ப்பு. அந்த நடைமுறை இந்த வழக்கில் பின்பற்றப்படவில்லை. இனிவருங்காலங்களில், பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன நடைமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறார். | |
| 143. | மூன்றாம் தரப்பினருக்கு அனுப்பப்பட்ட கடிதம் பட்டுவாடா செய்ய முடியாமல் திரும்பி வந்துவிட்ட நிலையில் மூன்றாம் தரப்பினர் சார்பில் மறுப்பு ஏதுமில்லை என்று கருதி தகவலை தந்திருக்க வேண்டும். | வழக்கு எண் SA 5303/மா.த.த.ஆ /2015 dated 30-09-2015 |
| 144. | மனுதாரர் 3.8.2009 தேதியிட்ட மனுவின் மூலமாக திருமதி ரமா என்பவர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மற்றும் 28.4.2009 தேதியிட்ட விசாரணை சம்பந்தப்பட்ட தகவல்கள் கோரியுள்ளார். திருமதி ரமா என்பவர் மனுதாரரின் மருமகள் (தனது மகனுடைய | வழக்கு எண் 25236 நாள் 17.02.2010 (திரு பி. கனகராஜ் (vs) மாவட்ட சமூக நல அலுவலர் அலுவலகம் தூத்துக்குடி) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | மனைவி). திருமதி ரமா கொடுத்துள்ள புகார் மனு மனுதாரருடைய குடும்பத்தாரைப் பற்றிய ஒன்று. எனவே அத்தகைய புகார் மனுவினுடைய நகலை யார் மீது புகார்கள் கூறப்பட்டுள்ளனவோ அவர் அந்த மனுவினுடைய நகலை கேட்கும்போது, சட்டப் பிரிவு 11ன் கீழ் கூறப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி தகவல்களை வழங்குவதா அல்லது வழங்க மறுப்பதா என்பதை பொதுத் தகவல் அலுவலர் முடிவு செய்ய வேண்டும். மேலே கூறப்பட்ட நடைமுறையைப் பின்பற்றாமல் 6.8.2009 அன்று அனுப்பப்பட்ட பதில் சட்டப்படி செல்லுபடியாகாது. எனவே, மாவட்ட சமூக நல அலுவலர் உடனடியாக சட்டப் பிரிவு 11ன் கீழ் சொல்லப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி தகவல் வழங்குவது சம்பந்தமாக முடிவு எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகின்றார். சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கால அவகாசம் எந்த விதத்திலும் மீறப்படக்கூடாது என்றும் பொதுத் தகவல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். | |
| 145. | மேல்முறையீட்டு மனுதாரர் 16.8.13 தேதியிட்டு பிரிவு 6(1)ன் கீழ் பொதுத் தகவல் அலுவலரிடம் காலமான புதுக்கோட்டை மாவட்டத்தில் பணிபுரிந்த திரு. சின்னத்துரை (நிலை 1) காவலருடைய பணப்பயன்கள் யாருக்கு வழங்கப்பட்டது என்பது போன்று 10 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். அதன்பிறகு முதல் மேல்முறையீடு செய்யாமல் நேரடியாக ஆணையத்திற்கு 24.9.13 தேதியிட்டு மேல்முறையீடு செய்துள்ளார். இம்மேல்முறையீட்டு மனுதாரர் அன்னாருக்கு மூன்றாம் நபர் என்பதாலும் பொது நலன் எதுவும் இருப்பதாகத் தெரியாததாலும் வழங்கப்பட வேண்டிய கட்டாயம் இல்லை எனக் கருதப்படுகிறது. எனவே மனுதாரர் மனு நிராகரிக்கப்படுகிறது. | வழக்கு எண் 44851/மாததஆ/13 நாள் 27.01.2014 |
| | மனுதாரர் தான் தமிழ்நாடு ஓய்வுபெற்ற காவல்துறையினர் நலச்சங்கத்தின் மாநில துணைச் செயலாளர் என்று குறிப்பிட்டு அவரது நலச் சங்கத்தின் உறுப்பினராக இருக்கும் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய மருத்துவ செலவிற்கான செலவு தொகை கிடைப்பது குறித்து காவல்துறை தலைவரிடம் தகவல்கள் கோரியுள்ளார். மனுதாரர் அனுப்பியிருக்கக்கூடிய மேல்முறையீட்டு மனு மற்றும் நகலினைப் பார்க்கையில் பொது அதிகார அமைப்பு போதிய நிதி வழங்கக் கோரி கோரிக்கை அரசிடம் கேட்கப்பட்டுள்ளது என்றும் நிதி கிடைக்கப் பெற்றவுடன் வழங்கப்படும் என்றும் தகவல் கொடுத்துள்ளது தெரிய வருகிறது. இது தொடர்பாக இரண்டு முறை பதில் அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியிருப்பது மூன்றாம் நபர் சம்பந்தப்பட்டதாகும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் இவை | வழக்கு எண். 23235/மா.த.த.ஆ./13 நாள் 26.09.2013 |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | –போன்ற மனுக்களை ஏற்க இயலாது. அதோடு மனுதாரர் கோரியிருப்பது தகவல் என்ற போர்வையில் நிர்வாக நடவடிக்கை ஆகும். இவை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வராத சூழ்நிலையில் இம்மனுவில் எந்தவிதமான விசாரணை தேவையில்லை என கூறி தள்ளுபடி செய்யப்படுகிறது. | |
| 146. | சாகுபடி அடங்கல் நகல், நிலவரி ரசீது நகல், நில வரைப்படம், சிட்டா நகல், பட்டா பாஸ்புக் நகல், பட்டா பதிவு மாற்றம் பற்றிய விவரம், பட்டா மாற்றம் குறித்த கோப்பு நகல், செட்டில்மெண்ட் நகல், நில உடமை மேம்பாடடு திட்ட பதிவேட்டு நகல் போன்ற பல்வேறு பசலி ஆண்டுகளுக்குக் கோரியுள்ளார். இவற்றைப் பரிசீலிக்கையில், இவையணைத்துமே இம்மேல்முறையீடு தாரருக்கு சம்பந்தமே இல்லாத மூன்றாம் நபர்கள் பற்றிய தகவல்களாகும். அவசர நோக்கில், ஒரு கிரமத்தின் பலதரப்பட்ட நிலங்கள், புல எண்கள் பற்றிய தகவல்களைப் பொது அதிகார அமைப்பு இம்மேல்முறையீடுதாரருக்குக் கொடுத்துள்ள நிலையில் பொது நலனையும், சமூக நலனையும் கருத்தில் கொண்டு இவ்வாணையத்தின் முழு அமர்வு, பொது அதிகார அமைப்பின் இந்தச் செயலை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிழைகிறது. மேலும், இவை போன்ற தகவல்கள் கோரும் மனுக்களை கையாள்வது குறித்து சம்பந்தப்பட்ட துறையின் பொது அதிகார அமைப்புகளுக்கு உரிய பயிற்சியளிக்கவும், இவ்வாறான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளதன் காரணமாக எத்தகைய தீமைகளோ, பாதகங்களோ பொது மக்களுக்கோ, நிலஉரிமையாளர்களுக்கோ ஏற்படாவண்ணம் தடுக்கும் நடவடிக்கைகளை, தேவைப்படின் மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அரசுத் துறை அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 29396, 29429, 29466, 29467, 29469, 29470, 29471, 29472, 29473, 29474, 29475, 29476, 29478, 29479, 29480, 29481, 29482, 29483, 29484, 29485, 29486, 29487, 29488, 29489, 29490, 29491, 29492, 29493, 29494, 29495, 29496/மா.த.த.ஆ/13 நாள் 11.09.2013 (திரு.பூவைநா.கணேசன் (vs) வட்டா ட்சியர் அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்) |
| | **சட்டப் பிரிவு 19(1):-** | |
| 147. | தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு *19(1)*ன்படி, முதல் மேல்முறையீடு முப்பது நாட்களுக்குள் செய்யப் பட வேண்டும். காலதாமதத்துக்கான எந்த காரணமும் அளிக்கவில்லை. எனவே இம்மனு நிராகரிக்கப்படுகிறது. | ஆணை எண் *6222*/மா.த.த.ஆ/*2013* நாள் *25.03.2013* |
| 148. | மனுதாரர் இனி வருங்காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி மனு செய்தவரே மேல்முறையீடும், இரண்டாவது மேல்முறையீடும் செய்ய வேண்டும் | வழக்கு எண். *3482* நாள் *19.05.2011* (A K Jailani (vs) The PIO o/o Tahsildar Dindigul) |
| 149. | தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் முதலில் தரப்படும் மனுவில் என்ன கேள்விகள் கேட்கப்படுகிறதோ அதற்கு மட்டுமே மேல் முறையீடுகள் செய்ய வேண்டும். மேல் முறையீட்டு மனுவில் புதிதாகக் கேள்விகளைச் செய்தல் கூடாது என்று மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் *24362* நாள் *15.07.2011* (திரு. டி. ராஜேந்திரன் (vs) வட்டார வளர்ச்சி அலுவலர், மன்னார்குடி) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 150. | இனி வருங்காலங்களில் மனுதாரர், தனக்குத் தேவைப் படும் தகவல்கள் குறித்து தெளிவாகக் குறிப்பிட்டு தனித் தனியாக மேல் முறையீடு செய்து கோர வேண்டுமே தவிர, ஒரே மேல்முறையீட்டு மனுவில், ஒட்டுமொத்த மனுக்களுக்கு தகவல்கள் கோரக் கூடாது என்று மனு தாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 24220 நாள் 01.02.2010 (திரு என். நாகலிங்கம் (vs) அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் விருதுநகர் மாவட்டம்) |
| 151. | பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி மனுதாரரை விசாரணைக்கு அழைப்பது சரியன்று/முறையன்று | ஆணை எண் 21672/A/12 நாள் 18.6.2012 |
| | **ஆணைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் கவனத்தில் கொள்ள வேண்டியவை** | |
| 152. | பொதுத் தகவல் அலுவலர் உடல் நிலை சரியில்லாத காரணத்தாலோ அல்லது வர இயலாத காரணத்தாலோ அவருக்கு நிகரான ஒருவரை ஆணையத்திற்கு விசாரணைக்கு அனுப்பிவைக்க வேண்டுமே தவிர இது போன்று வாய்தா கேட்டு எழுதிய கடிதத்தை ஆணையம் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 8(1)ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | வழக்கு எண். 55476/விசாரணை/ B /2013 நாள்: 12.05.2015 திருமதி. பா.சுந்தரி (vs) பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியரகம், கோவை 641 018. கோயம்புத்தூர் மாவட்டம். |
| 153. | இன்றைய விசாரணைக்கு பொது அதிகார அமைப்பிலிருந்து பொதுத் தகவல் அலுவலர் வரவில்லை. ஆயினும், அவருக்கு பதிலாக ஒரு இளநிலை உதவியாளர் ஆணையத்தின் முன் ஆஜரானார். அவர் கொணர்ந்திருந்த கடிதத்தில் வேளைப் பளு காரணமாகப் பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின்முன் ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்துள்ளார். தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012–ன் விதி 8(2)ல் தகுந்த காரணத்திற்காக பொதுத் தகவல் அலுவலர் வரவில்லையென்றால் முதுநிலை அலுவலர் ஒருவர் ஆணையத்தின் அனுமதியுடன் விசாரணைக்கு வரவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பொதுத் தகவல் அலுவலர் பொறுப்பற்ற முறையில் இளநிலை உதவியாளர் ஒருவரை நீதிமன்றத்திற்கு ஒப்பான இவ்வாணையத்தின்முன் ஆஜராக அனுப்பியுள்ளார். அதோடுகூட, அவர் தெரிவித்திருக்கும் காரணம் வேலைப்பளு என்பது. இதுபோன்ற பொறுப்பற்ற, வரம்பு மீறிய அணுகுமுறையை இவ்வாணையம் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த ஒழுங்கீனத்திற்கு பொதுத் தகவல் அலுவலர்மீது கடுமையான நடவடிக்கையை உரிய | வழக்கு எண் 52916/மா.த.ஆ/2012 நாள் 22.03.2013 (திரு.பி.இப்ராஹிம்ஷா (vs) வன உயரினக்காப்பாளர் அலுவலகம், திருவில்லிப்புத்தூர்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | சட்டப்பிரிவுகளின்படி எடுக்கும்படி திருவில்லிப்புத்தூர் வன உயிரின காப்பாளரை ஆணையம் பணிக்கிறது. அவ்வாறு எடுத்த நடவடிக்கையின் விவரத்தை ஆணையத்திற்கு இவ்வாணை கிடைத்த *15* நாட்களுக்குள் தெரியப்படுத்த வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது. | |
| 154. | இவ்வழக்கில் காவல் துறையின் சார்பில் விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின் போது நடந்துகொண்ட முறை பெரிதும் கண்டிக்கத்தக்கது. மனுதாரரிடம் நேரிடையாகப் பேசக் கூடாது என்று ஆணையம் கூறியதைச் சற்றும் பொருட்படுத்தாமல் மனுதாரரிடம் நேரடியாகத் தேவையற்ற முறையில் வாதம் வளர்த்ததை ஆணையம் ஏற்கவில்லை. மனுதாரர் தனக்கு ஆங்கிலம் தெரியாது, எனவே பொதுத் தகவல் அலுவலர் தமிழில் பேச வேண்டுமென்று கூறியதை ஏற்காமல் ஆணையத்திற்கு ஆங்கிலம் புரியுமென்று கூறியதும் ஏற்பதற்கில்லை. வழக்கு விசாரணை என்பது, மனுதாரருக்கு உரிய தகவல்களைப் பெற்றுத் தருவதற்காகத் தான் நடத்தப்படுகிறது. இந்நிலையில் தமிழில் பேச வேண்டுமென்று மனுதாரர் கூறும்போது பொதுத் தகவல் அலுவலர் அதனை ஏற்று மனுதாரருக்குப் புரியும் மொழியில் தான் விளக்கங்களைத் தர வேண்டும். தேவையற்ற முறையில், தேவையற்ற கருத்துக்களைக் கூற வேண்டாமென்று ஆணையம் மீண்டும் மீண்டும் கூறியதைச் சற்றேனும் செவிமடுக்காமல் தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலர் பேசிக்கொண்டே இருந்ததை ஆணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இனி வருங்காலங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விசாரணைக்கு வரும்படி அழைப்பாணை அனுப்பப்படும் போது ஆணையம் மேற்கொள்ளுகின்ற விசாரணையில் வழக்குமன்றத்திற்கு (Court) உரிய கௌரவத்தையும், கண்ணியத்தையும் காக்கின்ற வகையில் பொதுத் தகவல் அலுவலர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தும்படி காவல் கண்காணிப்பாளர், திருவாரூர் மாவட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறார். | வழக்கு எண் *23480* நாள் *19.01.2010* (திரு A.K. ராஜ்பாலன் (vs) கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (குற்றம்) திருவாரூர் மாவட்டம், திருவாரூர்) |
| 155. | கடிதம் தனக்கு வந்து சேரவில்லையென்று மனுதாரர் கூறினார். அது அனுப்பப்பட்ட தற்கான அனுப்புகை பதிவேட்டை பொதுத் தகவல் அலுவலர் கொண்டு வரவில்லை. விசாரணைக்கு வருகின்றபோது உரிய ஆவணங்கள், உரிய கோப்புகள் கொண்டு வரவேண்டுமென்று சம்மனில் தெரிவிக்கப்பட்டிருந்தும் அங்ஙனம் செய்யாத பொதுத் தகவல் அலுவலரின் செயலை ஆணையம் கண்டிக்கிறது. | வழக்கு எண் *2685* நாள் *21.8.2009* (P.M. Anvar (vs) The Public Informaiton Officer, The Tahsildar Vaniampadi Vellore Dist) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 156. | இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்கள் இருவரும் மனுதாரருக்கு எவ்வித தகவலும் வழங்காத காரணத்தால் அவர்களிருவருக்கும் இன்று (10.02.2015) ஆணையத்தில் விசாரணை ஆஜரானதற்கு வழங்கப்படும் எந்த சலுகையும் (T.A., D.A மற்றும் O.D.) அனுமதிக்கக் கூடாது என்று அவர்களுடைய உயரதிகாரிகளுக்கு இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது. | வழக்கு எண்31136/ விசாரணை/B/2013 (3387/ பி/2014) ஆணை நாள் 23-04-2015 (Thiru P.K.Divakaran (vs) பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், பந்தலூர் வட்டம், பந்தலூர், நீலகிரி மாவட்டம்.) |
| 157. | முதல் மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ல் சொல்லப்பட்ட முதல் மேல்முறையீடு நடைமுறைகளை முறையாக கடைபிடிக்காமல், பிரிவு 19(6)ன் கீழான தமது கடமையை சரியான முறையில் செய்யத் தவறியுள்ளதால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க அவருடைய மேல் அதிகாரிகளுக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூலமான விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு அவருக்கு இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் 43234/ விசாரணை/C/2014 நாள் : 18.03.2015 திரு சு. பட்டாபிராமன் (vs) பொதுத் தகவல் அலுவலர்/ கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர், உதவி தொடக்கக் கல்வி அலுவலர் அலுவலகம், தென்காசி 627 81, திருநெல்வேலி மாவட்டம். |
| | **சட்டப் பிரிவு 19(7):-** | |
| 158. | மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)ன்படியான 21.01.2013 நாளிட்ட மனுவையும், 22.02.2013 தேதிய சட்டப்பிரிவு 19(1)ன்படி முதல் மேல்முறையீட்டையும், அதனைத் தொடர்ந்து 26.04.2013 தேதிய சட்டப்பிரிவு 19(3)ன்படி இரண்டாவது மேல்முறையீட்டையும் இவ்வாணையத்திற்கு அனுப்பி, அதற்கு வழக்கு எண்.18757/விசாரணை/F/13 எண்ணிட்டு, மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய வேறு அம்சங்கள் ஏதும் இல்லை என்று கருதி அத்துடன் 30.12.2013 அன்று மேல்முறையீடு முடிக்கப்பட்டுள்ளது. தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(7)ன் வகைமுறைகளின்படி ஆணையம் ஒருமுறை தீர்ப்பு பிறப்பித்தால் அதுவே தரப்பினர்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். மீண்டும் மீண்டும் விசாரணை மேற்கொள்ள சட்டத்தில் இடமில்லை. எனவே, இவ்வழக்கு இத்துடன் முடிக்கப்படுகிறது. | (வழக்கு எண் 4154/F/2014 நாள்: 10.02.2015) திரு. ஆ. மணிமாறன், சிவகாசி மேற்கு (vs) பொது தகவல் அலுவலர்/ கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), மாவட்ட காவல் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் |
| | **சட்டப் பிரிவு 19(8) (a) (ii)** | |
| 159. | மனுதாரர் 15/10/2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், உலுப்பக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 16 இனங்களில் தகவல்கள் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். ஆனால், அந்த மனுவினை பெற்றுக்கொள்ளாமல், அது போன்று பொதுத் தகவல் அலுவலர் அந்த விலாசத்தில் யாரும் இல்லை என்று மனுதாரருக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் | வழக்கு எண் 29012/09/விசாரணை நாள் 12/04/2010 (திரு. எஸ். சந்திரசேகரன் (vs) பொது தகவல் அலுவலர். மருத்துவ அதிகாரி ஆரம்ப சுகாதார நிலையம் உலுப்பக்குடி, நத்தம் வட்டம் திண்டுக்கல் மாவட்டம்) |


| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | சட்டப் பிரிவு 19 (1)ன்கீழ் மேல் முறையீடு செய்துள்ளார்.<br><br>உலுப்பக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி பொதுத் தகவல் அலுவலராக தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 19 (8) **(a) (ii)** ன்படி இந்த ஆணையத்தால் நியமிக்கப்படுகிறார். மனுதாரருக்கு மருத்துவ அதிகாரி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், உலுப்பக்குடி, நத்தம் வட்டம், திண்டுக்கல் மாவட்டம், அவர்கள் இந்த ஆணை கிடைக்கப் பெற்ற 30 நாட்களுக்குள் தகவல் வழங்கிவிட்டு அதன் விவரத்தை இந்த ஆணையத்திற்கு இவ்வாணை கிடைத்த ஐந்து வாரங்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் சட்டப் பிரிவு 20ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதன்மூலம் எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது | |
| | மனுதாரர் தனது 24.06.2013 நாளிட்ட மனுவில் ‘‘தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கீழ்க்காணும் தகல்களை அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். எனது கட்சிக்காரர் சார்பாக வழக்கறிஞர் என்ற நிலையில் பாதிக்கப்பட்ட எனது கட்சிக்காரருக்காக இந்த தகவல் கோரப்படுகிறது’’ என்று தெரிவித்து, 9 இனங்களுக்கு தகவல் கேட்டு மனு செய்துள்ளார். கட்சிகாரர் என்றாலும் அவரும் ஒரு இந்தியக் குடிமகன் என்பதால் அவருக்கும் இந்தத் தகவலைக் கேட்பதற்கு அதிகாரம் உள்ளது. ஆனால் அவருக்குப் பதிலாக வழக்கறிஞர் மனு செய்து தகவல் பெறுவதற்கு, தகவல் பெறும் உரிமை சட்டத்தில் எங்கும் எடுத்துரைக்கப்படவில்லை. மனுதாரர் சட்டத்திற்கு புறம்பாக தகவலைக் கேட்டுள்ளதாக இவ்வாணையம் கருதுகிறது. இந்த சூழ்நிலையில் கட்சிகாரருக்காக தகவல் கேட்டுள்ள வழக்குரைஞர் 9 இனங்களும் வினா வடிவில் கேட்டிருப்பதால் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 2(f)படியும் சட்டப்பிரிவு 11 படியும் தகவல் வழங்க முடியாத நிலை பொதுத் தகவல் அலுவலருக்கும், மேல்முறையீட்டு அலுவலருக்கும் ஏற்பட்டுள்ளது. ஆதலால் இனிவருங்காலங்களில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை முறையாகப் பயன்படுத்தி மனு செய்து அவருக்கு வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என்று ஆணையம் அறிவுறுத்துகிறது. 2. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் ஆஜராக இயலாத நிலை உள்ளதை நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டாட்சியர் அவர்கள் 26.11.2014 நாளிட்ட கடிதத்தில், "தற்போது கூடலூர் வட்டத்தில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பணியிடம் காலியாக உள்ளதால் இந்த அலுவலகத்தின் தேர்தல் துணை வட்டாட்சியர் கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் தற்போது | வழக்கு எண் 50685/விசாரணை/பி/2013(18501/பி/2014) நாள்: 02.12.2014 (Thiru. M. Zainul Babu (vs) பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், கூடலூர் வட்டம், கூடலூர் 643 212, நீலகிரி மாவட்டம்.) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | தேர்தல் பணியில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல் போன்ற பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் தேர்தல் துணை வட்டாட்சியரால் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை" என்று தெரிவித்துள்ளார். இந்த சூழ்நிலையில் இதுவரை கூடலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர் நியமிக்கப்படாத பட்சத்தில், மேற்படி அலுவலகத்திற்கு தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலரை விதி 19(8) (a)(ii) ன்படி நியமித்து, அதற்குண்டான உத்திரவு நகலை இவ்வாணைகள் கிடைக்கப் பெற்ற *30* நாட்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். | |
| | **சட்டப் பிரிவு 20(1):-** | |
| 160. | மனுதாரர் அனுப்பியுள்ள மனுவின் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் விட்டுச் சென்ற முன்னாள் செயல் அலுவலர் திரு கிருஷ்ணமூர்த்தி, தற்போது தாராபடைவீடு செயல் அலுவலராக பணி ஆற்றி வருகிறார். அவர் மீது பிரிவு *20 (1)*ன் கீழ் நடவடிக்கை எடுத்து ஏன் அதிகபட்ச அபராதத் தொகையான ரூ *25,000/-* ஐ வசூல் செய்து அரசுக் கணக்கில் இருசால் செய்யக் கூடாது என்பதற்கான விளக்கங்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற *15* தினங்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார். | வழக்கு எண்.*26244* நாள் *25.02.2010* (திரு ஏ, முகமது சுஉேறல் (vs) பொதுத் தகவல் அலுவலர், பேர்ணாம்பேட் *3*வது நிலை நகராட்சி அலுவலகம் பேர்ணாம்பேட் *635 810*) |
| 161. | அரசு அலுவலர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும், தவறிழைத்திருப்பின் ஓய்வு பெற்ற காலத்திலிருந்து *4* வருடங்கள் வரை அவர்களுக்கு தண்டனை வழங்க விதிகளில் இடமுள்ளது. | வழக்கு எண் *40925* நாள்: *19.05. 2015* (திரு.கே.ராதாகிருஷ்ணன், (vs) வட்டாட்சியர் அலுவலகம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.) |
| | The Commission, therefore, has no option excepting to direct the District Collector, Villupuram to initiate action under the Pension Rules to recover the penalty amount of Rs.25,000/- from the concerned Public Information Officer who is retired now within 15 days from the date of receipt of this order and report the fact to the Commission thereafter. | Case No.9273/O-8/ dated 07.09.2010 (Thiru K Senthil Villupuram District 606 204 (vs) The Public Information Officer Office of the BDO Village Panchayat Thiyagadurgam Villupuram District) |
| 162. | இந்த ஆணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டு ஒரு வருடம் மூன்று மாதம் காலதாமதத்திற்குப் பிறகும் தகவல்கள் வழங்காத சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களுக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி, ரூ.*25,000/-* (அனைவருக்கும் மொத்தமாக) அபராதம் விதித்து இவ்வாணையம் ஆணையிடுகிறது. இந்த அபராதத் தொகையை சரிசமமாகப் பிரித்து சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர்களிடமிருந்து பெற்று அரசு கணக்கில் செலுத்த வேண்டும் என்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்படுகிறார். | வழக்கு எண் *25360/09 (14391/08)* நாள் *30/03/2010* (Thiru S Liagath Ali Trichirapalli 21 (vs) The Public Information Officer Office of the District Adi Dravidar and Tribal Welfare Officer Karur) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 163. | Since the delay in providing the information has been over 100 days, the Commission is passing an order penalizing all 06 officers 25,000/- each, which is the maximum penalty under the Act. | Decision No. CIC/SG/A/2010/002127/9341 Penalty Appeal No. CIC/SG/A/2010/002127 dated 22/10/2010 |
| 164. | தகவல்கள் தாமதமாகக் கொடுக்கப்பட்டதாக இவ்வாணையம் கருதி, அக்காலதாமதத்திற்கு விளக்கம் அளிக்குமாறு பொது அதிகார அமைப்பை பணித்தது. பொது அதிகார அமைப்பிலிருந்து ஆஜரான உதவிப் பொதுத் தகவல் அலுவலர் அவ்வாறே ஒரு விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு சமர்ப்பித்தார். அவ்விளக்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. "Particulars had to be collected from four sections and the APIO, had taken all steps to expedite the collection of the same by sending reminders also. After all the particulars were collected then the same was furnished to the applicant on 4.6.2013. The delay which has occurred is not wanton and manual search of records are involved in this matter, and it was a time consuming effort." பொது அதிகார அமைப்பு அளித்துள்ள மேற்கண்ட விளக்கத்தின் மூலம், தகவல் அளிப்பதில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் காலதாமதம் செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, மேற்கண்ட விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | வழக்கு எண் *11818/மா.த.த.ஆ/2013* நாள் *25.07.2013* (திரு. வி.அன்பழகன் (vs) சென்னை உயர்நீதிமன்றம்) |
| | **சட்டப் பிரிவு 20(2):-** | |
| 165. | *முன்னாள் நகர சார் ஆய்வாளர் திரு.ஜி.சேகர் என்பவர் 18.11.2013 நாளிட்ட மனுதாரரின் மனுவை வாங்க மறுத்ததற்கான ஆதாரம் தெளிவாக இருக்கும் காரணத்தாலும், இவ்வாணையத்தின் 06.03.2015 நாளிட்ட விசாரணைக்கான அழைப்பாணை 20.02.2015 அன்று அனுப்பப்பட்டிருந்தும், நகர சார் ஆய்வாளர் திரு.ஜி.சேகர் என்பவர் அதனை வாங்க மறுத்து, திருப்பி அனுப்பியதற்கான ஆதாரம் இவ்வாணையத்தின் வசமிருக்கும் காரணத்தாலும், அவர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தையும், அரசு கடமையையும் புறக்கணித்ததாலும், அவர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவ்வாணைகள் கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் அவருக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின் நகலுடன் இவ்வாணையத்திற்கு அவரது விவர அறிக்கையை அனுப்ப வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இப்பொருள் குறித்த சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல் இவ்வாணையுடன் இணைத்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்படுகிறது.* | *வழக்கு எண் 4638/மறுவிசாரணை/D/2014 ஆணை நாள் : 13.05.2015 (திரு. P. ரவி, சி/ஓ. ஆர்.விட்டோபாய் (vs) பொதுத் தகவல் அலுவலர், நகர சார் ஆய்வாளர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், திருவண்ணாமலை நகராட்சி. திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம்)* |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| | **சட்டப் பிரிவு 22:-** | |
| 166. | மேல் நிலைத் தேர்வுகளுக்கு மட்டுமே விடைத் தாள்களை வழங்குவதற்கு அரசு ஆணை இருப்பதாகவும், 10ம் வகுப்பு விடைத் தாள்களை வழங்குவதற்கு அரசு ஆணை இல்லையெனவும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். மனுதாரர் விரும்பினால் விடைத்தாளைப் பார்ப்பதற்கு அவருக்கு அனுமதி உண்டு என்றும் கூறினார். விதி 22ன்படி தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிற அரசு ஆணைகளை விட மீதூர்ந்து இயங்கும் தன்மை உடையது என்ற அடிப்படையில் மனுதாரர் கேட்டுக் கொண்டபடி இவ்வாணை பெறப்பட்ட ஒரு வாரத்திற்குள் விடைத்தாளின் ஒளி நகலை அனுப்பி, மனுதாரரின் ஒப்புகைப் பெற்று அதன் விவரத்தினை ஆணையத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. | வழக்கு எண் 27400 நாள் 01.06.2009 (திரு A.N. ஆசைத்தம்பி (vs) பொதுத் தகவல் அலுவலர், அரசுத் தேர்வுகள் இயக்குநரகம், கல்லூரி சாலை, சென்னை 600 006.) |
| 167. | The public authority informed the Commission that normally fire reports are not given to public under the provisions of departmental manual. He was informed that the Right to Information Act has an over-riding effect under Section 22 of the Act on all the existing laws and therefore the information has to be supplied. | Case No.25667 dated 16.02.2010 (Thiru A. Appanu (vs) Fire and Rescue Services Department, Chennai – 83) |
| | **மனுதாரருக்கு தகவல்களை அனுப்பும்போது:** | |
| 168. | திரு ஜெயபதி அவர்களின் தந்தை பெயர் வேலாயுதசாமி நாயுடு என்பதற்குப் பதிலாக வெங்கிடுசாமி நாயுடு என்று தவறாக அளித்துள்ளார். பெயர் தவறாக எழுதுவது என்பது கண்டிக்கத்தக்கது என்றும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் செய்யக்கூடாது என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது | வழக்கு எண் 24010 நாள் 28.02.2011 (Thiru N Selvaraj Bavadithootam Tirupur (vs) The Public Information Officer Office Of the Taluk Office Paladam Tirupur District) |
| 169. | ஒவ்வொரு குடியிருப்புக்கும் அரசு வழங்கிய நிதி எவ்வளவு என்று கேட்கப்பட்டுள்ளது. இதனை எடுத்து எழுதும் போது மனுதாரருக்கு வழங்கப்பட்ட பட்டியலில் ரூ.55,500 என்பதற்குப் பதிலாக ரூ.5,500 என்று குறிப்பிட்டுள்ளதை மனுதாரர் சுட்டிக்காட்டினார். ஒரு பூஜ்ஜியம் விடுபட்டுவிட்டது என்று பொதுத் தகவல் அலுவலர் கூறியதை ஆணையம் கண்டிக்கிறது. அதிலும் குறிப்பாக தொகையைப் பற்றித் தகவல் கேட்கும் பொழுது 55,000/- லிருந்து 5,500/- எவ்வளவு வேறுபடுகிறது என்பதை பொதுத் தகவல் அலுவலர் எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர் காலத்தில் இது போல தவறுகள் ஏற்படுமானால் ஆணையம் கடுமையாக நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரிக்கிறது. | வழக்கு எண் 11156 நாள் 12.10.2010 (திரு. எஸ். ஆறுமுகம் திரு எம் அம்மாசி கரடிக்கல் கிராமம் (vs) ஊராட்சி ஒன்றிய அலுவலர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்) |

| வ. எண் | தீர்ப்புரைகள் | வழக்கு எண்/நாள் |
|---|---|---|
| 170. | மனுதாரர் மூன்று இனங்களில் தகவல்களைக் கேட்கும்போது இனம் வாரியாக தனித்தனியே ஒன்றன்பின் ஒன்றாக எண்ணைக் குறிப்பிட்டு தகவல் அளிக்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது. | வழக்கு எண் *5843* நாள் *23.7.2010* *(*பி. குப்புசாமி (vs) வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் திருவள்ளூர்*)* |
| 171. | மனுதாரர் குறிப்பிட்டுள்ள இனங்களின் வரிசை எண்ணை குறிப்பிட்டு மனுதாரருக்கு தகவல் தரப்பட்டதை இவ்வாணையம் சரியான நடைமுறையாக கருதுகிறது. | வழக்கு எண் *20304/O-8* நாள் *15.03.2011 (*செல்வி. நவினா தாமஸ், (vs) சென்னை மாநகராட்சி) |
| 172. | இணை இயக்குநர் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பதில் அனுப்பும் போது, தனது பதவியை முன் நிறுத்தாமல், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுத் தகவல் அலுவலர் என்ற பதவியை முன்நிறுத்தி பதில் அனுப்பி இருக்க வேண்டுமேயொழிய, இணை இயக்குநர் என்று மட்டுமே குறிப்பிட்டு பதில் அனுப்பியுள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. | வழக்கு எண் *23997* நாள் *18.01.2010* (திருமதி செல்லத்தாய் (vs) மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகம், தூத்துக்குடி*)* |
| 173. | தகவல்களை அளிக்கும்பொழுது பொதுத் தகவல் அலுவலரின் கையொப்பமோ, நாளோ குறிப்பிடாமல் தகவல் தரப்பட்டுள்ளதை ஆணையம் வன்மையாகக் கண்டிக்கின்றது. எதிர்காலத்தில் முறையாக அலுவலகக் கடிதத்துடன் (with covering letter) தகவல்களை அளிக்க வேண்டும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. | வழக்கு எண் *9855* நாள் *1.07.2011* (திரு ஏ. செல்வராஜ், (vs) வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், கோட்டூர் திருவாரூர் மாவட்டம்.*)* |
| 174. | The Public Information Officer and the Appellate Authority, must sign their replies themselves and not ask another official to do so on their behalf. This may be adhered to strictly. | (Central Information Commission decision No.CIC/OK/A/2008/00668 Dated 25-09-2008) |
| 175. | ஒரு தனிநபரின் வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை, அந்த தனிநபரைச் சார்ந்தே இருக்கும். அந்தத் தனி நபரின் வாழ்க்கை முடியும் நிலையில், அவரால் தொடுக்கப்பட்ட வழக்கும் அவருடனே முடிந்து விடும். இதுவே சட்டத்தின் நிலையாகும். எனவே, இவ்வழக்கில், வழக்கு தாக்கல் செய்த மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், இவ்வழக்கும் அவருடனே முடிகிறது. எனவே, மேற்கூறிய சட்டக் கோட்பாட்டின் அடிப்படையில், இவ்வழக்கு மேல் நடவடிக்கையின்றி இத்துடன் முற்றாக்கப்படுகிறது. | வழக்கு எண் *19513* நாள் *29.08.2013* (திரு.என்.செல்வராஜ் (vs) அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், சென்னை *600 026)* |



# மாதிரிக் கடிதங்கள்

## 1. உதவிப் பொதுத் தகவல் அலுவலரிடத்தில் அளிக்கப்படும் விண்ணப்பங்களை பொதுத்தகவல் அலுவலருக்கு மாற்றம் செய்யும்போது

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
ச. காயத்ரி,
உதவிப் பொதுத் தகவல் அலுவலர்/
உதவிக் கருவூல அலுவலர்,
சார்நிலைக் கருவூலம்,
ஒரத்தநாடு.

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
தஞ்சாவூர் 1 (இணைப்புடன்)

**கடித எண் 1212/அ2/2015 நாள் 07.09.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, ஆர். பிளாங்கி, பனையக்கோட்டை – சில தகவல்கள் கோரியது தொடர்பாக.
பார்வை: ஆர். பிளாங்கி, பனையக்கோட்டை என்பவரின் விண்ணப்பம் நாள் 04.09.2015

*****

தஞ்சாவூர் மாவட்டம், பனையக்கோட்டை கிராமத்தை சார்ந்த ஆர். பிளாங்கி என்பவரது விண்ணப்பம், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 5(2)–ன்படி தங்களுக்கு மாற்றம் செய்யப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதவிப் பொதுத் தகவல் அலுவலர்

## 2. தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப் பிரிவு 2(f)ற்குட்பட்டு மனுதாரர் தகவல்களை கோராத நிலையில்

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
திரு ந. இராஜராஜன்.
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம், பெரம்பலூர்.

பெறுநர்
திரு. ச. இராஜேந்திரன்,
எஃப் 28 தமிழ்நாடு அரசு
அலுவலர் குடியிருப்பு, ஷெனாய்
நகர், சென்னை–600030

**கடித எண் 5969/2015/அ1 நாள் 1.08.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.
பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 2.7.2015 மற்றும் 8.8.2015

*****

தாங்கள் கோரும் தகவல்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப் பிரிவு 2(f)ற்குட்பட்டு இல்லாததால் இது குறித்து தங்களுக்கு தகவல்கள் அளிக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ‘‘தகவல்’’ என்பது,

‘‘மின்னணுப் படிவம் எதிலும் வைத்து வரப்படும் பதிவுருக்கள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்னணு அஞ்சல்கள், கருத்துரைகள், அறிவுரைகள், செய்திக் குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஆணைகள், பயணக் குறிப்பேடுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், தாள் ஆவணங்கள், மாதிரிகள், மாதிரி உருவங்கள், புள்ளிவிவரக் குறிப்புகள் உள்ளடங்கலாக, எந்த வடிவத்திலும் உள்ள பொருள் எதுவும் என்று பொருள்படும். மற்றும் அப்போதைக்குச் செல்லாற்றலில் உள்ள பிற சட்டம் எதன்படியும் ஒரு பொது அதிகார அமைப்பினால் பெறக்கூடிய ஏதேனும் தனியார் குழுமம் தொடர்பான தகவல் எதுவும் என்றும் பொருள்படும்‘‘

எனவே, இனி வருங்காலங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 2(f)–ற்குட்பட்டு தகவல்களை கோருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் தகவல் அலுவலர்.

## 3. கூடுதல் கட்டணம் செலுத்தக் கோரும்போது

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
ச. உமா,
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
திருநெல்வேலி.

பெறுநர்
திரு. நா. பாஸ்கரன்,
கோவில்பாளையம்,
பொள்ளாச்சி (தாலுக்கா)

**கடித எண் 2894/த.உ.ச.(2)/2015 நாள் 21.08.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 10.07.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 16.07.2015)

*****

தாங்கள் கோரியுள்ள கோப்பின் நகல்கள் 25 பக்கங்களைக் கொண்டுள்ளதால், அவற்றினை நகல் எடுப்பதற்கு கட்டணமாக ஒரு பக்கத்திற்கு ரூ.2/– வீதம், ரூ.50/–ஐ (25 பக்கங்கள் x ரூ.2) கீழ்க்கண்ட வழிமுறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் செலுத்தி தாங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. பொதுத் தகவல் அலுவலர், மாவட்டக் கருவூலம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையாகவோ (Demand Draft) (அல்லது)
2. மேற்படி முகவரிக்கு எடுக்கப்பட்ட வங்கிக் காசோலையாகவோ (Bankers Cheque) (அல்லது)
3. நேரில் செலுத்துவதின் மூலமாகவோ (அல்லது)

கீழ்க்கண்ட அரசு கணக்குத் தலைப்பில் கரூவூலம் அல்லது பாரத வங்கியில் செலுத்தி அதன் ரசீதினை அசலாக அனுப்பி வைப்பதன் மூலமாகவோ

"0070. Other Administrative Services – 60 Other Services - 118 Receipts under Right to Information Act, 2005 - AA - Collection of fees under Right to Information (Fees) Rules 2005" [DPC 0070 60 118 AA 0005]

பொதுத் தகவல் அலுவலர்.

## 4. மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் வேறு துறை சார்ந்த தகவல்களாக இருந்தால் (கடிதம்-1)

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
ப. சண்முகநாதன்,
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
திண்டுக்கல்.

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
கிராம நிர்வாக அலுவலர்,
குருங்களூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**கடித எண் 1336/2015/அ3 நாள் 22.07.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 – திரு. எம். சிபி சக்கரவர்த்தி, திருப்பூர் மாவட்டம் – தகவல்கள் கோரியது – தொடர்பாக.

பார்வை: திரு. எம். சிபி சக்கரவர்த்தி, திருப்பூர் மாவட்டம் அவர்களின் விண்ணப்பம் நாள் 07.07.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 20.07.2015)

*****

பார்வையில் காணும் மனுதாரருடைய விண்ணப்பத்தின் நகல், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(3)–ன்கீழ் தங்களுக்கு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. மனுதாரர் கோரியுள்ள தகவல்களில் வரிசை எண் 7,9,15 ஆகியவை தங்களது பொது அதிகார அமைப்பினைச் சார்ந்ததால், அதுகுறித்த தகவல்களை மனுதாரருக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் தகவல் அலுவலர்.

## 5. வேறொரு பொது அதிகார அமைப்பிற்கு விண்ணப்பம் மாற்றம் செய்யப்பட்ட விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்கும்போது (கடிதம்-2)

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
ப. சண்முகநாதன்,
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
திண்டுக்கல்.

பெறுநர்
திரு. எம். சிபி சக்கரவர்த்தி
67 கொம்பேகவுடா தெரு,
திருப்பூர்.

**கடித எண் 1336/2014/அ3 நாள் 22.07.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 திரு. எம். சிபிசக்கரவர்த்தி. திருப்பூர் மாவட்டம் தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: 1. தங்களின் விண்ணப்பம் நாள் 07.07.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 20.07.2015).
2. பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட கருவூல அலுவலர் திண்டுக்கல் அவர்களின் கடித எண் 1336/2015/அ3, நாள் 22.07.2015

*********

பார்வையில் காணும் தங்களின் விண்ணப்பத்தில் கோரியுள்ள தகவல்களில் வரிசை எண் 7,9,15 ஆகியவற்றிற்கு தகவலகள் அளிக்கும் பொருட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(3)ன்படி தஞ்சாவூர் மாவட்டம், குருங்களூர் கிராம நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு பார்வை 2ல் காணும் கடிதத்தின்படி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**எனவே, இதுகுறித்து இனி வருங்காலங்களில் மேற்படி பொதுத் தகவல் அலுவலரையே தொடர்பு கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் தகவல் அலுவலர்.

குறிப்பு
**(மாற்றம் செய்யப்பட்ட அலுவலகத்திலிருந்து தகவல்கள் கிடைக்கப்பெறாவிட்டால் மனுதாரர் தன்னுடைய முதல் மேல்முறையீட்டு விண்ணப்பத்தினை கருவல அலுவலருக்கே அனுப்பிவைக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்க்க இவ்வரிகளை சேர்ப்பது அவசியமாகும்.)

## 6. ஒரே விண்ணப்பத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த தகவல்களை இணைத்துக் கோரும்போது

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
எஸ். ஜெகந்நாதன்.
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
தேனி.

பெறுநர்
திரு. பா. மோகன்ரங்கன்,
15 பெருமாள் கோவில் தெரு,
வேடப்பட்டி, கோயமுத்தூர்

**கடித எண் 3906/2015/அ2 நாள் 22.08.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 17.08.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 20.08.2015)

********

தாங்கள் கோரியுள்ள 10 தகவல்களும் வெவ்வேறு பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர்களிடம் உள்ளதாக அறிய வருவதால், கீழ்க்கண்ட ஒவ்வொரு பொதுத் தகவல் அலுவலருக்கும் தனித்தனியே உரிய விண்ணப்பக் கட்டணத்துடன் புதிதாக விண்ணப்பித்து தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1. வரிசை எண் 2,5,8 – பொதுத் தகவல் அலுவலர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், விழுப்புரம்.
2. வரிசை எண் 1,3,4 – பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், தஞ்சாவூர்
3. வரிசை எண் 6,9,10 – பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், விருதுநகர்
4. வரிசை எண் 7 – பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி.

பொதுத் தகவல் அலுவலர்.

## 7. தெளிவாகக் குறிப்பிடாமல் விண்ணப்பித்திருந்தால்

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
ஆர். பிரியதர்ஷினி,
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
கரூர்.

பெறுநர்,
எஸ். காவ்யா ஸ்ரீ,
2519 லெட்சுமி ராஜபுரம்,
பள்ளியக்ரஹாரம்,
தஞ்சாவூர்–3

**கடித எண் 3668/த.உ.ச./2015 நாள் 1.09.2015**

அம்மையீர்,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 25.08.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 27.08.2015)

*********

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப் பிரிவு 6(1)ன்படி மனுதாரர் தகவல் களை கோரும்போது தெளிவாகக் (specific) குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

பார்வையில் காணும் தங்கள் கடிதத்தில், தாங்கள் கோரியுள்ள அரசாணை குறித்த விவரங்களை தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பிக்காததால், அவ்வரசாணையின் நகலினை தங்களுக்கு வழங்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி வருங்காலங்களில் அரசாணை எண், நாள், வருடம் போன்ற விவரங்களை தெளிவாகக் குறிப்பிட்டு உரிய விண்ணப்பக் கட்டணத்துடன் புதிதாக விண்ணப்பிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுத் தகவல் அலுவலர்.

## 8. ஆவணங்களை பார்வையிட அனுமதிக்கும்போது

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

| | |
|---|---|
| அனுப்புநர்<br>ஆர். மிர்னாளினி,<br>பொதுத் தகவல் அலுவலர்/<br>கருவூல அலுவலர்,<br>மாவட்டக் கருவூலம்,<br>திருச்சி. | பெறுநர்<br>திரு. எம். பாலமுருகன்,<br>தலைவர், அட்டைக் கத்தி<br>அலுவலர் சங்கம்,<br>அத்திப்பாளையம் (அஞ்சல்)<br>கோயமுத்தூர் மாவட்டம். |

**கடித எண் 6678/த.உ.ச./2015 நாள் 20.08.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 12.08.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 18.08.2015)

********

பார்வையில் காணும் கடிதத்தில் தாங்கள் பார்வையிட விரும்பிய கோப்பு எண் 6484/அ2/2010ஐ கீழே குறிப்பிடப்பட்ட மூன்று நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை, பொதுத் தகவல் அலுவலர்/கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், திருச்சி அவர்களின் முன்பாக பார்வையிடுவதற்கும், குறிப்புகள் எடுத்துக்கொள்வதற்கும் அனுமதியளிக்கப்படுகிறது.

கோப்புகளை பார்வையிடுவதற்கு முதல் ஒரு மணி நேரம் இலவசமாகவும், அடுத்த ஒவ்வொரு மணி நேரத்திற்கும், தலா ரூ.5/ வீதம் தாங்கள் கட்டணமாக செலுத்த வேண்டும் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பார்வையிட அனுமதிக்கப்படும் நாட்கள் 20.08.2015 அல்லது 21.08.2015 அல்லது 22.08.2015.

பொதுத் தகவல் அலுவலர்.

## 9. விண்ணப்பத்தினை நிராகரிக்கும்போது

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

| | |
|---|---|
| அனுப்புநர்<br>ப. திருநாவுக்கரசு,<br>பொதுத் தகவல் அலுவலர்/<br>கருவூல அலுவலர்,<br>மாவட்டக் கருவூலம்,<br>திருவாரூர். | பெறுநர்<br>திரு. மா. சங்கரநாராயணன்,<br>21 காளிமுத்து பிள்ளை சந்து,<br>திண்டுக்கல்–1 |

**கடித எண் 5628/த.உ.ச./2015 நாள் 9.09.2015**

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 01.09.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 04.09.2015)

********

தாங்கள் கோரியுள்ள தகவல்களை வெளியிட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை (ஆணை எண் W.P. No.XXXX/2013) தடையுத்தரவு வழங்கியுள்ளதால், தாங்கள் கோரும் தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(தீ)–ன் கீழ் வழங்க இயலவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுகுறித்து தாங்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், இக்கடிதம் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள்ளாக கீழ்க்கண்ட அலுவலருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும்.

மண்டல இணை இயக்குநர்,
கருவூலம் மற்றும் கணக்குத் துறை,
திருச்சி 18

பொதுத் தகவல் அலுவலர்.

## 10. மூன்றாம் தரப்பினருக்கு அறிவிப்பு அளிக்கும்போது

### தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 11ன் கீழ் மூன்றாம் தரப்பினரின் கருத்து கோரும் படிவம்

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
திரு. எம். செந்தில்குமார்,
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
நாகப்பட்டினம்.

பெறுநர்
ச. மல்லிகைப்பூ,
கணக்கர்,
மாவட்டக் கருவூலம்,
நாகப்பட்டினம்–1

கடித எண் 1824/த.உ.ச./2015 நாள் 07.09.2015

அம்மையீர்,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 திரு. ஏ. இருதயராஜ், 18/2 திரு நகர், திருச்சி1, அவர்கள் கீழே கையொப்பமிட்டவரிடம் சில தகவல்கள் கோரியது மூன்றாம் தரப்பினரின் கருத்து கோருதல் தொடர்பாக.

பார்வை: திரு. ஏ.இருதயராஜ், திருச்சி1 அவர்களின் விண்ணப்பம் நாள் 01.09.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 03.09.2015)

********

பார்வையில் குறிப்பிட்ட விண்ணப்பத்தில் திரு. ஏ.இருதயராஜ், 18/2 திரு நகர், திருச்சி–1, அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன்படி தங்களுக்கு தொடர்புடைய கீழ்க்கண்ட தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

1.

2.

கீழே கையொப்பமிட்டவர் தமது அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் தங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க உள்ளார்.

எனவே, மேற்கண்ட தகவல்களை வெளியிடலாமா? அல்லது வேண்டாமா? என்பதற்கான தங்களது கருத்தினை தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 11ன் கீழ் இவ்வலுவலகத்திற்கு இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு எழுத்து வடிவிலோ அல்லது வாய்மொழியிலோ முறையீடு செய்ய வேண்டும்.

உரிய காலக்கெடுவிற்குள் தங்களது முறையீடு வரப்பெறவில்லையெனில், தாங்கள் கருத்து தெரிவிக்க எதுவுமில்லை எனக் கருதி தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005–ன்படி கீழே கையொப்பமிட்டவர் முடிவு எடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தகவல் அலுவலர்.

## 11. மேல்முறையீட்டு விண்ணப்பத்திற்கு பதில் அளிக்கும்போது கருவூலம் மற்றும் கணக்குத் துறை

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
எஸ். மகேஷ்வர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மண்டல இணை இயக்குநர்,
மண்டல இணை இயக்குநர் அலுவலகம்,
திருச்சி.

பெறுநர்
திரு. ஆர். முருகேசன்.
2818 மேல ஆவணி வீதி,
மதுரை.

<u>கடித எண் 6848/அ1/2015 நாள் 11.11.2015</u>

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: 1. தங்களது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான விண்ணப்பம் நாள் 05.09.2015

2. பொதுத் தகவல் அலுவலர்/கருவூல அலுவலர், தஞ்சாவூர் அவர்களின் கடித எண் 823/த.உ.ச./2015 நாள் 25.09.2015.

3. தங்களது மேல்முறையீட்டு விண்ணப்பம் நாள் 20.10.2015

******

பார்வை 1ல் காணும் தங்களுடைய விண்ணப்பம், அதனடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் தங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள், தற்போதைய தங்களது மேல்முறையீட்டு விண்ணப்பம் ஆகிய மூன்றும் என்னால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

தாங்கள் கோரியுள்ள அனைத்து தகவல்களுக்கும் பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி பொதுத் தகவல் அலுவலரால் தங்களுக்கு தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்து தங்களின் மேல்முறையீட்டு மனுவினை நிராகரிக்கிறேன்.

மேல்முறையீட்டு அலுவலர்.

## 12. தனி நபர் குறித்த தகவல்களை கோரும்போது (சொத்து விவர அறிக்கை போன்ற விவரங்கள்)

### கருவூலம் மற்றும் கணக்குத் துறை

அனுப்புநர்
ச. இராஜேந்திரன்,
பொதுத் தகவல் அலுவலர்/
கருவூல அலுவலர்,
மாவட்டக் கருவூலம்,
தஞ்சாவூர்.

பெறுநர்
திரு. பி. லோகநாதன்
25 காளிமுத்து பிள்ளை சந்து,
திண்டுக்கல்–1

<u>கடித எண் 6678/த.உ.ச./2015 நாள் 20.09.2015</u>

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 தகவல்கள் கோரியது தொடர்பாக.

பார்வை: தங்களது விண்ணப்பம் நாள் 12.09.2015 (இப்பொது அதிகார அமைப்பிற்கு கிடைக்கப்பெற்ற நாள் 16.09.2015)

********

பார்வையில் காணும் கடிதத்தில் தாங்கள் கோரியுள்ள தகவல்கள் மூன்றாம் தரப்பினரின் தனி நபர் குறித்த தகவல்கள் என்பதாலும், இதேபோன்ற நிகழ்வில் மாண்பமை உச்சநீதிமன்றம் வழக்கு எண் S.L.P. (CIVIL) No.27734 of 2012 நாள் 03.10.2012 (GIRISH RAMACHANDRA DESHPANDE vs CENTRAL INFORMATION COMMN. & Ors) என்ற வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையிலும், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 8(1)(j)ன் கீழ் வழங்க இயலவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்முறையீட்டு அலுவலர்.

# குறிப்புகள்